E-mail : omsakthieditorial@gmail.com

ஓம் சக்தி

செப்டம்பர் 2020
விலை ரூ.15

நிறுவனர் :
நா. மகாலிங்கம்



அயோத்தியில் இராமர் கோவில்



சுரங்கம்

டாக்டர் நா. மகாலிங்கம்

பஞ்சாயத்து ஒன்றியங்களுக்குப் பரிபூரண அதிகாரங்கள்

பஞ்சாயத்து என்கிற கிராம நிர்வாகத்தை காந்திஜி ‘கிராமக் குடியரசு’ என்றே கூறினார். நமக்குத் தெரிந்ததெல்லாம் இந்தியக் குடியரசு என்ற பிரம்மாண்டம் பற்றித்தான். அந்தக் குடியரசிலுள்ள அனைத்து அம்சங்களும் இந்தச் சிறு அமைப்புக்குள் இடம்பெற வேண்டும் என்பதுதான் காந்திஜியின் திட்டம்.

இந்தச் சிறு கிராமக் குடியரசு சரிவரச் செயல்படத் தொடங்கிவிட்டால், பாரதக் குடியரசு சிறப்பாகச் செயல்படும் என்பது நிச்சயம். வேரில் பிழை என்றால் அது மொத்த விருட்சத்திற்குமே ஆபத்து.

பஞ்சாயத்துக்களைப் பலப்படுத்த வேண்டும் என்ற காந்திஜியின் கருத்தை வழிமொழிந்து வரவேற்று வரலாற்றுக்கு அருட்செல்வர் வழங்கிய கருத்துக்களை இம்மாதச் ‘சுரங்கம்’ பகுதியில் வாசகர்களுக்கு வழங்குகிறோம்.

– இ.ஆர்.

இந்தியாவில் காந்திஜி கண்டறிந்த இரண்டு துறைகள் முக்கியமானவை. ஒன்று விவசாயம். ஆண்டில் 365 நாட்களுக்கும் அதில் வேலையில்லை. 120 நாட்களுக்கு மட்டுமே வேலை கிடைத்தது. மீதி 8 மாதக்காலம் கிராமப்புற ஏழை விவசாயிகள் வேலையில்லாமலும், ஊதியமில்லாமலும் வறுமையில் வாடினார்கள்.

அவர்களுடைய வறுமையையும் போக்க வேண்டும். அதே நேரத்தில் விதேசித் துணிகளையும் விலக்க வேண் டும் என்றுதான் அந்த ஏழை விவசாயிகளுக்கு ராட்டை நூற்பை உபதொழிலாகக் காந்திஜி அறிமுகப் படுத்தினார்.



காந்திஜி

அந்த விவசாயத் துறையில் எக்காரணம் கொண்டும் ஆலைகளில் இருப்பதைப் போல, எந்திரங்கள் புகுந்துவிடக் கூடாது என்று எச்சரித்தார். அப்படி எந்திரமயமானால், அந்த விவசாயிகளுடைய தினசரி வேலைகள் பறிபோய்விடும் என்று அச்சப்பட்டார்.

இதேபோல, இன்னொரு துறை நெசவுத்துறை. அந்த நெசவுத்துறையில் ராட்டை நூலினைத் தறிகளில் நெய்து ஆடை உற்பத்தி செய்யப்பட்டது. நூற்பையும் நெசவையும் எந்திரங்கள் செய்யுமானால், அதிகமானவர்களுக்கு வேலை கிடைக்காது. துணி உற்பத்திதான் அதிகரிக்கும்.



காந்திஜி காலத்தில் விவசாயம், நெசவு என்ற இந்த இரண்டு துறைகளும்தான் இந்தியாவில் அதிகமான மக்களுக்கு வாழ்வாதார வேலை வாய்ப்புகளைத் தந்து உதவிய துறைகள்.

இன்றைக்கு அந்த விவசாயத் துறையில் உழவு செய்வதற்கு டிராக்டர், விதைப்பதற்கு எந்திரம், அறுவடைக்கு எந்திரம், களையெடுக்க எந்திரம் என எல்லா விவசாயப் பணிகளுக்கும் எந்திரங்கள் வந்துவிட்டன.

இதேபோல, நெசவுத் துறையில் நவீன நூல் ஆலைகளும், ஜவுளி ஆலைகளும் மும்பை, அகமதாபாத் முதலிய நகரங்களில் அப்போதே பெருகின. பாரம்பரியமிக்க நெசவும் விவசாயமும் நலிந்துவிட்டன.

அனைவருக்கும் தேவையான உடைகளைக் கதர் மூலம் மட்டுமே தர



முடியாது என்பதைச் சுதந்திரத்திற்கு முன்பு 1946–ஆம் ஆண்டிலேயே காந்திஜி புரிந்து கொண்டிருந்தார். அதனால், கைத்தறியையும், விசைத்தறியையும் கதரோடு இணைத்துத் துணிப் பற்றாக்குறையைச் சமாளிப்பதை அப்போதே அவர் வரவேற்றார்.

அந்நிலையிலும்கூட, எக்காரணம் கொண்டும் அகமதாபாத் ஜவுளி ஆலைகள் உற்பத்தி செய்யும் மில் துணிகளை உள்நாட்டில் விற்பனை செய்துவிடக் கூடாது என்றே பேசிவந்தார்.

ஏனெனில், வெள்ளை முதலாளிகளை விரட்டிவிட்டுப் பழுப்பு முதலாளித்துவத்திற்காக இந்தியா சுதந்திரம் பெறவில்லை என்றே கூறினார். ஆனால் இன்றைக்கு நிலைமை என்ன?

எந்த நவீனப் பஞ்சாலைத் துறையை காந்திஜி எதிர்த்தாரோ, அந்த நவீனப் பஞ்சாலைத் துறையே தாராளமயப் பொருளாதாரத்தால் இந்தியாவில் நலிந்துவிட்டது. ஏராளமான ஆலைகள் மூடப்பட்டுவிட்டன. அவற்றை மீட்டுருவாக்குவதற்கான செயல்திட்டம் எதுவும் அரசிடம் இல்லை என்பது ஏமாற்றமளிக்கிறது.

இதேபோல, இந்தியா பாரம்பரிய விவசாய நாடு என்ற சிறப்பையும் இழந்து, இப்போது சேவைத்துறை நாடாக ஆகியிருக்கிறது. இன்சூரன்ஸ் துறை, ரயில்வே துறை, தகவல் தொழில் நுட்பத் துறை, வர்த்தகம், அரசு நிர்வாகம் முதலியன வளர்ச்சியடைந்து, சேவைத்துறை நாடாக இந்தியா மாறி வருகிறது.

தற்போது இந்தியாவில் விவசாயத் துறை *42* சதவிகிதமாகவும், சேவைத் துறை *56* சதவிகிதமாகவும் மாறியுள்ளது.

அதுமட்டுமல்ல. விவசாயத்தில் வேலை செய்வதற்கு ஆள் பற்றாக்குறையும் ஏற்பட்டுவிட்டது. அதனால் சிறு, குறு விவசாயிகள்கூட எந்திரங்களைச் சார்ந்தே நிற்க வேண்டியதாக உள்ளது.

சொந்தமாக அவர்களால் பண்ணை எந்திரங்களைப் பராமரிக்க முடியாது என்பதால், தமிழ்நாடு மாநில அரசு அவர்களுக்குக் குறைந்த வாடகையில் அந்த எந்திரங்கள் கிடைப்பதற்கு இப்போது உதவி வருகிறது.

இந்தியாவிற்குச் சுதந்திரம் பெற்றுத் தந்த காந்திஜியின் இதுபோன்ற பல கனவுகள் பலிக்கவில்லை. அவருடைய சர்வோதய இயக்கம் சமுதாயம் முழுவதிலும் வியாபிக்கவில்லை. ‘கடையனுக்கும் கடைத்தேற்றம்’ (Unto this Last) என்ற ஜான் ரஷ்கின் எழுதிய புத்தகத்தைப் படித்த பின்தான் காந்திஜிக்குச் சர்வோதயச் சிந்தனையே உதயமானது.

அந்தச் சிந்தனையில் சிகரத்தை எட்டிய காந்திஜி, ஒரு நீதிபதிக்கும், முடி திருத்துபவருக்கும் ஊதியத்தில் வேறுபாடு இருக்கக்கூடாது என்ற முடிவுக்கு வந்து, தயக்கமில்லாமல் அதைக் கூறவும் செய்தார்.

ஒரு நிறுவனத்தில் வேலை செய்யும் கடைசி ஊழியனின் சம்பளத்தைப் போல, அந்த நிறுவனத்தின் தலைமை நிர்வாகியின் சம்பளம் 10 மடங்குகளுக்கு அதிகமாக இருக்கக்கூடாது என்ற வரையறையும் செய்தார்.

இன்றைக்கும் தனியார் தொழில் நிறுவனங்களிலும், அரசுத் தொழில் நிறுவனங்களிலும் உள்ள தலைமை நிர்வாகிகள், உயர் அதிகாரிகள் கோடிக்கணக்கில் சம்பளம் பெறுவதற்குச் சட்டமே அனுமதிக்கிறது. அந்த நிர்வாகிகள்தான் 5 நட்சத்திர ஓட்டல்களையும், விமான சேவையையும் அதிகமாகப் பயன்படுத்துகிறவர்கள்.

அதிகாரங்களைப் பரவல்படுத்துவதற்காகக் காந்திஜி கூறியபடி, பஞ்சாயத்துகளுக்குப் பதிலாகப் பஞ்சாயத்து யூனியன்களுக்குத்தான் அதிகாரங்களை வழங்கியிருக்க வேண்டும்.

கிரேக்க நகரங்களைப் போல, பஞ்சாயத்து யூனியன்களையும், நகராட்சிகளையும் ஆக்கியிருக்க வேண்டும்.

பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகாரங்களை வழங்கத்தான் ராஜீவ் காந்தி விரும்பியிருந்தார். அதிகார வர்க்கம் அவருக்குத் தவறாக வழிகாட்டி, கிராமப் பஞ்சாயத்துகளுக்கு அதிகாரங்களைத் தரும் சட்டத்தை உருவாக்கி விட்டார்கள். அந்தக் குறைபாடு இனியாவது திருத்தப்பட வேண்டும்.

கல்வி, சுகாதாரம், சாலை, தெரு விளக்கு, சிறு அணை கட்டுதல், பராமரித்தல் முதலிய நிர்வாக அதிகாரங்களையும் நிதி அதிகாரங்களையும் உள்ளாட்சிகளுக்குத் தந்துவிட்டால், அந்தப் பஞ்சாயத்து யூனியன்கள் மாவட்ட அலுவலகத்தையோ, மாநில அரசையோ திட்ட அங்கீகாரத்திற்காக எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லாமல் போய்விடும்.

இன்றைக்கு ஏற்பட்டுள்ள சிக்கலுக்குக் காரணம், உள்ளாட்சிகளிடம் இருக்க வேண்டிய அதிகாரங்கள் மத்திய அரசிடமும், மாநில அரசுகளிடமும் குவிந்து கிடப்பதுதான்.

இதை மாற்றி அமைப்பதற்கான சட்டத் திருத்தங்களை நிறைவேற்றிய பிறகும்கூட, அதில் சொல்லப்பட்டுள்ள 29 அதிகாரங்களும் உள்ளாட்சிகளுக்கு முழுமையாக இன்றுவரை தரப்படவில்லை.

மாநில அரசு தனது வரி வருவாயில் முன்பு 8.5 சதவிகிதம் தந்தது. இப்போது 9 சதவிகிதம் மட்டும் உள்ளாட்சிகளுக்குத் தர முன்வந்துள்ளது. 30 சதவிகிதம் கோரப்படுகிறது.

நமது மாநில அரசின் வருவாய் ரூ. 61 ஆயிரம் கோடி. இதில் 9 சதவிகிதம் என்பது ரூ. 5,500 கோடிதான்.

இந்த ரூ. 5,500 கோடியைத் தமிழ்நாட்டிலுள்ள 385 பஞ்சாயத்து யூனியன்களுக்கும், 150 நகராட்சிகளுக்கும் 10 மாநகராட்சிகளுக்கும் வழங்கினால், என்ன பெரிய அபிவிருத்தி வேலை



களை அவை செய்ய முடியும் என்பதை எண்ணிப் பாருங்கள். நிச்சயமாகப் பெரிய அபிவிருத்திகளைச் செய்ய முடியாது.

20 ஆண்டுகளுக்கு முன்பு பொள்ளாச்சி நாச்சிமுத்து பாலிடெக்னிக் வளாகத்தில் தமிழ்நாட்டிலுள்ள 32 சர்வோதய சங்கங்களையும் அழைத்து மூன்று நாள் மாநாடு ஒன்றை நடத்தினேன்.

மதுரை மாநாட்டிற்கு இலங்கையிலிருந்து டாக்டர் அரியரத்னே வந்துள்ளதைப் போல், அந்த மாநாட்டிற்கு என்னுடன் படித்த பொறியாளரும், அறிஞருமான சேலம் இராமலிங்கம் அவர்கள் எங்கள் அழைப்பின்பேரில் வருகை தந்தார். அவர் பங்களாதேசத்திற்குரிய கல்வித் திட்டத்தைத் தயாரித்துத் தந்த



வர். இதேபோல பல வெளி நாடுகளுக்கும் பொருளாதார ஆலோசனை வழங்கியவர்.

சர்வோதய சங்கங்களின் சரிவிற்கான காரணங்களைப் பற்றி எடுத்துக்கூறி, அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளையும் அவர் கூறினார்.

கதர் உற்பத்தி மட்டுமே சர்வோதயத்திற்கு லாபம் தராது. அதிகப் பேர்களுக்கு வேலையும் தராது. வேலை தர வேண்டுமானால் – லாபம் சம்பாதிக்க வேண்டுமானால், சர்வோதய சங்கங்கள் பலவிதமான நுகர்பொருள் உற்பத்தியில் போட்டி போட்டுக் கொண்டு ஈடுபட வேண்டும்.

பேனா, பென்சில், பற்பசை, பிரஷ், ஊதுபத்தி, வாசனைப்பவுடர், காய்கறிகள், தின்பண்டங்கள், கடிகாரம், வீட்டுப் பாத்திரங்கள் இன்னும் இதுபோன்ற கைவினைப் பொருட்கள் பலவற்றை உற்பத்தி செய்ய வேண்டும் என்று – இன்றைக்கு அல்ல – 20 ஆண்டுகளுக்கு முன்பே பொள்ளாச்சி சர்வோதய மாநாட்டில் குறிப்பிட்டேன்.

ஊழியர்களுடன் அந்த மாநாட்டிற்கு வந்திருந்த 32 சர்வோதய சங்கத் தலைவர்களும் அந்தப் பேச்சைக் கேட்டார்களே தவிர, அதைச் செயல்முறைப் படுத்தவில்லை.

அதுமட்டுமல்ல. பிரதமர் ராஜீவ் காந்தி 2 குதிரைச் சக்தியுள்ள எந்திரங்களைக் குடிசைத் தொழில்களிலும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று 1990–இல் ஒரு சட்டமே இயற்றினார்.

அந்தச் சட்டத்தின் அடிப்படையில் எந்த ஒரு குடிசைத் தொழிலையும் செய்ய எந்த ஒரு சர்வோதய சங்கமும் முன்வரவில்லை.

பற்பசையைக்கூட கோல்கேட் முதலான பன்னாட்டுக் கம்பெனிகள் தான் தயாரிக்கின்றன. இந்த உற்பத்தியில் சர்வோதய சங்கங்கள் அல்லவா ஈடுபட்டிருக்க வேண்டும்! இதனால் தான் சர்வோதய சங்கங்கள் பலவீனமடைந்துவிட்டன. இதிலும் காந்தியக் கனவு பலிக்கவில்லை.

தேசிய மயமாக்கப்பட்ட பெரிய வங்கிகள், கார்ப்பரேட் கம்பெனிகளுக்கே தொடர்ந்து கடன் தருகின்றனவே தவிர, அவற்றின் நிதிக் கொள்கையை அவை மாற்றிக் கொள்ளவேயில்லை.

மளிகைக்கடை, பழக்கடை, ஜவுளிக் கடை, சிற்றுண்டி விடுதிகள், சலூன், சலவை நிலையம் இவையும் வியாபார நிறுவனங்கள்தான். வங்கிகள் இவற்றிற்குக் கடன் வழங்குவதில்லை. இந்த நிலையில், சில்லரை வணிகத்திலும் வெளிநாட்டு மூலதனத்தை மத்திய அரசு அனுமதிக்க விரும்புகிறது.

இந்தியாவிற்குக் கதிமோட்சம் ஒன்று கிடைக்க வேண்டுமென்றால், நமது அரசியல் சட்டத்தையே அடியோடு மாற்றிவிட வேண்டியதுதான்.

எச்.ஜி. வெல்ஸ் Rights of Man என்ற அவருடைய புத்தகத்தை காந்திஜிக்கு அனுப்பி, அபிப்பிராயம் கேட்டிருந்தார்.

அதற்குப் பதில் எழுதிய காந்திஜி, "நீங்கள் அனுப்பியுள்ள புத்தகத்தில் மனிதனின் உரிமைகளைப் பற்றிப் பேசியிருக்கிறீர்கள். கடமைகளைப் பற்றித்தான் நீங்கள் எழுதியிருக்க வேண்டும். கடமைகளைச் சரிவரச் செய்ய ஒருவரைத் தயார் செய்துவிட்டால், உரிமைகள் அவருக்குத் தானாகவே வந்துவிடும்.

கடமைகளைச் செய்யாமல் உரிமைகளைக் கேட்பது சரியானது அல்ல" என்று பதிலளித்தார்.

காந்திஜி சொன்ன அந்தக் கருத்தின்படி பார்த்தால், நமது அரசியல் சட்டம் ஆரம்பத்திலேயே அடிப்படை உரிமைகளைத்தான் பட்டியலிட்டிருக்கிறது. கடமைகளைப் பற்றிப் பேசவே இல்லை. அரசியல் சட்டத்தின் பலவீனமாக இன்றும் இது நீடிக்கிறது.

நமக்குத் தேவை காந்தியத் தாக்கத்தைக் கொண்ட அரசியல் சட்டம்தான். அதுதான் நமது நாட்டின் சகலவிதமான தீமைகளுக்கும் தீர்வு சொல்லக் கூடியதாக அமையும். ●



சொ.சொ.மீ. சுந்தரம்

தீவினை மாற்றும் திருமந்திரம் 11

ஏறத்தாழ எழுபதாண்டுகளுக்கு முன்னால் வெளிவந்த திரைப்படப் பாடல்களில் பெரும் பாலான பாடல்கள் சமுதாய முன்னேற்றத்திற்கு வழிகாட்டக்கூடிய சிறப்பான பாடல்களாக இருந்தன. அவற்றுள் ஒரு பாடல்...

“நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி – இந்த நாடே இருக்குது தம்பி” என்பது.

இப்பாடல் திருமணமானவர்கள் பிள்ளை பெற்றால் மட்டும் போதாது. அப்பிள்ளைகள் நல்ல பிள்ளைகளாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் நாடு முன்னேறும் என்ற கருத்தை வலி யுறுத்துகிறது.

“இன்று குழந்தைகள் நீங்கள் – எனினும் இனி இந்த நாட்டினை ஆளப் பிறந்தீர்” என்று ஒரு கவிஞர் பாடியது போலச் சின்னஞ்சிறு கைகளை நம்பித்தான் வருங்காலச் சமுதாயம் வரலாறு படைக்கும் என்று எண்ணிக்கொண்டு நாம் வாழ் கிறோம். தம் பொருள் என்று எதையாவது நாம் சொல்ல வேண்டுமானால், அது செல் வமோ, மாளிகையோ அல்ல. அறிவார்ந்த மக்களைத்தான் குறிக்கும். அதனால்தான் திருவள்ளுவர்,

“தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்” (63)

என்று பாடினார். நன்மக்களைப் பெற்றால் ஏழு பிறவியிலும் துன்ப மில்லை. திருமணம் செய்து கொள்வதன் நோக்கம் மனம் போன போக்கில் வாழ்வதன்று. நன்மக்களைப் பெறுவதுதான்.

“மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு” (60)

என்பது வள்ளுவர் காட்டிய வழி. நன்மக்கள் என்றால் யார்? அவர்கள் எப்படி இருக்க வேண் டும்? என்ற வினாக்களுக்குக் கீழ்க்கண்டவாறு விடை தரலாம்.

1. அறிவுள்ள பிள்ளைகளாய் இருக்க வேண் டும். மந்த புத்தி உள்ள பிள்ளைகளாக இருக்கக் கூடாது.
2. உடல் வளத்தோடு கண், காது, வாய் எல்லாம் நன்றாகச் செயல்படும்படி இருக்க வேண்டும்.
3. நற்சிந்தனை உள்ள பிள்ளைகளாக இருக்க வேண்டும்.
4. குட்டையாகவோ, முடமாகவோ, கூனாகவோ இருக்கக்கூடாது.
5. போதுமான காலம் நோய் நொடியின்றி வாழக்கூடிய பிள்ளைகளாக இருக்க வேண்டும்.

“இப்படிப் பிள்ளைகள் பிறப்பது நம் கையில் இல்லை. எல்லாம் விதிப்படி நடக்கும்” என்று பலபேர் கூறுகிறார் களே இது சரியா?

“பண்டம் வாய்க்கும் படுதலை
வாய்க்கும் பாக்கிய வானுக்கு;



திருமூலர்

தொடர்ச்சி : 16–ம் பக்கம்

தொண்டால் பழுத்த சுவாமி விமூர்த்தானந்தர்

சென்னை, மயிலாப்பூர் ராமகிருஷ்ண மடத்தின் மேலாளராகவும், நூறாண்டு கண்ட 'ராமகிருஷ்ண விஜயம்' பத்திரிகையின் ஒப்பற்ற ஆசிரியரா கவும் சிறப்புடன் பணியாற்றி வந்தவர் சுவாமி விமூர்த்தானந்தர். அவர் சென்ற ஜூலை 18–ஆம் தேதி, தஞ்சை ராமகிருஷ்ண மடத்தின் புதிய தலைவராகப் பொறுப்பேற்றார்.

சென்னையில் சாதனை புரிந்த சுவாமிகள் தஞ்சையிலும் முத்திரை பதிக்க இறையருள் கூட்டி வைக்கும் என்பதே சுவாமிகளை அறிந்தவர்களின் பிரார்த் தனையாகும். அவரை நெருங்கி அறிந்தவர் மறைந்த அருட்செல்வரின் தனிச் செயலர் சி. ரவீந்திரன். சுவாமிகளைப் பற்றிய அவரின் மலரும் நினைவுகள் வாசிக்கச் சுவையானவை.

– இ.ஆர்.

மயிலாப்பூர் ராமகிருஷ்ண மிஷன் பள்ளியிலும் கல்லூரியிலும் படித்தேன். 1956 – 57ஆம் ஆண்டு முதல் ராம கிருஷ்ண மடத்தின் பஜனைகளிலும் விழாக்களிலும் மாணவனாகக் கலந்து கொண்டது எனது பாக்கியம்.

பட்டதாரியான எனக்கு (டைப் பிஸ்ட்) தட்டெழுத்துப் பணி சென்னை யில் கிடைத்தது ஆச்சரியமல்ல. அது அருட்செல்வர் அலுவலகத்தில் கிடைத் ததுதான் ஆச்சரியம். அருட்செல்வரின் பாத நிழலில் 43 ஆண்டுகள் பணியாற் றியதற்கு எனது முன்னோரின் புண்ணி யமே காரணமாகும்.

எனது நெடிய பணிப் பயணத்தில் அருட்செல்வரின் அடுத்த தலைமுறை யான அவருடைய திருமகன்கள் மூவ ருக்கும் பணியாற்றுபவனாகத் தொடர் கிறேன். தட்டெழுத்துப்பணி எனது தலை எழுத்தையே மாற்றிப் போட்ட தற்குக் காரணம் எனது நதிமூலம் ராமகிருஷ்ண மடமும் அருட் செல்வர் அலுவலகமும்தான்.

அருட்செல்வருக்கும் ராம கிருஷ்ண மடத்திற்குமான தொடர்பு தெய்வத்தால் தீர்மானிக்கப்பட்டதாகும். திருமடத்தின் திருவிழாக்களில் அருட்செல்வர் கலந்து கொள்வதும், அருட்செல்வரின் விழாக் களில் திருமடத்தின் சுவாமிகள் கலந்து கொள்வதும் இயல்பாக நடந்து வந்தன.

சி. ரவீந்திரன்



மயிலாப்பூர் மடத்தின் புதுக் கோயி லுக்கு அருட்செல்வர் ரூபாய் பத்து லட்சம் நன்கொடை அளித்தார். மடத் தின் பத்திரிகைகளுக்கும் பல நூல் களுக்கும் அருட்செல்வர் வழங்கிய நிதி உதவிகள் ஏராளம். அவற்றில் ஆங்கிலத் தில் திருமந்திரம், பெரியபுராணம் மற் றும் சித்திரப் பெரியபுராணம், சித்திரத் திருவிளையாடல் புராணம் நூல்கள் பொக்கிஷங்கள்.

அருட்செல்வர் எப்போதும் சொல் வார், "துறவிகள் சாதனைகள் செய் தால் இடம் மாற்றப்படுவார்கள்" என்று. "இடம் மாறாமல் இருக்க விரும்பினால் சாதுவாக மட்டுமே இருக்க வேண்டும். சாதனைகள் இருக்கக்கூடாது. சுவாமி கள் எவருமே அப்படிச் சும்மா இருப் பவர்கள் அல்ல. அவர்களுக்குப் புகழ் வருகிறது என்றால் அங் கிருந்து புறப்பட நேர்ந்து விடும். இப்படித்தான் ஹைதரா பாத்தில் பணி செய்த சுவாமி ரங்கநாதானந்தர் கல்கத்தா பேலூர் மடத்திற்கு மாறுதல் ஆனார்" என்பார்.

மடத்தில் படித்தவனாக இருந்ததால் எனக்கு அங்கிருந்த சுவாமிகள் ராகவேஷானந்தா, தபஸ்யானந்தா, ஜனானந்தா, தன்மயானந்தா, அபிராமாநந்தா, சுவாமி கமலாத்மானந்தா ஆகியோருடன் நெருங்கிய பழக்கம் உண்டு. அவர்களில் சுவாமி விமூர்த்தானந்தரின் ஆசிகள் எனது தினசரி நிகழ்வானது. எங்கள் வீட்டிற்கு சுவாமி கமலாத்மானந்தாவும், விமூர்த்தானந்தாவும் எழுந்தருளியதை என்னால் மறக்க முடியாது.

சுவாமி விமூர்த்தானந்தாவின் வெற்றிக்கு மூலதனம் அவருடைய தூய்மையான பணிதான். மடத்தின் மேலாளராகவும், ராமகிருஷ்ண விஜயம் இதழின் ஆசிரியராகவும் பணியாற்றிய சுவாமிகளுக்கு, அவருடைய முன்னோடி சுவாமி கமலாத்மானந்தா ஆவார். அப்பத்திரிகை கமலாத்மானந்தாவால் எவரெஸ்ட் சிகரத்தைத் தொட்டது என்றால், சுவாமி விமூர்த்தானந்தரால் வானத்தின் உச்சிக்கே சென்றது. ராமகிருஷ்ண விஜயம் மாத இதழ்களில் நூற்றாண்டு தாண்டிய பத்திரிகை.

சுவாமி விமூர்த்தானந்தரைத் தஞ்சைக்கு வழியனுப்பும் விழா நிகழ்ச்சியில் கலைமகள் ஆசிரியருடன் நானும் கலந்து கொண்டதை இறையருள் என்றே கூறலாம்.

சுவாமி விமூர்த்தானந்தரின் தஞ்சைப் பணிகளுக்கு முப்பெரும் சக்திகளான பகவான் ராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீ சாரதாதேவி, சுவாமி விவேகானந்தர் ஆகியோர் தோன்றாத் துணையாக நிற்கின்றனர்.

அதனால் தஞ்சை இராமகிருஷ்ண மடம் ஆன்மிகத்தளத்தில் முப்போகம் விளையும் ஞானபூமியாகக் குணமாற்றம் பெறும் என்பதே எனது நம்பிக்கையாகும்.



மகாகவி பாரதியார் சாதுக்களைப் பற்றிக் கூறியபோது, சாதுக்கள் ஞானத்தை வளர்ப்பார்கள் என்று எதிர்பார்த்தால் பலர் தங்கள் தொந்தியைத்தான் வளர்த்தார்கள் என்றார்.

ராமகிருஷ்ண மடத்தின் சாதுக்கள் எல்லோருமே ஞானத்தை வளர்ப்பதில் முன்னிலை வகிப்பவர்கள். பகவான் ராமகிருஷ்ண இயக்கத்தை நிறுவிய சுவாமி விவேகானந்தரின் உடல் பலத்தைப் பலரும் அறிவார்கள். பயில்வான் சுவாமி என்ற பெயரும் அவருக்கு உண்டு. ஞானத்தை வளர்க்க உடல் ஆரோக்கியம் முக்கியம் என்பார் விவேகானந்தர்.



சென்னை மயிலை ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி விமூர்த்தானந்தர் அவர்களுடன் 'கலைமகள்' பத்திரிகை ஆசிரியர் திரு. எஸ். சங்கரசுப்பிரமணியன், சென்னை ராமலிங்கர் பணிமன்றச் செயலாளரும் அருட்செல்வரின் தனிச் செயலாளருமான திரு. சி. ரவீந்திரன் ஆகியோர்.

கட்டுரை

18

பழகிப் பார்த்ததில் இவர்கள்...

கோவை ஞானி


கோவை ஞானி

அப்போது நான் மேல்நிலைப்பள்ளி மாணவன். புதுக் கவிதைகள் பற்றி ஒரு பரபரப்பான பட்டிமன்றம் கோவையில் நடந்தது. அரங்கம் நிரம்பி யிருந்தது. அதன் அமைப்பாளர்கள் எனக்கு அறிமுக மானவர்கள்.

அவர்களுடன் நின்று பேசிக் கொண்டிருந்தபோது வாசலில் ஒரு பரபரப்பு. நடுத்தர வயதினர் ஒருவர், இரண்டு மூன்று பேர்களுடன் வந்து கொண்டி ருந்தார். வெள் ளைச் சட்டை, வெள்ளை வேட்டி. சிவந்த நிறம். நிதான நடை.



மரபின் மைந்தன் முத்தையா

அமைப்பாளர்கள் விரைந்து சென்று வரவேற்றனர். கூட்டத்தில் பலரும் எழுந்து வணங்கினர். யார் என்று விசாரித்தேன். இவர்தான் ‘கோவை ஞானி’ என்றார்கள்.

கல்லூரிக் காலம். பி.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரியில் இளங்கலை சமூகவியல் படித்துக் கொண்டிருந் தேன். என் வகுப்புத் தோழி யசோதா வின் தந்தை திரு. கோவிந்தன் ‘சமு தாயம் பதிப்பகத்தின்’ உரிமையாளர்.

மறுநாள் மாலை தங்கள் வீட்டிற்கு க.நா. சுப்ரமணியம் வரப் போவதாகவும் அவர் வருகையையொட்டி ஏற்பாடு செய்திருக்கும் இலக்கியச் சந்திப்புக்கு நானும் வரவேண்டும் என்றும் யசோதா அழைத்ததன் பேரில் சென்றிருந்தேன்.

அங்கே இரண்டாவது முறையாக கோவை ஞானி அவர்களைப் பார்த் தேன். அவருக்கு அப்போதே பார்வை மங்கலாகிக் கொண்டிருந்தது.

அதன்பின்னர் நேரடி அறிமுகம் ஏற்பட்டது. நிறைய நிகழ்ச்சிகளில் சந்தித்துப் பேசியிருக்கிறோம். இளம் படைப்பாளர்கள் இருக்கிறார்கள் என்றால் கூடுதல் கூர்மையுடன் உரை யாற்றுவார்.

“கவிஞன்னா எதுக்கு 3 வேளை சாப்பிடணும்?

இரண்டு வேளை சாப்பிட்டால் பத்தாதா” என ஓர் அரங்கில் அவர் ஆவேசமாகக் கேட்டது நினைவிருக் கிறது.


என்னுடைய இரண்டாவது புத்தகம் “கொஞ்சம் நிறைய உண்மை கள்” எனும் கவிதை தொகுப்பு 1997–இல் வெளிவந்தது. அந்த நூல் படிகளை, மதிப்புரைக்காக என்கிற குறிப்புடன் சுற்றுத் தாள் ஒட்டி இதழ் களுக்கும் இலக்கியவாதிகளுக்கும் அனுப்பியிருந்தேன்.

கோவை ஞானியிடம் நூலை நேரில் கொண்டு போய்க் கொடுத் தேன். அந்தத் தாளை நீக்கிவிட்டுக் கொடுக்க வேண்டும் என்றுகூட எனக்குத் தோன்றவில்லை. பார்வை யிழந்த நிலையில் எழுந்து நின்று கையை உயர்த்தி, தலைக்குமேல் இருக்கிற பரணிலிருந்து ஒரு பிளேடு எடுத்துப் பக்குவமாக அந்தத் தாளைக் கிழித்து அகற்றினார். அந்தச் சித்திரம் இன்னும் என் மனதில் அப்படியே பதிந்து இருக்கிறது.

அருந்ததி ராய் எழுதியிருந்த ‘காட் ஆஃப் ஸ்மால் திங்ஸ்’ வெளி வந்த நேரத்தில் அதைப் படித்துவிட்டு, நண்பர்கள் சிலருடன் அந்த நாவல் குறித்துப் பேசிக் கொண்டி ருந்தேன்.

அங்கிருந்த யாரோ ஒருவர் கோவை ஞானி அவர்களின் முதல் வட்டத் தில் இருப்பவர் போலும். இரண்டொரு நாட்களில் ஞானி தொலைபேசியில் அழைத்தார்.

“காட் ஆஃப் ஸ்மால் திங்ஸ் படிச்சிட்டீங்களாமே! அதுல உங்களுக்கு என்ன பிடித் தது?” என்று மெல்லப் பேச்சுக் கொடுத்துப் பேசத் தூண்டினார். பேசப் பேச “இது போதாது, இன்னும் ஆழமாச் சொல்லுங்க” என்று சொன்னபடியே ஒரு கட்டத்துக்குப் பிறகு “இதுவரை சொன்னதை எல்லாம் அப்படியே ஒரு கட்டுரையா எழுதிக் கொடுங்க” என்று சொல்லி விட்டுத் தொலைபேசியை வைத்து விட்டார்.





பின்னர் அருந்ததிராய் பற்றி அவர் வெளியிட்ட கட்டுரைத் தொகுப்பு ஒன்றில் அந்தக் கட்டுரை இடம்பெற்றி ருந்தது.

எதிர்க்கருத்துகள் பேசப்படும் போதெல்லாம் அவர் முகத்தில் ஒரு மந்தகாசமும் குறும்புப் புன்னகையும் விரியும்.

கோவையில் ஒரு விழாவில் பல நூல்கள் ஒரே மேடையில் அறிமுகப் படுத்தப்பட்டன. கோபி கிருஷ்ணன் எழுதிய ‘டேபிள் டென்னிஸ்’ எனும் நூலுக்கு நான் திறனாய்வுரை நிகழ்த் துவதாக ஏற்பாடாகியிருந்தது. அது வரை நூலாசிரியர் கோபி கிருஷ்ணனையோ, பதிப்பாளர் தமிழினி வசந்தகுமாரையோ நான் சந்தித்ததில்லை.

அவர்களுக்கும் என்னைத் தெரியாது. மரபின் மைந்தன் என்ற பெயரைப் பார்த்த மாத்திரத்தில் யாரோ பழைய தமிழ்ப் பண்டிதர் வரப் போகிறார். இந்தப் புத்தகத்தைக் கிழி கிழி என்று கிழிக்கப் போகிறார். ஏற்கனவே மென்மையான கோபிகிருஷ்ணன் இன்னும் நொந்து போகப் போகிறார் என்றெல்லாம் தமிழினி வசந்தகுமார் பயந்து கொண்டு இருந்தாராம். அந்த அமர்வுக்கு ஞானி தலைவர்.

அந்த அமர்வு தொடங்கும் முன்னர் கோவை ஞானி என்னிடம் "நூல் எப்படியிருக்கு?" என்றார். "எனக்குப் பிடிச்சிருக்கு" என்றேன். அவர் உடனே "என்ன பிடிச்சிருக் குங்கறீங்க? எனக்கு ஒண்ணும் பிடி படலை. அப்படீன்னா உங்களுக்கும் அந்த கிறுக்குப் பிடிச்சிருக்குன்னு நெனைக்கறேன்" என்று சலிப்புடன் சொன்னார்.

இதையே தன் தலைமை உரை யிலும் சொன்னார். என்னுடைய விரி வான உரையில் சிக்கலான சரடு களுக்குக் கீழே அந்த நூல் எதை நோக்கிப் பயணம் செய்கிறது என்பதை நான் புரிந்து கொண்ட விதத்தில் விளக்கினேன். கோபி கிருஷ்ணன் முகத்தில் புன்னகை. தமி ழினி வசந்தகுமார் முகத்தில் நிம்மதி. கோவை ஞானிக்கோ ஆனந்தம்.

சிக்கலான படைப்பு ஒன்றுக்குள் புகுந்து, ஒரு கூர்மையான வாசகன் கதையைக் கண்டறிந்து சொல்வது இப்படித்தான் என்று சொன்னதோடு, அந்தப் பேச்சையும் கட்டுரையாகத் தரச்சொல்லி அவருடைய இதழில் வெளியிட்டார்.

எனக்கிருக்கும் சமய இலக்கியப் பின்புலம் அவருக்கு நன்றாகத் தெரி யும். சந்திக்கும்போதெல்லாம் அந்தத் தளத்தில் நின்றும் விரிவாக உரை யாடுவார். அவர் எழுதிய நூல்களில் ஒன்றாகிய 'கடவுள் ஏன் இன்னும் சாகவில்லை' வெளியீட்டு விழாவில் என்னைப் பேச அழைத்திருந்தார்.

சிந்தனைப்போக்கில் நிறைய வேறு பாடுகள் உண்டு என்பதால் நான் முதலில் தயங்கினேன். "நூலைப் படித்துவிட்டு உங்களுக்கு என்ன தோணுதோ பேசுங்க.. முழுச் சுதந் திரத்தோடு பேசுங்க" என்றார்.

இளம் வயதில் அவருக்கு ஏற்பட்ட சில ஆன்மீக அனுபவங்களை அந்த நூலில் விவரித்திருந்தார். நான் அவற் றைக் குறிப்பிட்டு "இந்த அனுபவங் களை வளர்த்தெடுத்தால், உங்களுக்கு மிகவும் நன்மை செய்து இருக்கும். உங்களுக்கு இன்னும் அந்த ஈடுபாடு இருந்தால், ஒரு நல்ல குருவை நீங்கள் அணுகத் தயங்கக் கூடாது" என்று நான் சொன்னதும் அவருடைய நண் பர்கள் சிலர் கோபம் கொண்டனர். ஆனால் அவர் அதே மந்தகாசத் துடன் கூடுதல் புன்னகையுடன் கேட்டுக் கொண்டார்.

இருபதாண்டுகளுக்கு முன்னர் ஒரு முறை என்னைத் தொலைபேசியில் அழைத்து வெவ்வேறு விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தவர் "ஆமாம்! இப்ப ஜக்கி வாசுதேவ் கூட இருக் கீங்களாமே" என்றார். "நான் இரண்டு மூன்று பிறவிகளாகவே அவர் கூடத்தான் இருக்கிறேன்" என்று பதில் சொன்னதும் அவருக்கே உரிய சிரிப்புடன் கேட்டுக் கொண்டார்.

உரையாடல்களில் நான் வாய் விட்டுச் சிரித்தால், தோளில் கை வைத்து "அடேயப்பா! ரொம்பச் சிரிக் கிறீர்களே" என்பார்.

கோவையில் குண்டுவெடிப்புச் சம்பவம் நடந்தபோது, என்னுடைய நண்பர் திரு. கோவை ரமேஷ் தனி ஒரு மனிதராகத் தன் காரை எடுத்துக் கொண்டு போய்ப் பலரைக் காப் பாற்றுவது, அரசு மருத்துவமனைக்குச் செவிலிகளை வீட்டிலிருந்து அழைத்து வருவது, தங்கச்சங்கிலியைக் கழற்றிக் கொடுத்து மருத்துவமனைக்கு மருந்து வாங்கிக் கொடுப்பது, ஒரே இரவில் பலரையும் அழைத்து வந்து ரத்த தானம் செய்ய வைப்பது என நிறைய நற்பணிகளை மேற்கொண்டார்.

கோவை ஞானி அவரைச் சந்திக்க விருப்பம் தெரிவித்தார். அவர் வீட்


டுக்கு ரமேஷை அழைத்துப் போயிருந்தேன். ரமேஷை அருகே உட்கார வைத்துக் கொண்டு அவர் முதுகைத் தடவி "எவ்வளவு பெரிய உடம்பு" என்று வாய்விட்டுச் சொன்னார். பின்னர் அந்தச் சந்திப்புப் பற்றியும் ரமேஷ் பற்றியும் ஒரு விரிவான சித்திரத் தைத் தன் இதழில் எழுதி னார்.

திலகவதி ஐபிஎஸ் அவர்கள் சாகித்திய அகாதமி பரிசு பெற்றமைக்காக கோவை விஜயா பதிப்பகம் பாராட்டு விழா நடத்தியது. விழாவிற்குக் கோவை ஞானிதான் தலைமை. நான் உரையாற்ற அழைக்கப்பட்டிருந்தேன். தலைமை உரையை நிறைவு செய்தபோது, ஞானி "எழுத் தாளர் திலகவதி பற்றி நாம் அனைவரும் பேசுவோம். ஆனால் மரபின்மைந்தன் முத்தையா இவரைப் பற்றி மட்டும் பேசினால் போதாது. பெரியபுராணத்தில் வரும் திலகவதியாரைப் பற்றியும் பேச வேண்டும்" என்றார்.

அவர் சொன்ன வண்ணமே நான் பெரியபுராணப் பாடல்களை மேற் கோள் காட்டி, அந்தத் திலக வதியாரைப் பற்றியும் பேசினேன். கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்.

எங்காவது நிகழ்ச்சிகளுக்குப் போய்விட்டு வீடு திரும்ப வேண்டும் என்றால், மெல்லிய குரலில் "முத்தையா, கார்லதானே வந்திருக் கீங்க." "ஆமாம் அய்யா, சேர்ந்து போய்விடலாம்" என்பேன்.

'இதற்கு முன்னால் இறைவனா யிருந்தேன்' எனும் என் கவிதைத் தொகுப்பைப் பாராட்டி ஒரு கட்டுரை


க.நா. சுப்பிரமணியம்


ம.ரா.போ. குருசாமி


சாலமன் பாப்பையா

எழுதியிருந்தார். கவிதை இலக்கியம் பற்றிய அவருடைய தொகுப்பிலும் அந்தக் கட்டுரை இடம் பெற்றிருக்கிறது.

'திருக்கடவூர்' என்னும் என்னுடைய ஐம்பதாவது நூலைப் படிக்கச் சொல்லிக் கேட்டுவிட்டு நேரில் வரச் சொல்லி யிருந்தார். அந்த நூலில் வரக்கூடிய புனைவுப் பகுதியில் குறிப்பிடப்படும் சந்திரமௌளீஸ்வரன், காத்தாயி எனும் பாத்திரங் கள் பற்றி நீண்ட நேரம் விவாதித்தார்.

தமிழறிஞர் ம.ரா.போ. குருசாமி அவர்களுக்கு நடந்த பாராட்டு விழாவில் உரை நிகழ்த்த பேராசிரியர் சாலமன் பாப்பையா வந்திருந்தபோது, "ஏனுங்க பாப்பையா, நீங்க வருஷத் துக்கு 300 கூட்டம் பேசுறீங் களாமே" என்று ஞானி கேட்க, "இல்லை ஞானி, 350" என்று பாப்பையா பதில் சொல்ல, ஒரே சிரிப்பலை.

இப்படி நினைவுத் தளத்திலிருந்து அவரைப் பற்றி விரிவாகச் சொல்ல ஆயிரக்கணக்கானவர்களிடம் ஆயிரக் கணக்கான சம்பவங்கள் இருக்கும். நேரெதிர்க் கருத்துக் கொண்டவர் களிடம்கூட அவரால் மணிக் கணக்கில் சிநேக பாவத்துடன் உரையாட முடியும். தன் படைப்பு களாலும் தன் நல்லியல்புகளாலும் கோவை ஞானி தலைமுறைகள் கடந் தும் வாழ்வார்.

●



துருக்கியில் மசூதியாக்கப்பட்ட அருங்காட்சியகம்

சென்ற ஜூலை 15 அன்று உலக அளவில் பரபரப்பாகப் பேசப் பட்டு விவாதங்களை ஏற்படுத்திய ஒரு நிகழ்வு, துருக்கி நாட்டில் ஹேகியா சோஃபியா என்ற அருங்காட்சியகம் மசூதியாக மாற்றப்பட்ட செயலாகும்.

பொதுவாக, ஓர் அருங்காட்சியகம் அது அமைந்துள்ள நாட்டின் மிகப்பெரும்பான்மை மக் களின் சமய வழிபாட்டிடமாக மாற்றப்பட்டிருந்தால் அது பற்றிய விவாதம் பெரிதாக எழுந்திருக்காது.

ஆனால், இந்த ஹேகியா சோஃபியா அருங் காட்சியகம் மிகவும் புகழ்பெற்றது. அதன் தொன்மை கருதி அது யுனெஸ்கோவால் வர லாற்றுச் சின்னமாக அறிவிக்கப்பட்டுப் பராமரிக் கப்பட்டு வந்தது.

இந்த அருங்காட்சியகத்தின் வரலாற்றைப் பார்த்தால், அது 900 ஆண்டுகள் கிறித்தவ மாதா கோவிலாகவும், பின்னர் 482 ஆண்டுகள் மசூதி யாகவும், 85 ஆண்டுகள் அருங்காட்சியகமாகவும் இருந்துள்ளது. இதில் சமயப் பூசல்களால் இந்தக் கட்டடம் பல முறை தாக்குதலுக்கு உள்ளாகி யுள்ளது.

இந்தத் தேவாலயம், கி.பி. 325–ஆம் ஆண்டு பைசனைட் சாம்ராஜ்யத்தின் முதல் கான்ஸ்டன் டைன் மன்னரால் கட்டப்பட்டதாகக் கூறப் படுகிறது. அதன்பின் இரு முறை அழிக் கப்பட்ட பின்னர் ஜஸ்டினியன் எனும் மன்னரால் கி.பி. 532–இல் தொடங்கி மிகவும் பிரம்மாண்டமானதாகக் கட்டப்பட்டது.

இந்தப் பணி 5 ஆண்டுகள் நடைபெற்று, கி.பி. 537–ஆம் ஆண்டு நிறைவு பெற்றது. அப் போது இதுதான் மிகவும் பெரிய தேவாலயமாக விளங்கியிருக்கிறது.

கி.பி. 7–ஆம் நூற்றாண்டில் இஸ்லாம் சமயம் தோன்றிய பின்னர் ஜெரூசலம் இஸ்லாமிய ஆட்சி யின்கீழ் வந்தது. அப்போது இந்தத் தேவால யத்தைக் காக்கப் பல முறை போர்கள் நடை பெற்றுள்ளன.

கிறித்தவர்கள் வென்றபோது மசூதிகளும், யூத வழிபாட்டுத் தலங்களும் அழிந்தன.

அதேபோல் இஸ்லாமியர்கள் – யூதர்களின் கூட்டுப்படை வென்ற போது தேவாலயங்கள் அழிக்கப் பட்டன.

அத்தகைய தாக்குதல்களில் குறைந்தது 5 முறை ஹேகியா சோஃபியா தேவாலயமாகவும், மசூதியாகவும் மாற்றங்களைச் சந்தித்துள்ளது.

1453–ஆம் ஆண்டு இஸ் லாமியர்களின் ஒட்டோமோன் சாம்ராஜ்யம், பைசனைட் சாம் ராஜ்யத்தைத் தோற்கடித்தது. அப்போது வெற்றி பெற்ற இஸ்லாமியப்படையின் தளபதி யான முகம்மது என்பவர், ஹேகியா சோஃபியா தேவால யத்தை மசூதியாக மாற்றினார். அப்போது அதனைப் புனரமைத்து மிகவும் அழகு மிக்கதாக ஆக் கினார்.

அதன் பின்னர் 1935 வரை அது மசூதியாகவே இருந்தது. முதல் உலகப் போருக்குப் பின்னர் துருக்கியில் பதவிக்கு வந்த முஸ்தாபா கமால் அட்டாடுர்க், துருக்கியின் சிறப்பு அடையாளமாக இந்த மசூதியை மாற்ற எண்ணி னார். அதன்படி, அதனை ஓர் அருங்காட்சியமாக மாற்றினார்.

இஸ்தான்புல் செல்லும் அனைத்துச் சுற்றுலாப் பயணிகளும் அதனைப் பார்வையிடும் வகையில் அதனை அனைவர்க்கும் திறந்து வைத்தார். அது கிறித்தவமும், இஸ்லாமும் இணைந்த ஒரு சமய நல்லிணக்கச் சின்னமாக இதுவரை விளங்கி வந்தது.

தற்போதைய துருக்கி அதிபர் திரு. எர்டோகன், இப்போது அதனை மீண்டும் மசூதி யாக மாற்றி, வெள்ளிக்கிழமையன்று தொழுகை யில் தானும் கலந்து கொண்டு தொழுகை செய்தார்.

இச்செயல் மேலை நாடுகளில் கடும் அதிர்ச்சியையும், மதச்சார்பற்ற நடுநிலைவாதி களின் மனதில் கடும் வெறுப்பையும் ஏற்படுத்தி யுள்ளது. அதிபர் எர்டோகன் துருக்கியை ஓர் இஸ்லாமிய அடிப்படைவாத நாடாக ஆக்க முற்பட் டுள்ளதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். ஏனெனில், அவர் அதிபராகப் பொறுப்பேற்ற பின் னர், துருக்கியின் மதச்சார்பின்மை கைகழுவப் பட்டு வருகிறது.

அதேவேளை, துருக்கியில் அதிபர் எர்டோக னின் அரசியல் செல்வாக்குச் சரிந்து வருவதை மாற்றித் தனது செல்வாக்கை அதிகரிக்கச் செய்யும் முயற்சியாகவும், நாட்டின் பொருளாதாரச் சரிவு, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய வற்றால் மக்கள் மனதில் ஏற்பட்டிருக்கும் அதிருப் தியைத் திசைதிருப்பும் தந்திர நடவடிக்கை யாகவும் இச்செயல் கருதப்படுகிறது.

மேலை நாடுகளின் இரு பெரும் சமயங் களான கிறித்தவம், இஸ்லாம் இரண்டிற்கு மிடையே எத்தகைய தாக்கத்தை இந்நிகழ்வு ஏற்படுத்தும் என்பது போகப்போகத் தெரியும். ஆனால், இரு சமயங்களுக்கிடையேயான நல்லி ணக்கம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை மறுக்க இயலாது.

– ந.நி.

ஒரு சுவையான நிகழ்வு

பல்லாண்டுகளுக்கு முன்பு மேலைச் சிவபுரி சன்மார்க்க சங்க ஆதர வில் பெரு விழாவிற்கு ஏற்பாடாகியிருந்தது. திரு. ரா. ராகவையங்கார், திரு. சரவண முதலியார், திரு. ரா.பி. சேதுப்பிள்ளை ஆகியோர் விழாவில் பங்கேற்றனர்.

திரு. அ.ச. ஞானசம்பந்தம் அவர்களும் அவ்விழாவில் கலந்து கொண்டார். அவரது தந்தையார் திரு. சரவண முதலியார் முதலில் பேசி னார். பெரிய புராணத்தில் வெள்ளானைச் சருக்கத்திலுள்ள முதற்பாடலை எடுத்துக் கொண்டு எத்தனை விதமாகப் பொருள் செய்யலாம் என்று முக்கால் மணி நேரம் விரிவாகப் பேசினார்.

அடுத்துத் திரு. ரா. ராகவையங்கார் பேச்சு. திரு. அ.ச. ஞான சம்பந்தம் அவர்களின் தந்தை திரு. சரவண முதலியார் பேசி முடித்துவிட்டுத் தனது இடத்திற்கு மெதுவாகத் திரும்பினார். மேடைக்குச் செல்லவேண்டிய திரு. ரா. ராகவையங்கார், சரவண முதலியாரைக் கட்டிப்பிடித்துக் கொண்டு பலமான குரலில் “முதலியார், வைணவத்திற்கு ஒரு சேக்கிழார் இல்லாமல் போய்விட்டாரே என்பதை இப்போது பெரிதாக உணர்கிறேன்” என்று கூறினார்.

இதைக் கேட்ட சரவண முதலியார் பூரிப்படைவதை உணர்ந்த திரு. ரா. ராகவையங்கார் “முதலியார், எங்களுக்குப் பெரியவாச்சான் பிள்ளை கிடைத்ததுபோல, உங்களுக்கு ஒருவர் இல்லை என்பதை மறந்துவிட வேண்டாம்” என்று கூறிவிட்டுப் பேசுவதற்கு மேடைக்குப் போய்விட்டார்.

தகவல் : **புலவர் ப. சோமசுந்தர வேலாயுதம்**

7–ம் பக்கத் தொடர்ச்சி

பெண்டு வாய்க்கும் பிள்ளை வாய்க்கும் புண்ணிய வானுக்கு''

என்று நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் வீடு களில் ஓர் அனுபவ மொழி கூறப்படுகிறதே, அது சரியா? நல்ல பிள்ளை பெறுவது நம் கையில் இல்லையா? என்று பல சந்தேகங்கள் தோன்று கின்றன. இவை அனைத்தையும் தீர்த்து வைக் கிறார் சித்தர் திருமூலர். அவர் பாடிய திருமந்திரம் இரண்டாம் தந்திரம் இவற்றிற்கெல்லாம் விடையளிக்கிறது. கருமூலம் கடக்கக் கன்னித்தமிழ் தந்த திருமூலர் வழியில் சென்று இவற்றிற்கு விடை கண்டு ஞான ஒளி பெறுவோம்.

1. தாய் வயிற்றில் மலச்சிக்கல் இருந்து சரியாக மலம் போகாமல் அடைத்துக் கொண்டி ருக்கும் பொழுது குழந்தை உற்பத்தியானால், அது மந்த புத்தியுள்ளதாகப் பிறக்கும். பேறு காலம் முழுவதிலும் தாய்க்கு மலச்சிக்கல் இருக்கக்கூடாது.

2. இதுபோலக் குழந்தை உற்பத்தியில் தொடங்கிப் பிள்ளை பிறக்கும்வரை தாய்க்குச் சிறுநீர் சரியாகப் பிரியாமல் அடைக்கக் கூடாது. அடைத்தால் குழந்தை ஊமையாய்ப் பிறக்கும்.

3. தாய்க்கு மலச்சிக்கலும் இருந்து சிறுநீர்ச் சிக்கலும் இருந்தால், இரு கழிவுகளும் ஒத்துத் தடைப்படுவதால், கரு நெருக்கடிக்கு உள்ளாகிக் கண்பார்வை இழக்கும். இக் கருத்துக்களை,

“மாதா உதரம் மலம்மிகின் மந்தன்ஆம்
மாதா உதரம் சலம்மிகின் மூங்கைஆம்
மாதா உதரம் இரண்டொக்கில் கண்ணில்லை
மாதா உதரத்தில் வந்த குழவிக்கே” (475)

என்கிறார் திருமூலர்.

தன் மகனைச் சான்றோன் எனக் கேட்கு முன்னால் அந்தத் தாய் எவ்வளவு முன் எச்சரிக் கையோடு இருக்க வேண்டும் என்பது இப் பொழுது தெரிகிறதல்லாவா! முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாள் சுமந்த அன்னை வயிற்றில் நாம் இந்த மலத்திற்கும் சலத்திற்கும் நடுவில்தான் இருந்து பிறந்திருக்கிறோம். இதனாலேயே,

“மாதா உடல்சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவும் கைசலித்து விட்டானே – நாதா
இருப்பையூர் வாழ்சிவனே இன்னுமோர் அன்னை
கருப்பையூர் வாராமல் கா”

என்று பட்டினத்தடிகள் பாடியதுபோலப் பரம ஞானிகள் இப்பிறவி ஆட்கொண்டு இனிப் பிறவா மல் காக்க வேண்டும் என்று இறைவனிடம் வேண்டுவது எவ்வளவு அவசியம் என்பது புரிகிறதல்லவா!

4. நம் உடலில் பத்து வாயுக்கள் உள்ளன. இவை பல வேலைகளைச் செய்கின்றன. இவற்றுள் பிராணவாயு எனப்படும் உயிர்க்காற்று, ஆண் உடம்பில் இருந்து விந்தணுக்களை உந்திப் பெண் உடம்புக்குள் தள்ளுகிறது. அப் பொழுது இந்த உயிர்க்காற்று ஆற்றலுடன் பாய்ந்து ஐந்து மாத்திரையளவு ஓடினால், அந்தக் குழந்தை நூறாண்டு வாழும். நான்கு மாத்திரை ஓடினால் எண்பதாண்டு. மூன்று மாத்திரையானால் அறுபதாண்டு எனக் கணக்கிட வேண்டும்.

யோகிகள் இதையறிந்து பாய்ச்சுவார்கள். அடிக்கடி மனைவியோடு சேர்ந்தால் இந்தக் காற்றின் வேகம் குறையும். குழந்தையின் ஆயுளும் குறையும். இதனால்தான் அந்தக் காலத்தில் நாள், நட்சத்திரம் பார்த்து மனைவியோடு கூட வேண்டும் என்றார்கள். குழந்தையின் ஆயுளைத் தீர்மானிக்கும் பாடல்,

“பாய்ந்தபின் அஞ்சுஓடில் ஆயுளும் நூறாகும்
பாய்ந்தபின் நாலோடில் பாரினில் எண்பதாம்
பாய்ந்திடும் வாயும் பகுத்தறிந்து இவ்வகை
பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலும் ஆமே” (473)

என்பதாகும்.

இப்பாடலில், மாத்திரை நேரம் என்பது கைவிரல் இரண்டைச் சேர்த்து ஒரு சுண்டு சுண்டும் நேரம். அதாவது, ஒரு நொடியாகும். பிராணாயாமம் செய்து காற்றை ஒழுங்குபடுத்தும் யோகிகளுக்கு இது கைவந்த கலையாகும். எப் பொழுதும் மூச்சுக்காற்றை நன்றாக இழுத்து விட்டுப் பயிற்சி பண்ணினால் நம்மாலும் இது முடியும்.



இப்பாடலுக்கு வேறொரு பொருளும் கூறப்படுகிறது. சுக்கிலம் பாய்ந்தபின் ஐந்து விரற்கடை ஓட்டம் இருக்குமானால், குழந்தையின் ஆயுள் நூறாண்டாகும். நான்கு விரற்கடையானால், ஆயுள் எண்பதாண்டாகும் என்றும் பொருள் கூறப்படுகிறது. பிராணவாயுவின் ஆற்றலைப் பொறுத்தே சுக்கிலத்தின் ஓட்டம் அமையும் என்பதால், இரண்டு வழியான பொருள்களும் ஒன்றையே கூறுகின்றன என்பது தெரிகிறது.

5. இந்தப் பிராணவாயு குழந்தையின் ஆயுளைத் தீர்மானிப்பதோடு மற்றொரு செயலையும் செய்கிறது. இந்த வாயுவின் வேகம் இந்த அளவு இருக்க வேண்டும் என்று ஒரு கணக்கு இருக்கிறது. அந்த அளவைவிட வேகம் குறைந்தால், குழந்தை குட்டையாகப் பிறக்கும். மிகவும் மெல்லிதாகப் பாய்ந்தால், முடமாகப் பிறக்கும். இரண்டுக்கும் இடைப் படுமானால், குழந்தை கூனாகப் பிறக்கும். இவையெல்லாம் ஆணின் சுக்கிலத்திற்குத் தானே தவிர, பெண்ணின் சுரோணிதத் திற்கல்ல. சுரோணித முட்டை நகருமே தவிரப் பாய்வதில்லை. இதை,

"பாய்கின்ற வாயுக் குறையில் குறளாகும்
பாய்கின்ற வாயு இளைக்கில் முடமாகும்
பாய்கின்ற வாயு நடுப்படின் கூன்ஆகும்
பாய்கின்ற வாயு மாதர்க்கில்லை பார்க்கிலே" (474)

என்கிறார் திருமூலர்.

6. இந்தச் செயல்கள் அனைத்தையும் தாய், தந்தையர் அறிவதில்லை என்பதையும் திருமூலர் குறிப்பிடுகிறார்.

"இட்டான் அறிந்திலன் ஏற்றவள் கண்டிலள்
தட்டான் அறிந்தும் ஒருவர்க் குரைத்திலன்
பட்டாங்கு சொல்லும் பரமனும் அங்குளன்
கெட்டேன் இம்மாயையின் கீழ்மை எவ்வாறே" (480)

என்று பாடுகிறார் அவர்.

கருவை இட்ட தந்தைக்குத் தெரியவில்லை. ஏற்றுக்கொண்ட தாயும் காணவில்லை. அக் கருவைப் பத்து மாதம் வளர்த்து, தங்கத்தை நகை யாகச் செய்து தரும் தட்டான் போன்ற பிரம்ம தேவன் அறிந்திருந்தாலும் சொல்லவில்லை. அந்தப் பிரமனுக்கு ஆணையிடும் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானும் ஒன்றும் சொல்லாமல் அங்கேயே இருக்கிறான். இந்த மாயையின் செயல் எவ்வளவு கீழானதாயிருக்கிறது என்று வியக்கிறார் திருமூலர்.

7. இனி, அழகுமிக்க குழந்தை எப்படிப் பிறக் கிறது என்பதையும் திருமூலர் விளக்குகிறார். கலவிக் காலத்தில் மூச்சுக்காற்று வலம், இடம் என்னும் வகையில் இருவருக்கும் ஒத்திருந்தால், அப்பொழுது உருவாகும் குழந்தை அழகாகப் பிறக்கும். காற்றில் ஏற்றத்தாழ்வுகள் இருந்தால் அழகு குறையும். சில சமயம் குழந்தையே பிறக்காமலும் போக லாம் என்பதை,

"கொண்டநல் வாயு இருவர்க்கும் ஒத்தெழில்
கொண்ட குழவியும் கோமளம் ஆயிடும்
கொண்டநல் வாயு இருவர்க்கும் குழறிடில்
கொண்டதும் இல்லையாம் கோல்வளை
யாட்கே" (477)

என்று பாடுகிறார் திருமூலர்.

கணவனும், மனைவியும் ஒத்த அன்புள்ளவர் களாக இருந்து ஒருவரையொருவர் காதலித்தால், மூச்சுக்காற்றும் ஒத்துப்போய் அழகான பிள்ளை பிறக்கும். தமிழர்கள் இக்காதலை அன்பின் ஐந்திணை என்றார்கள். ஆண், பெண் சேர்க் கைக்கு வலுவான அன்பே அடிப்படை. கட்டாயப் படுத்தினால் அது கருவையும் பாதிக்கும். கண வன், மனைவி கூடுவதையும் தமிழ்ச் சான் றோர்கள் 'அற்புறு புணர்ச்சி' என்று பாராட்டி னார்கள். "அற்புறு புணர்ச்சியின்மை அயல் அறி யாமை வாழ்ந்தார்" என்பது திருநீலகண்டர் புராணத்தில் சேக்கிழார் பாடும் செந்தமிழ்த் திருப்பாடல்.

8. சுக்கிலமும் சுரோணிதமும் கலந்த உடம்பு உயிருக்கு வீடாக அமைக்கப்படுகிறது. சுக்கிலம் உயிர் அல்ல. உயிருக்கான உறை என்பர் சான்றோர். பஞ்சபூதங்களும் சித்தம்,

மனம், புத்தி என்ற கரணங்களும் இந்த உடலோடு இணைக்கப்படுகின்றன. இதற்குப் 'புரியட்ட காயம்' என்று பெயர்.

“புரியட்ட காயம் புலப்பட எனக்குத் தெரி யெட்டு நிலையும் தெரிசனப் படுத்தி” என்பது விநாயகர் அகவல். வினைக்குத் தக்கவாறு உடம்பு கொடுக்கப் படுகிறது. இந்த வீட்டில் இருந்துதான் உயிர் இன்ப துன்பங்களை அனுப விக்கிறது. முந்திய பிறவிகளில் செய்த வினைப் பதிவுகள் இந்த உடம்பில் இணைக்கப்படுகின்றன.

அதைப்பொறுத்து இந்தப் பிறவியில் இந்த உயிர் எப்படிப் பண்பட வேண்டும், பண்படும் காலம் எவ்வளவு? அனுபவிக்க வேண்டிய போகங் கள் யாவை? என்று எல்லாம் கருவில் உயிர் நுழைந்ததும் தீர்மானிக்கப்படுகின்றன. எந்தச் சூழலில் இவ்வுயிர் வாழ வேண்டும் என்பதும் வினைகளுக்கேற்றவாறு விதிக்கப்படுகிறது. இவற்றைப் பண்புறுதல், பண்புறு காலம், பார்மிசை வாழ்க்கை என்று பேசுகிறார் திருமூலர்.

“இன்புறு காலத்து இருவர் முன்பு ஊறிய
துன்புறு பாசத் துயர்மனை வானுளன்
பண்புறு காலமும் பார்மிசை வாழ்க்கையும்
அன்புறு காலத்து அமைத்து ஒழிந்தானே” (447)

என்பது திருமந்திரம்.

9. குழந்தையின் குணம் எப்படி அமைகிறது என்பதையும் திருமூலர் விளக்குகிறார். பொது வாகச் சத்துவம், ராஜசம், தாமசம் என்று மூன்றுவகைக் குணங்கள் நம்மிடம் உள்ளன. செயல் ஏதும் இன்றி அமைதியாயிருப்பது சத்துவ குணம். இதை உருத்திரமூர்த்தி என்று அடையாளப்படுத்துவதுண்டு. செயல் ஊக்கம் செய்யும் குணம் ராஜச குணம். இதைத் திருமால் என்பர். செயலைத் தடை செய்யும் குணம் தாமச குணம். இதைப் பிரமன் என்பர். இந்த அடிப்படையில்,

“ஏற எதிர்க்கில் இறையவன் தானாகும்
மாற எதிர்க்கில் அரியவன் தானாகும்
நேரொக்க வைக்கின் நிகர்போகத் தானாகும்
பேரொத்த மைந்தனும் பேரர சாளுமே” (452)

என்கிறார் திருமூலர்.

சுக்கிலம் – விந்து, சுரோணிதம் – நாதம். இரண்டின் கலப்பையும் பொறுத்துக் குழந்தையின் குணம் தீர்மானிக்கப்படும். அபானவாயு என்ற மலக்காற்று கீழ்நோக்கி வந்து பிராணவாயுவை எதிர்த்தால், சுக்கிலத்தின் ஆற்றல் குறைந்து விடும். சுரோணிதத்தின் ஆற்றல் கூடும். அப்பொழுது குழந்தை சாத்வீக குணத்தோடு பிறக்கும். அதை இறையவன் என்று குறிப்பிடு கிறார் திருமூலர். பிராணவாயுவின் ஆற்றல் அதிகமானால், சுக்கிலம் கூடிச் சுரோணிதம் குறை யும். அப்பொழுது ரஜோ குணத்தோடு குழந்தை பிறக்கும். இதை 'அரி' என்கிறார் திருமூலர்.

சுக்கிலமும் சுரோணிதமும் சமமான ஆற்ற லோடு இணைந்தால், தாமச குணத்தோடு குழந்தை பிறக்கும். இதை போதத்தான் (பிரமன்) என்கிறார் திருமூலர்.

சில சமயங்களில் சத்துவ குணம் மேலோங்கிய குழந்தை உலகப் பற்றுகள் நீங்கி, இறைவனையே நினைத்துப் பேரானந்தம் பெற்றுச் சிறப்புறும். இதைப் பேரரசாளும் என்கிறார் திருமூலர். இக்குழந்தை ஆணாகவோ, பெண் ணாகவோ இருக்கலாம்.

நாம் இதுவரையில் குழந்தை பிறப்பதற்கு அப்பாவும், அம்மாவும்தான் காரணம் என்று எண்ணிக் கொண்டிருந்தோம். இப்பொழுதுதான் புரிகிறது. இவர்கள் கருவிகள், இறைவன்தான் காரணம் என்று.

அதனால்தான் 'மழைப்பேறும் மகப்பேறும் மகா தேவன் விருப்பம்' என்று நம் தமிழ்ச் சான்றோர் கள் அறிந்து சொன்னார்கள். கட்டில் நம் விருப்பம், தொட்டில் அவன் திட்டம் என்று இப் பொழுதாவது புரிகிறதா? இன்னும் நமக்குத் தெரியாத செய்தி கள் பலவும் வர இருக்கின்றன. ●


பாலகன் முருகன்!

திண்டுக்கல்லில் உள்ள திரு மலைக்கேணி என்னும் கீழ்பழநி முருகன் கோயிலில் பாலகனாகக் காட்சி தரும் முருகன் கையில் தண்டம் ஏந்தி, இடது கையை இடுப்பில் வைத்தத் திருக்கோலத் தில் அருள்பாலிக்கிறார். இங்கு முருகன் பாலகனாகக் காட்சி யளிப்பதால் அருகில் வள்ளி, தெய்வானை கிடையாது.

– ஆர்.கே. லிங்கேசன்

பேராசிரியர் சுவாமிநாதனும் காந்தியடிகளின் 100 நூல்களும்

சென்ற இதழ் தொடர்ச்சி





பாவண்ணன்

காந்தியடிகளின் எழுத்துக்கள் வழியாக அவரை முழுமையாக அறிந்து கொண்டார் சுவாமிநாதன். அவர்மீது கொண்ட மதிப்பு நாளுக்கு நாள் பெருகியது.

அவருடைய இன்னொரு ஆர்வம் ரமணர். ரமணரும் காந்தியடிகளும் ஒரு பாதையின் இரு புறங்களிலும் நின்று சுவாமிநாதனைச் செலுத்திய சக்திகள் என்றே சொல்ல வேண்டும். சென்னையில் அவர் வசித்தவரைக்கும் ஒவ்வொரு வாரமும் ஞாயிறுதோறும் நண்பர்களை அழைத்து, ரமணரைப் பற்றி உரையாடுவதை அவர் வழக்கமாகக் கொண்டிருந்தார். ரமண பக்தர்கள் சபை என்றே அச்சந்திப்புக்குப் பெயர் சூட்டியிருந்தார்.


காந்திஜி

காந்தி தொகைநூல்களை உருவாக்கும் முயற்சியில் இறங்கியபிறகும் அப்பழக்கம் அவரை விட்டு மறையவில்லை. நேதாஜி நகரிலிருந்த தன் அடுக்கக வீட்டுக்கு நண்பர்களை அழைத்துப் பேசுவது வழக்கமாகிவிட்டது. அந்நண்பர்களில் பெரும்பாலானோர் காந்தி தொகைநூல் வேலையில் அவருக்குத் துணையாகப் பணியாற்றியவர்கள். அதனால் ரமணருடன் காந்தியடிகளும் அந்நிகழ்ச்சியின் ஒரு பேசுபொருளாக மாறினார்.

பல நண்பர்கள் அளித்த நன்கொடைகளின் உதவியோடு தில்லியிலேயே ஓர் இடத்தை வாங்கி, ரமணர் மையத்தை உருவாக்கினார். ரமணரைப் பற்றி சுவாமிநாதன் எழுதிய நூலை நேஷனல் புக் டிரஸ்ட் வெளியிட்டது.

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றியவர் சுவாமிநாதன். மனத்தில் நினைப்பதைத் தெளிவாகவும், சரியாகவும், கச்சிதமாகவும் வெளிப்படுத்தும் ஆற்றல் கொண்டது அவருடைய ஆங்கிலம். ஆறாண்டுக்காலப் பத்திரிகைப் பணி ஆங்கிலத்தை மெருகோடும், ஈர்ப்போடும் பயன்படுத்தும் கலையில் அவருக்குத் தேர்ச்சியை அளித்திருந்தது.

மேலும், இளமைப் பருவத்திலிருந்தே தனக்குள் உறைந்திருந்த சட்ட மொழியறிவு வழியாக எதையும் குழப்பமில்லாத வகையில் நுட்பமாக வெளிப்படுத்தும் சொற்சிக்கனத்தையும் அவர் பெற்றிருந்தார். ஐம்பதாயிரம் பக்க அளவுக்கு

நீண்ட தொகைநூல்களை உருவாக்கும் பணிக்குத் தேவையான மொழியாற்றல், நுட்பம், தெளிவு, கச்சிதம், அர்ப்பணிப்புணர்வு என அனைத்தும் தன் வாழ்க்கையனுபவங்கள் வழியாகக் கைவரப் பெற்றவராக இருந்தார் சுவாமிநாதன்.

அவர் இப்படிக் கனிந்து வரும் தருணத்திற்காகவே "இன்னும் கொஞ்ச காலம் பொறுத்திரு. தக்க நேரத்தில் உன்னை அழைப்பேன்" என்று இளமைக்காலத்தில் காந்தியடிகள் சொன்ன சொல் காத்திருந்தது போலும்.

காந்தியடிகளின் ஆங்கில வாக்கியங்களைப் படித்துப் படித்து சுவாமிநாதனுக்கு அவர் கையாளும் மொழிநடையைப் பற்றிய ஒரு புரிதல் கிடைத்துவிட்டது. அதனால் குஜராத்தி, இந்தி ஆகிய மொழிகளில் எழுதப்பட்ட படைப்புகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு தன் பார்வைக்கு வரும் போது, அவற்றைச் சிறுகச் சிறுகச் செறிவூட்டி காந்தியடிகள் பயன்படுத்தும் ஆங்கில நடையிலேயே அமைப்பதில் சுவாமிநாதன் தேர்ந்தவராக இருந்தார்.

சுவாமிநாதனின் இடையறாத உழைப்பில் உருவான முதல் நூலாக காந்தி தொகைநூல் வரிசையில் நான்காவது தொகுதி வெளிவந்தது. இது 1904 முதல் 1905 வரையிலான கால இடைவெளியில் காந்தியடிகள் எழுதிய மற்றும் பேசிய ஆக்கங்களின் தொகைநூல்.

சுவாமிநாதன் தலைமையிலான தொகுப்புக் குழு ஒரு சுயேச்சையான குழு. சுவாமிநாதன் மீது மொரார்ஜி தேசாய்க்கு முழு அளவில் நம்பிக்கை இருந்தது.


ஆயினும், இடையிலிருந்த அதிகாரிகள் ஒவ்வொருவரும் தொகுப்புக்குழுவின் மீது தனக்கும் அதிகாரம் இருப்பதாகக் காட்டிக் கொள்வதற்காகவே அடிக்கடி தொல்லை கொடுத்தனர். திட்ட வேலைகள் எப்படி நடக் கின்றன என்பதை சுவாமிநாதன் தம் அலுவலகத்திற்கு வந்து அடிக் கடி சொல்ல வேண்டும் என அவர் கள் எதிர்பார்த்தார்கள். சந்திக்க வில்லை என்றால், தம் மதிப்புக் குறைந்துவிட்டதாக நினைத்து எரிச்சல் அடைந்தனர்.

சுவாமிநாதனைப் பற்றி அமைச்சரிடம் புகார் அளித்தனர். அமைச்சர் அந்தப் புகாருக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கவில்லை என்பதை உணர்ந்துகொண்டு, ஓர் ஆலோசனைக் கூட்டத்தில் சுவாமிநாதன் குழு மிகவும் நிதானமாக வேலை செய்கிறது என்று குரலெழுப்பினர். அப்போது தொகுப்பு வேலையில் நிதானமாக நடக்க வேண்டிய அவசியத்தை முன்வைத்து அவர் நீண்ட விளக்கமளித்தார்.

"தொகுப்பு வேலை என்பது ஓர் எழுத்தாளரிடம் கையெழுத்துப் பிரதியை வாங்கிப் புத்தகமாக்குவது போன்றதல்ல. நாடெங்கிலிருந்தும் சேகரிக்கப்பட்ட தகவல்களை வகைமை சார்ந்து பிரிப்பதும், தொகுப்பதும் கடுமையான உழைப்பைக் கோருபவை. பிழையே இடம்பெறாதபடி ஒவ்வொரு கணமும் கவனமுடன் இருக்க வேண்டும்.

குஜராத்தி மொழியிலிருந்தும், இந்தி மொழியிலிருந்தும் கிடைத்தவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும்போதும், அதைப் பல நிலைகளில் ஒப்பிட்டுச் சரிபார்த்துச் செம்மைப்படுத்தும் போதும் மிகவும் கவனமுடன் இருக்க வேண்டும். வேகமாகச் செய்ய வேண்டும் என்பதற்காக எடுத்தோம், கவிழ்த்தோம் என்று செய்துவிட முடியாது.

எதிர்காலத்தில் ஒரே ஒரு பிழையைக்கூடச் சுட்டிக்காட்ட இடமளித்துவிடக் கூடாது. வேகத்தைக் காரணம் காட்டி, எதிர்காலத்தில் காந்தியத்தில் ஆய்வு செய்ய முனைகிறவர்களுக்கும், வாசகர்களுக்கும் துல்லியமான தகவல்களை மட்டுமே கொடுக்க வேண்டும் என்பதில் சமரசம் செய்துகொள்ள முடியாது."


ரமண மகரிஷி

சுவாமிநாதனின் சொற்கள் அதிகாரிகளின் தலையீட்டை ஓரளவு தடுத்தன என்றே சொல்ல வேண்டும். அதற்குப் பிறகு அதிகாரிகள் அவர் வழிக்கு வருவதில்லை. சுவாமிநாதனும் தன் குழுவினருடன் தொகுப்பு வேலையில் தடையின்றி மூழ்கிக் கிடந்தார்.

ஆண்டுக்கு மூன்று தொகுதிகள் என்கிற கணக்கில் அடுத்தடுத்துத் தொகைநூல்கள் வெளிவந்தபடியே இருந்தன. ஒவ்வொரு தொகுதியும்


அவருடைய உழைப்புக்கும், அர்ப்பணிப்புணர்வுக்கும் சான்றாக விளங்கி அவருக்குப் பெருமை தேடித் தந்தன.

1969–ஆம் ஆண்டில் மொரார்ஜி தேசாய் அமைச்சர் பதவியிலிருந்து வெளியேறினாலும், காந்தி தொகைநூலாக்க ஆலோசனைக் குழுவின் தலைவராக மட்டும் பணியைத் தொடர்ந்தார். அதனால் சுவாமிநாதனுடைய பணியில் எவ்விதமான இடையூறும் ஏற்படவில்லை. அவருடைய தன்னலமற்ற சேவையைப் பாராட்டி, 1972–ஆம் ஆண்டில் அரசு ‘பத்மபூஷண்’ விருதளித்துக் கௌரவமளித்தது.









26.6.1975 அன்று திருமதி. இந்திராகாந்தி தலைமையிலான அரசு, நாடெங்கும் நெருக்கடி நிலையை அறிவித்தது. எதிர்க்கட்சியைச் சேர்ந்த பல தலைவர்கள் நாடு முழுவதும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

காந்தியடிகளின் தொகைநூல்கள் அச்சடிக்கப்பட்டு வந்த நவஜீவன் அச்சகத்தில், அரசுக்கு ஏற்பில்லாத ஒரு தனியார் பிரசுரத்தை அச்சடித்துக் கொடுத்த காரணத்திற்காக அது மூடப்பட்டது. இதனால் தொகைநூல் வேலை முடங்கியது.

அப்போது வேறு வழியின்றி, தகவல் ஒளிபரப்பு அமைச்சகத்தின் ஆலோசகர் ஒருவரின் துணையோடு இந்திரா காந்தியைச் சந்தித்து முறையிட்டார் சுவாமிநாதன். அதைத் தொடர்ந்து அச்சகம் மீண்டும் திறக்கப்பட்டது.

ஏற்கனவே சுவாமிநாதன்மீது மன வருத்தத்தில் இருந்த அதிகாரிகள், தமக்குச் சாதகமாக இருந்த சூழலைப் பயன்படுத்திக்கொண்டு அவர் மீது மீண்டும் புகார் எழுப்பத் தொடங்கினார்கள். மொரார்ஜி தேசாய்க்கும், சுவாமிநாதனுக்கும் இடையிலான தொடர்பு, மொரார்ஜி கைது செய்யப்பட்ட பிறகும் தொடர்வதாகவும், தொகைநூலாக்கத் தலைவராக இருந்துகொண்டே ஊதியமீட்டும் வகையில் தனியார் பிரசுரத்துக்காகப் புத்தகம் எழுதிக் கொடுப்பதாகவும் (நேஷனல் புக் டிரஸ்ட் நிறுவனத்திற்காக சுவாமிநாதன் தனக்கு மிகவும் பிடித்த ரமணரைப் பற்றி ஒரு புத்தகம் எழுதியிருந்தார்), இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழை விட்டு விலகிவந்த பிறகும் அதன் குழுத் தலைவரான ராம்நாத் கோயங்காவுடன் மறைமுகமாகத் தொடர்பு வைத்திருப்பதாகவும் மேலிடத்திற்குக் குறிப்புகளை அனுப்பினார்கள்.

காந்தியடிகள் தொகைநூலாக்கக் குழுவையே கலைத்துவிடலாம் அல்லது மூப்பின் அடிப்படையில் சுவாமிநாதனைத் தலைமைப் பொறுப்பிலிருந்து விலக்கிவிடலாம் என ஆலோசனை வழங்கினார்கள்.

அன்று அமைச்சராக இருந்த வி.சி. சுக்லாவுக்கு இரண்டையும் செய்து விடலாம் என்ற எண்ணம் இருந்தது. அவருடைய வழிகாட்டலின்படி, உடனடியாக ஆலோசனைக் குழுவைக் கலைத்துவிடும் அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது. நல்வாய்ப்பாக, ஏற்கனவே மூடப்பட்டிருந்த நவஜீவன் அச்சகத்தைத் திறப்பதற்காக இந்திராகாந்தியைச் சந்தித்துப் பேசிய சாரதா பிரசாத், இப்போது மீண்டும் இந்திராகாந்தியைச் சந்தித்து உண்மைச் செய்திகளை எடுத்துரைத்தார்.

அவற்றையெல்லாம் அவர் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டாரே தவிர, எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ரத்துச் செய்ய நினைக்கவில்லை.

இதற்கிடையில் 21 மாதங்கள் நீண்ட நெருக்கடிநிலை விலக்கிக் கொள்ளப்பட்டுத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. தேர்தலில் இந்திரா காந்தி தலைமையிலான காங்கிரஸ் தோல்வியுற்றுப் பதவி விலக, மொரார்ஜிதேசாய் பிரதமராகப் பதவியேற்றார்.

ஒளிபரப்புத்துறை அமைச்சராகப் பதவியேற்ற எல்.கே. அத்வானி, பழைய ஆணைகள் அனைத்தையும் ரத்துச் செய்து, தொகைநூலாக்கக் குழு மீண்டும் தன் பணியைத் தொடர அனுமதித்தார்.


ஆனால், அதிகாரிகளின் சந்தர்ப்பவாத அரசியல் ஆட்டங்களால் சலிப்படைந்த சுவாமி நாதன், பொறுப்பிலிருந்து விலகிவிட முடிவெடுத் தார். ஒரு நாள் மொரார்ஜிதேசாயைச் சந்திக்கக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அவரிடம் தன் முடிவை எடுத்துரைத்தார். ''உங் களிடம் கொடுத்த பொறுப்பை ஏன் தட்டிக்கழிக்க விரும்புகிறீர்கள்? நீங்கள்தான் இதைச் செய்யப் பொருத்தமான ஆள் என நான் நினைத்தேனே'' என்று வேகமாகக் கேட்டார் தேசாய்.

ஏதாவது பொருத்தமான ஒரு பதிலைச் சொல்லவேண்டும் என்பதற்காக சுவாமிநாதன் தன் முதுமையைக் காரணமாகச் சொன்னார். உடனே தேசாய், ''உங்களைவிட ஒரு வயது பெரியவன் நான். இந்த வயதில் நான் பணியாற் றும்போது, நீங்கள் முடியாது என்று சொல்ல லாமா?'' என்று உரிமையுடன் கேட்டார். வேறு வழியின்றி சுவாமிநாதன் திரும்பிவந்து பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

சுவாமிநாதனின் தலைமையில் 98–ஆவது தொகைநூல் 1984–ஆம் ஆண்டில் வெளிவந்தது. காந்தியடிகள் சுடப்படுவதற்கு முதல்நாள் வரையில் அவர் எழுதிய, உரையாடிய ஆக்கங்கள் அனைத்தும் முறையாக ஆவணப்படுத்தப்பட்டன. அந்தத் தொகுதியை வெளியிட்ட அன்றைய தலைமையமைச்சர் இந்திராகாந்தி, சுவாமி நாதனைப் புகழ்ந்து, அர்ப்பணிப்பு உணர்வு மிக்க அவரது உழைப்புக்குத் தேசத்தின் சார்பாக நன்றி தெரிவிப்பதாக அறிவித்தார்.

அப்போது தொகைநூல் வேலை முடிந்தாலும், அட்டவணை வேலை மட்டுமே எஞ்சியிருந்தது. 24 ஆண்டுக்கால நீண்ட உழைப்பிற்குப் பிறகு 1985–ஆம் ஆண்டில் அவர் சென்னைக்குத் திரும் பினார். 1987–இல் காந்தி கிராமப் பல்கலைக் கழகம் அவருக்கு 'முனைவர்' பட்டமளித்துக் கௌரவித்தது.

சாமான்யன் புத்தகத்தோடு இருப்பான். சாதனை மனிதன் புத்தகத்தில் இருப்பான்.
– ராஜாஜி



சென்னைக்குத் திரும்பினாலும், செம்மைப் படுத்தும் வேலையில் தொகைநூல் குழு வினருக்குத் தொடர்ந்து உதவிகள் செய்தபடியே இருந்தார் சுவாமிநாதன். தனக்கு வரும் மெய்ப்புகளை (புரூஃப்) உடனுக்குடன் பார்த்துத் திருத்தி அனுப்ப அவர் தவறியதே இல்லை.

தொகைநூல் குழுவுக்கு எழுதிய ஒரு கடிதத்தில், இத்தனை ஆண்டுகள் காந்தியோடு இணைந்திருந்த அனுபவத்திற்காகக் கடவுளுக்கு நன்றி தெரிவித்தார். அக்கடிதத்தில் காந்தி யடிகளை அனுமான் என்றும், அவர் காலமெல்லாம் தன் தோள்மீது ஏறி அமர்ந்துகொண்டு ஒவ்வொரு கணமும் தட்டிக்கொடுத்துப் பணியாற்றும்படித் தூண்டிக்கொண்டே இருந்தாரென்றும் வேடிக் கையாகக் குறிப்பிட்டிருந்தார்.

காந்தியின் ஆக்கங்களை 100 தொகுதி களாக வகைப்படுத்தித் தொகுத்தவர் சுவாமி நாதன். ஏறத்தாழ 50 ஆயிரம் பக்கங்கள். ஆனால் ஒரு தொகுப்பாசிரியராக எந்தத் தொகுதியிலும் அவர் தன் பெயரைக் குறிப்பிட்டதே இல்லை. தன் பெயரை ஒருபோதும் முன்வைத்துக்கொள்ள விரும்பாத தொண்டர் அவர். செயலே முக்கியம், செய்பவனல்ல என்பது அவர் கொள்கை.

அவர் மறைவுக்குப் பிறகு வெளிவந்த நூறாவது தொகுதியில் மட்டும் இறுதிப்பகுதியில் தொகுப்புக்குழுவில் பணியாற்றுபவர்களின் பட்டியலில் பத்தோடு பதினொன்றாக அவர் பெயர் சேர்க்கப்பட்டிருந்தது. நூறாவது தொகுதி வெளி யீட்டு விழாவில் கலந்துகொண்ட தலைமை யமைச்சர் நரசிம்மராவோ, அமைச்சர்களோ, அதிகாரிகளோ யாரும் தம் பேச்சில் சுவாமி நாதனின் பெயரைக் குறிப்பிடவே இல்லை. ஆனால் மக்கள் நெஞ்சில் பதிந்துவிட்ட காந்தியத் தொண்டர்கள் வரிசையில் சுவாமிநாதனின் பெயர் எப்போதும் இருக்கும்.

உடல் எடையை குறைக்கும் பயிற்சிகள் 6



கட்டுரை



உடல் எடையைக் குறைக்க விரும்புபவர்கள் திடீரென அதிக நேரம் பயிற்சிகள் மேற்கொண்டு, எடையை உடனே குறைக்க வேண்டும் என நினைக்கக் கூடாது. ஏனென்றால், உடல் எடை ஒரே வாரத்தில் அல்லது ஒரே மாதத்தில் அதிகரிப்பதில்லை. கொஞ்சம் கொஞ்சமாக உடல் பருமன் என்ற நிலையை அடைவதற்குப் பல ஆண்டுகள் ஆகியிருக்கும்.

அதனால் ஒன்று அல்லது இரண்டு மாதங்களில் எடை குறைய வேண்டும் என்று ஆசைப் படுவதில் அர்த்தம் இல்லை. தொடர்ந்து நீண்ட காலம் பயிற்சிகள் செய்துதான் உடல் எடையைக் குறைக்க வேண்டும்.

35 வயதுக்கு உட்பட்டவர்கள் நேரடியாக ஜிம்முக்குச் சென்று உடல் எடையைக் குறைக்கும் அனைத்துப் பயிற்சிகளையும் மேற்கொள்ளலாம். நடுத்தர வயதில் உடல் எடையைக் குறைக்க விரும்புபவர்களுக்கு நடைப்பயிற்சி அல்லது நீச்சல் சிறந்த பயிற்சியாக அறியப்படுகிறது. இவர்கள் தொடக்கத்தில் தினமும் 30 நிமிடங்கள் வீதம், ஒரு நாள் விட்டு ஒரு நாள் நடைப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.



இரண்டு வாரங்களுக்குப் பிறகு நடைப் பயிற்சியை தினமும் 45 நிமிடங்களாக அதிகரிக்க வேண்டும். அதன்பின்னர் தினந் தோறும் நடைப்பயிற்சியை மேற் கொள்ள வேண்டும். பின்னர் தினமும் ஒரு மணி நேரம் நடைப் பயிற்சியைத் தவறாமல் செய்ய வேண்டும்.

தனியே நடைப்பயிற்சிக்கு நேரம் ஒதுக்க முடியாதவர்கள், தங்கள் அன்றாட வாழ்க்கையில் எப்படியாவது உடல் உழைப்புச் செலுத்த வேண்டும். வீடு, அலுவலகங்களில் எக் காரணம் கொண்டும் லிப்ட் வசதியைப் பயன் படுத்தக் கூடாது. தினமும் நாலைந்து முறையாவது ஏதாவது ஒரு காரணத்திற்காக மாடியிலிருந்து கீழே இறங்குவதும், ஏறுவதுமாக இருக்க வேண்டும்.

பால், காய்கறிகள் வாங்குவதற்குச் செல்ல வேண்டிய கடைகளுக்கு வாகனங்களைப் பயன் படுத்தாமல் நடந்தே செல்ல வேண்டும். எங்கேயும் எப்போதும் நடை என்று பழகிவிட்டால், உடற் பயிற்சிக்குப் பிரத்யேகத் தேவை இல்லாமல் எடை குறையத் தொடங்கும்.

விளையாட்டுக்களில் ஈடுபடுவது நல்ல உடற்பயிற்சி என்றாலும், சீரான எடைக் குறைவு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. ஏனென்றால், விளையாட்டில் ஒரு நாள் கூடுதல் நேரமும், சில நாட்கள் குறைந்த நேரமும் செலவிடுவார்கள். அதனால், குழு விளையாட்டைத் தேர்வு செய்வதற்குப் பதிலாகத் தனிநபர் விளையாட்டு அல்லது உடற் பயிற்சிகளே எடைக் குறைப்புக்குப் பரிந்துரை செய்யப்படுகிறது.

முறையாக நடைப்பயிற்சி செய்வதன் மூலம்

டாக்டர் வி.ஜி. மோகன் பிரசாத்

மாதம் ஒன்றுக்கு 1 முதல் 2 கிலோ வரை எடையைக் குறைக்க முடியும் என்று பல்வேறு ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. உடற்பயிற்சிக் கூடங்களில் பயிற்சியாளரின் உதவியுடன் பயிற்சி மேற்கொள்பவர்கள் மாதம் 3 கிலோ வரை எடையை நிச்சயம் குறைக்க முடியும். உடல் எடை திடீரெனக் குறைவதைவிட, படிப்படியாகக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைவதுதான் நல்லது. அதிக எடை உள்ளவர்கள் மட்டும் மாதம் 4 கிலோ வரை எடையைக் குறைக்கலாம்.

நடைப்பயிற்சி, நீச்சல், சைக்கிளிங் முதலிய பயிற்சிகள் செய்வதன் காரணமாக முதல் இரண்டு அல்லது மூன்று மாதங்கள் எடை மளமளவெனக் குறையும். அத்துடன் யோகா முதலிய மூச்சுப் பயிற்சிகளுடன் தசைகளை வலுவாக்கும் சில உடல் பயிற்சிகளையும் செய்வது நல்ல பலன் தரும்.

இப்போது பல இடங்களில் உடல் எடையைக் குறைப்பதற்கு டான்ஸ் கற்றுத்தரப்படுகிறது. நடனம் ஆடும்போது உடலில் உள்ள அத்தனை அவயங்களும் சேர்ந்து பங்களிக்கின்றன என்பதால், உடலைக் குறைப்பதற்கு டான்ஸ் நல்ல பயிற்சியாக அறியப்படுகிறது. பொதுவாகவே டான்ஸ் தெரபி மனதுக்கு உற்சாகம் அளிப்பதாகவும், உடலை உறுதி செய்வதாகவும் இருப்பதால், தினமும் 300 கலோரிகள் வரை குறைக்க முடியும்.

எடை குறைக்கும் இயந்திரங்கள் : தெருவுக்குத் தெரு பெண்களுக்கு அழகு நிலையங்கள் இருப்பது போல், இப்போது எங்கெங்கும் இருபாலருக்காகவும் ஜிம்கள் திறக்கப்படுகின்றன. உடற்பயிற்சிக் கூடத்தில் இருக்கும் சில இயந்திரங்கள் எடையைக் குறைப்பதில் சிறந்த முறையில் பயன்படுகின்றன.

டிரட் மில் எனப்படும் வாக்கர் மிகச்சிறந்த உடற்பயிற்சி இயந்திரமாக இருக்கிறது. ஜிம்முக்குச் செல்ல முடியாதவர்கள், இதனை வீட்டில் வாங்கி வைத்துப் பயிற்சி மேற்கொள்ள முடியும். நின்ற இடத்திலேயே நடப்பது, ஜாகிங் செய்வது, ஓடுவது என எல்லாமே செய்ய முடியும். உடலில் ரத்த ஓட்டம் அதிகரிக்கவும், சீராகச் செயல்படவும் உதவுவதால், இதய நோய்களில் இருந்தும் காப்பாற்றுகிறது.

டிரட் மில் போன்று நின்ற இடத்தில் இருந்தபடியே சைக்கிள் ஓட்டுவதும் சிறந்த பயிற்சியாக இருக்கிறது. அரை மணி நேரம் முதல் 1 மணி நேரம் வரை பயிற்சி மேற்கொள்ளும்போது வயிறு மற்றும் இடுப்புப் பகுதியில் உள்ள கொழுப்பு எரிக்கப்பட்டுக் கால்களுக்கு அதிக வலிமை கிடைக்கிறது.

இப்போது மசாஜ் என்ற பெயரில் உட்காரும் சேர், வைப்ரேட்டர் இயந்திரங்கள் உடலுக்கு அதிர்வு தரும் வகையில் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் இந்த முறையிலான உடற் குறைப்பை மருத்துவர்கள் ஆதரிப்பதில்லை. ஏனென்றால், இதன் விளைவுகள் அனைவரிடமும் சீரான முடிவுகளைத் தருவதில்லை. இது மனிதர்களை மேலும் சோம்பேறியாக்கும் கருவியாகவே பார்க்கப்படுகிறது.

உடலை வலுவாக்கும் சில பயிற்சிகள் : நடைப்பயிற்சி உடலைக் குறைப்பதில் சிறப்பாகச் செயல்படுகிறது என்றாலும் அது மட்டுமே போதுமானதாக இருப்பதில்லை. அதனால் உடலை உறுதியாக்குவதற்கு மேலும் சில பயிற்சிகளை வீட்டில் செய்வது நன்மை தரும்.

❖ தரையில் மல்லாந்து படுத்துக்கொண்டு கைகளைத் தலைக்குப் பின்னே வைத்துக் கொள்ள வேண்டும். இடுப்பை அசைக்காமல் தலையையும், கால்களையும் முன்னோக்கித் தூக்க வேண்டும். இது வயிறு, இடுப்புப் பகுதிகளில் இருக்கும் தசை, கொழுப்பைக் குறைக்கும் சிறந்த பயிற்சி.

❖ தரையில் நன்றாகப் படுத்துக்கொண்டு, இரண்டு கால்களை மட்டும் முடிந்தவரை மேலே தூக்கி, சைக்கிள் ஓட்டுவதுபோல்



கால்களை மாற்றி மாற்றி அசைக்க வேண்டும்.

❖ கை, கால், நெஞ்சுப் பகுதிகளைத் திட மாக்குவதற்கு புஷ் அப்ஸ் பயிற்சி பயன்படு கிறது. குப்புறப் படுத்துக்கொண்டு, கை களின் உள்ளங்கைகள் மற்றும் கால் விரல் கள் மட்டும் தரையில் படும்படி உடலை மேலே தூக்கி, இறக்க வேண்டும்.

❖ சிட் அப்ஸ் எனப்படும் கீழே உட்கார்ந்து எழுவதும் சிறப்பாக உடல் எடை குறைப்பதில் பயன்படுகிறது.

❖ தரையில் நன்றாக மல்லாந்து படுத்துக் கொண்டு கால்கள் இரண்டையும் நன்றாக மடித்து நெஞ்சு வரைக்கும் கொண்டுவர வேண்டும். பின்னர் கீழே தரையில் கால் தொட்டுவிடாமல் பழைய நிலையை அடைய வேண்டும். இப்படித் தொடர்ந்து செய்வது நல்ல பலன் தருகிறது.

யோகாசனங்கள் : உடற்பயிற்சிகளைப் போலவே யோகாசனங்களும் உடலுக்கு நன்மை தருவதாகவே இருக்கின்றன. கடமைக்காகச் சில நிமிடங்கள் மட்டும் யோகா மற்றும் மூச்சுப் பயிற்சி செய்வது எவ்விதப் பலனையும் தருவதில்லை. முழுமையாக மனம் அமைதியாக ஈடுபட்டு, உடம்பை முழுமையாக வளைத்து ஆசனங்கள் செய்வது உடல் எடையைக் குறைப்பதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

யோகாசனத்தின் பாலபாடமாகக் கருதப்படும் சூரிய நமஸ்காரம் உடல் எடையைக் குறைப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. சூரியனைப் பார்த்துக் கும்பிடுவது அல்லது தியானம் செய்வது மட்டும் சூரிய நமஸ்காரம் அல்ல. வார்ம் அப் எக்சர்சைஸ் போன்று தொடர்ச்சியாகச் சூரிய நமஸ்காரத்திற்கு என்று வடிவமைக்கப்பட்டுள்ள அத்தனை யோகா சனங்களையும் வரிசை மாறாமல் செய்ய வேண் டும். இதனைக் காலை, மாலை நேரங்களில் செய் வது நல்ல பலன் தருகிறது.



உடல் எடையைக் குறைக்க விரும்புபவர் களுக்கு யோகா மற்றும் தியானம் மட்டும் முழுமை யான பலன் தருவதில்லை. உடற்பயிற்சிகளுடன் யோகாவையும் இணைக்கும்போது உடல் எடை குறைவதற்கு அதிக வாய்ப்பு உண்டாகிறது.

கூட்டுச் சிகிச்சை : ஒரு சிலருக்கு உணவுக் கட்டுப்பாட்டை மட்டும் முறையாகக் கடைப்பிடிக் கும் பட்சத்திலேயே எடையில் விரும்பத்தக்க மாறு தல்கள் தென்படும். சிலருக்கு உடற்பயிற்சி மட் டுமே எடையைக் குறைப்பதற்குப் பயனளிக்கிறது. இந்த இரண்டு வழிகளையும் சேர்த்துக் கடைப் பிடிப்பவர்களுக்கு உடல் எடை குறைவதற்கு இன் னும் வாய்ப்பு இருக்கிறது. உணவு, உடற்பயிற்சி ஆகிய இரண்டையும் ஒருசேரக் கடைப்பிடிப்பது தான் கூட்டுச் சிகிச்சை எனப்படுகிறது.


உடல் எடையைக் குறைப்பதற்குச் சம்பந்தப் பட்ட தனி நபர் மட்டும் முயற்சி மேற்கொள்வது போதுமான பலன் அளிப்பதில்லை. அவருடன் இணைந்து குடும்பத்தாரும், உறவினர்களும், நண் பர்களும் உடல் எடை குறைவதற்கு உதவி புரிய வேண்டும்.

வீட்டில் நல்ல சத்தான உணவு எடுத்துக் கொண்டு அலுவலகம் சென்றதும், நண்பர் களுடன் இணைந்து மசால் தோசை சாப்பிட்டால் உருப்படியான எந்தப் பலனும் தெரியாது. அதனால் அவருடன் இணைந்த அத்தனை நபர்களும் உடல் எடை குறைப்பதற்கு உதவி புரிபவ ராக இருத்தல் வேண்டும். அப்போதுதான் இந்தக் கூட்டுச் சிகிச்சை முழுமையான பலன் தருவதைப் பார்க்க முடியும்.

ஒரு சில காரணங்களால் இந்த வழிமுறைகள் பயனளிக்காத நிலையில், மருத்துவரைச் சந்தித்து நல்ல ஆலோ சனை பெற்றுக் கொள்வது நல்லது.

●

சிறுகதை



நிலாச் சோறு

"ஆனா நீங்க எல்லாம் யானை கிட்ட மாட்டாமெத் தப்பிச்சு வந்துருக்கீங்களே.. கடவுள் புண்ணியம்..." மருதமலை இருந்த திசை நோக்கிக் கும்பிடு போட்டவாறே சொன்னாள் எதிர் வீட்டுக்காரி பாவாயம்மாள்."



ஆட்டனத்தி

'நிலா எங்கே ஓடி ஒளிஞ்சிருக்குது... வெளிச்சம் வரமாட்டேங்குதே....'

நாளை இரவு நடக்கப் போகும் நிலாச் சோறு விருந்தைப் பற்றிய நினைவு அனைவர் மனதிலும் குடிகொண்டிருந்தது. எது கிடைக்கிறதோ, அதை வைத்துத் தானே விருந்து.

சிவசாமி வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

பஞ்சுப் பொதியாய், திட்டுத்திட்டாய் மேகக் கூட்டங்கள் அணி சேர்ந்து கொண்டு நிலவை மறைத்துக்கொண்டிருந்தன. சமவெளிப் பகுதி பொட்டல் காடு என்றால் சமாளித்துக் கொள்ளலாம்... இது அடர்வனமாயிற்றே.

எல்லோரும் அங்கேயிருந்த பாறையின் மீது உட்கார்ந்தார்கள். உலியம்பாளையத்திலிருந்து புறப்பட்டு இரண்டு கிலோ மீட்டர் தூரம் தரிசு நிலங்கள் வழியாகவும் வனத்திற்குள் பாறைக்குழி ஆனை மடுவு எல்லாம் தாண்டி இரண்டு கிலோ மீட்டர் தூரம் நடந்து வந்த களைப்பு, உடலில் சுரந்து கொண்டிருந்த வியர்வைத் துளிகள் தாங்கள் அணிந்திருந்த சட்டைகளை நனைத்துக் கொண்டிருந்தன.

இலேசாய்க் காற்று வந்து இவர்களின் மேனி எங்கும் தழுவிக்கொண்டு போனதில் உடலில் பதுங்கியிருந்த களைப்புக் கொஞ்சம் ஒதுங்க ஆரம்பித்தது.

செந்தில், வெங்கடாசலம், சுப்புக்குட்டி என்று மூவரிடமும் சிவசாமி சொன்னது ஏதும் காதில் விழவில்லை. இருளின் அடர்த்தி ஒருவர் முகத்தை இன்னொருவர் பார்ப்பதில்கூடத் தெளிவில்லை.

ஏதோ இத்தனை தூரம் வந்து விட்டோம். ஒன்றும் கண்ணுக்குப்பட மாட்டேன் என்கிறதே. வந்த பாதை தெளிவாக இருந்த மாட்டுத்தடம் ஆதலால் நிலாவும் துணைக்கிருந்ததால் வந்துவிட்டோம்.

எதிரே மிக உயரமாய் நிற்கும் மலை கரும்பூதம் போலப் பயமுறுத்திக் கொண்டிருந்தது. அனைவரது கைகளிலும் இருக்கும் டார்ச் விளக்கின் மூலம் அரை வட்டமாக ஒளி பாய்ச்சிக் கொண்டேயிருக்கிறார்கள். எதுவும் கண்களுக்குப் படவில்லையே. தன் நெற்றியில் கட்டியிருந்த நெற்றிப் பேட்டரியை ஒளி பாய்ச்சிக் கொண்டே அரை வட்டமாகத் தலையை அங்கும் இங்குமாகத் திருப்பிக் கொண்டே இருந்தான் வெங்கடாசலம்.

ஏதோ சத்தம்... ஏதோ ஒன்று ஓடுகிறாற் போல் மிகச் சன்னமாய் வந்து கொண்டு இருந்தது. என்னவென்று தெரியவில்லையே... ஒவ்வொருவரும் டார்ச் லைட்டை அரைவட்டமாய்ப் போட்டுப் போட்டுப் பார்க்கிறார்கள். ஏதும் அகப்படவில்லையே. அதோ... அதோ பெரியதாய் ஒன்று புதருக்குள் நுழைந்தொளிய எத்தனிக்கிறதே...

ஆகா எறும்பு தின்னி... அதைப் பின் தொடர்ந்து ஓடினான் சிவான். அது போக்குக் காட்டிக் கொண்டு மறுபடியும் புதருக்குள் ஓடப்பார்க்கிறது.

கொடுவாளால் ஓங்கி அடித்தான் சுப்புக்குட்டி. எறும்பு தின்னி பந்து போல உடலைச் சுருக்கிக் கொண்டு அப்படியே கிடந்தது. மறுபடியும் கொடுவாளைத் திருப்பி வைத்து அடித்தான். ம்கூம்... எதற்கும் மசியவில்லை. அப்படியேதான் கிடந்தது. வெங்கடாசலம் துப்பாக்கியால் சுட்டான். துப்பாக்கிக் குண்டு செதில் மீது பட்டுத்தெறித்து எகிறி விழுந்தது.

டைலர் செந்தில் கையிலிருந்த

சாக்கை எடுத்து விரித்து, பந்து போல் கிடந்த எறும்புதின்னியைச் சாக்கிற்குள் நுழைத்தான். ஊணாங் கொடியால் சாக்கை இறுகக்கட்டினான். தூக்கிப் பார்த்தான். கனமாக இருந்தது. எப்படியும் எட்டு ஒன்பது கிலோ தேறும். நல்ல வேட்டைதான்.

எறும்புதின்னி கிடைத்ததில் எல்லோருக்கும் மகிழ்ச்சி. எப்போது விடியும், வீடு போய்ச் சேரு வோம்! கறி ரொம்ப ருசியாகத்தான் இருக்குமாமே!

இத்தனை நேரமாய்ப் போக்குக் காட்டிக் கொண்டிருந்த நிலா, மேகத் திரள்களிலிருந்து விடுபட்டுச் சட்டென்று வெளிச்சத்தைப் பரப்பியது.

எல்லோருக்கும் களைப்பு. நாக்கெல்லாம் வறண்டு போய் இருந்தது. உடல் எங்கும் வியர்வை அப்பிக் கிடந்தது. தண்ணீர் கிடைத்தால் தேவலை. அதோ சிறியதாய் ஓடையில் நீர் ஓடுவது தெரிகிறதே!

இரண்டு இரண்டு பேராய் தூக்கிக் கொண்டு வந்த சாக்கை ஓரிடத்தில் வைத்தார்கள். உள்ளே எறும்பு தின்னி அப்படியே இருந்தது.

வாய் கொப்பளித்து முகம் கழுவியதுமே களைப்புக் கொஞ்சம் நீங்கியது போல் இருந்தது.

ஏதோ ஒரு சத்தம். எறும்பு தின்னியை அடைத்துக் கட்டி வைத்திருந்த சாக்கை ஏதோ ஒரு விலங்கு கவ்விக் கொண்டு ஓட்டமெடுத்தது. சாக்கு வைக்கப்பட்டிருந்த இடத்திற்கும் ஓடை இருந்த இடத்திற்கும் உள்ள இடைப்பட்ட தூரம் சுமார் முப்பதடிதான் இருக்கும்.

'எடக்காடை எடக்காடை...' என்று குரல் எழுப் பினார்கள். கழுதைப் புலியோ... செந்நாயோ...

சட்டென்று ஓடி மறைந்தது. கொஞ்சம் பின் தொடர்ந்து ஓடிப் பார்த்தார்கள்.

சிறுசிறு இடைவெளிகளில் மரங்கள் ராட்ச சத்தனமாய் வளர்ந்து கிடப்பது மட்டும் அல்லாமல், கீழே விழும் நிழலும் சிறிதும் வெளிச்சம் வைக் காமல் அடர்ந்து இருட்டை மேலும் கருமை பூசிக் கொள்ள உதவிக் கொண்டு இருந்தது.

"திருப்பி ஓடி வந்து நம்மைக் கடித்துக் குதறி விடப் போகிறது. நமக்குக் கொடுத்து வைக்கல. அதாவது திங்கட்டும்..." செந்திலின் சமாதான மான வார்த்தை எங்கே இவர்களை அமைதிப் படுத்தப் போகிறது! சோர்ந்து போய் அங்கேயே உட்கார்ந்து கொண்டார்கள்.

பிறகு அங்கிருந்த சுள்ளிகளைப் பொறுக்கித் தீமூட்டிக் குளிர் காய்ந்தவர்கள் மல்லாந்து படுத்துக்கொண்டு வானத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். நட்சத்திரங்களின் மினு மினுப்பு இவர்களின் மனசை இலகுவாக்கிக் கொண்டிருந்தது.

மசிரியம்மாளிடம் சொல்லியிருக்கவே வேண் டாம். ஏங்கிப்போய் விடுவாளே... ஏதோ ஒரு கறி கிடைத்தால் போதும். சின்ன வெங்காயம், இஞ்சி, பூண்டு, கொத்தமல்லி, பட்டை, சோம்பு, சீரகம், கசகசா என்று கலந்த கலவையை நன்கு நெகு நெகுவென்று அரைத்து, இலேசாய் வறுத்த கறி யையும் போட்டுக் குழம்பு வைத்தால் அவ்வளவு ருசியாய் இருக்கும். மசிரியம்மாளுக்குக் கைவந்த கலை.

வெறும் கையோடு எப்படிப் போவது. எல்லா நினைப்பிலும் மண் விழுந்து விட்டதே!

வெங்கடாசலத்திற்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது. உங்களோடு வந்து என்ன பிர யோசனம்னு இவங்கெல்லாம் கேலி பண்ணுவாங் களே... இனி இந்தப் பொழப்பே வேண்டாம்.

தன் முன்னே பசுமை போர்த்திக் கொண்டு உயர்ந்தும் விரிந்தும் கிடந்த வனத்தைப் பார்த் தான் வெங்கடாசலம். சூரியக் கதிர்கள் சிவந்து போய் பூமியெங்கும் வெளிச்சம் பாய்ச்சிக் கொண்டு இருந்தன. இவர்கள் இனி தன்னைக் கேலி செய்ய மாட்டார்கள். உடன் வருகிறவர் களைத் திரும்பிப் பார்த்தான்.

இரவு வீட்டிலிருந்து புறப்பட்டு வந்ததிலிருந்து இக்கணம் வரை எத்தனை தடவை வந்து போகும் களைப்பும் மகிழ்ச்சியும் ஏமாற்றமும்.


ஊரை நெருங்க நெருங்க அனைவரது உள் ளங்களிலும் துள்ளிக் கொண்டிருக்கும் மகிழ்ச்சி மின்னல்.

ஆமாம், கூட்டத்திற்குத் தலைமையேற்று வந் திருக்கும் வெங்கடாசலத்திற்கு ஏற்பட்டிருக்கும் மகிழ்ச்சியை எடை போடக் கூட முடியாதே.

எறும்பு தின்னிதான் ஏமாற்றிவிட்டது. காட்டுப் பன்றியுமா ஏமாற்றும்?

சிவானும் சுப்புக்குட்டியும் பெரிய குச்சியில் கட்டப்பட்ட பன்றியைத் தோளில் சுமந்த வண்ணம் வருகிறார்களே. இலகுவாய்ச் சுமக்கும் அளவுக் குத்தான் எடையுள்ள பன்றி... ஆமாம், நான்கைந்து கிலோ தேறும்.

அலைச்சல் வீண் போகவில்லை. அதி அற்புத மான மட்டன் விருந்து சாப்பிடப் போகிறோமே. எச்சில் சுரந்து நின்றது. மசிரியம்மாள் கூட இனி எகத்தாளம் பேசமாட்டாள்.



வனத்தை விட்டு வெளியேற இருந்த தருணம் பனித்துளிகளைச் சுமந்து கொண்டிருந்த புல் கற்றைகளின் நடுவே பன்றி நடுக்கத்துடன் படுத்துக் கிடந்தது. அதைப் பார்த்ததும் வெங்கடா சலத்திற்கு விரக்தி, சோர்வு, ஏமாற்றம், கவலை என்று அனைத்தும் பறந்து போய் இருந்தது. கையில் வைத்திருந்த துப்பாக்கியால் குறி பார்த்துச் சுட்டான். வனத்தையே அதிர வைக்கும் அளவிற்குப் பெருத்த சப்தம் எழுப்பிக் கொண்டு துடிதுடித்தது. வெற்றிப் பெருமிதத்துடன் நடந்து கொண்டிருந்தான் வெங்கடாசலம்.

மசிரியம்மாள் மனசுக்குள் நிரம்பியிருந்தாள். இன்றைக்கு முழுக்கப் பன்றிக் கறியும் சாராயமும் தான்.

ஒரு மூட்டை பழைய பொன்னி அரிசி, ரேசன்

அரிசி எல்லாம்தாம் வீட்டில் இருக்கிறதே பொங்கு வதற்கு. கறிக்குழம்பையும் சோறையும் நினைக்க நினைக்க எச்சில் ஊறியது.

ஊர் அருகே வந்து விட்டதற்கான அடையாள மாய் யார் யாரோ பேசுகிற குரல் ஒலித்த வண்ணம் இருந்தது. சைக்கிளில் ஒருவன் தன்னையே பார்த் துக் கொண்டு போகிறானே!

செந்தில் முன்னால் வந்து ''யாரோ மசிரியம்மா... மசிரியம்மா என்று சொல்றாங் களே...'' குரலில் பதற்றம் தெரிந்தது.

மசிரியம்மா என்று சொன்னதைக் கேட்டதும் வெங்கடாசலத்தின் வியர்த்திருந்த உடம்பில் மேலும் வியர்வை சுரந்தது. நெஞ்சு படபடத்தது. கால்கள் தரையில் பாவ மறுத்தன.

"அய்யோ, மசிரியம்மாளுக்கு என்னாயிற்று'' குரல் கம்மியது. ஓட்டமும் நடையுமாய் விரைந் தான்.

வெங்கடாசலத்தின் வீட்டின் முன்னால் கூட்டம் கூடியிருந்தது. ஒன்றன் பின் ஒன்று என மூன்று அறைகளைக் கொண்டிருந்தது வீடு.

"மசிரியம்மா... மசிரியம்மா..." என்று அரற்றிக் கொண்டே கூட்டத்தை விலக்கியவாறே விரைந்தான்.

பக்கத்து வீட்டுக்காரன் உலகப்பன் பின்னா லேயே ஓடி வந்தான்.

"ராத்திரி உன் வீட்டிலெ யானை வந்துருச்சு. கடைசி ரூம்லே வெச்சுருந்த அரிசியை எடுத்துத் தின்னுருச்சு. நடு ரூம்லே என்ர பொண்டாட்டியும் மசிரியம்மாளும் படுத்துத் தூங்கியிருக்காங்க. ஏதோ பின்னாலெ சத்தம் கேக்குதேன்னு பார்த்தா, ஓட்டைப் பிரிக்கிற சத்தம். ஒடு உடைஞ்சு விழுகிற சத்தம்... பிரிச்சு ஓட்டை வழியா யானை தும்பிக் கையை விட்டுத் துழாவியிருக்கு... அங்கிருந்த அரிசி மூட்டையிலிருந்து அரிசியை எடுத்துத் திங்க ஆரம்பிச்சிடுச்சு. படுத்திருந்த ரெண்டு பேரும் எழுந்து சத்தம் போட்டுக் கொண்டே ஓடி வந்திருக்காங்க... சத்தம் கேட்டுப் பக்கத்திலிருந்த எல்லோரும் ஓடி வந்துட்டாங்க..." என்று மூச் சிரைக்கச் சொன்னான் உலகப்பன். கொஞ்சம் நிதானித்தவாறே மறுபடியும் தொடர்ந்தான்.

''நம்ம ரெண்டு பேரு ஊட்டுக்கும் இடையி லிருக்கிற சந்து வழியா யானை பூந்து ரவுசு பண்ணியிருக்குதே. வெளியே கூட்டமாய் நின்னு எல்லோரும் சத்தம் போட்டோம். 'ம்கூம்' யானை எதையும் கண்டுக்கலெ. பட்டாசு வெடிச்சதுக்க ப்புறம்தா அரிசி திங்கறத நிறுத்துச்சு. அப்படியே போகவும் முடியாமெ, சுவர் தடுத்திருக்கு. திரும் பவும் முடியாமெ அப்படியே ரிவர்சுலெ வந்து மிரண்டு கூட்டத்தெ ஒரு பார்வை பார்த்துச்சு... பட்டாசெ வெடிக்க வெடிக்க யானை பிளிறிக் கொண்டே வெளியே போயிடுச்சு... காட்டெ பாத்துத்தா போயிருச்சு...''

''ஆமா... அரிசி வாசத்தை மோப்பம் பிடித்துக் கொண்டே யானை ஊர் வரை வந்து உள்ளே புகுந்து விட்டதே...''

'தன் புருஷன் வந்துட்டார்னு' தெரிந்து கொண்ட மசிரியம்மாள் அழுது கொண்டே வீட்டிற் குள்ளிருந்து இரண்டு பெண்கள் சூழ வெளியே வந்தாள்.

"அரிசி போனாலும் பரவாயில்லை. பின்னா லிருந்த ரூம்லே ஓட்டை ஒடச்சு நாசம் பண்ணினா லும் பரவயில்லே. எல்லோரும் பட்டாசை வெடிச்சு யானையெ முடிக்கி உட்டாச்சு. ராத்திரி நீங்க எல் லாம் காட்டுக்குப் போயிருந்தீங்களா... உங்களை யெல்லா யானை தடத்திலெ வந்து குறுக்காட் டிருக்குமோ, என்னமோ ஏதோன்னு கவலையா யிருந்தா மசிரியம்மா. ஆனா நீங்க எல்லாம் யானை கிட்ட மாட்டாமெத் தப்பிச்சு வந்துருக்கீங் களே... கடவுள் புண்ணியம்..." மருதமலை இருந்த திசை நோக்கிக் கும்பிடு போட்டவாறே சொன் னாள் எதிர் வீட்டுக்காரி பாவாயம்மாள்.

'நீ எப்படியோ திரும்பி வந்துட்டெ' என்று வெங்கடாசலத்தைக் கட்டிக்கொண்டு அழ ஆரம் பிதாள் மசிரியம்மாள்.

கடைசி அறையின் கூரை ஓடுகள் உடைந் தும் சிதிலமடைந்துகிடந்த மரச்சட்டங்களையும் பார்த்தவாறே அவனும் அழ ஆரம்பித்தான்.

எது எப்படியோ, வேட்டைக்குப் போய் ஏதா வது கிடைத்துவிட்டது என்றால் விதவிதமாய்ச் சமைத்துப் போடுவாள் மசிரியம்மாள். அண்டை அயலாரையும் சேர்த்துக் கொண்டு நிலா வெளிச் சத்தில் வாசலில் எல்லோரும் வட்டமாய் உட் கார்ந்திருக்க, கறியும் சோறுமாய்ப் பரிமாறுவாள். பாட்டும் கூத்துமாய் ஒரே ஆரவாரமாய் இருக்கும்; வழக்கம் போல் நடக்கும் நிலாச் சோறு கொண் டாட்டம். ஆனால் இன்று இவர்களுக்குப் பதிலாக யானையல்லவா கொண்டாடிக் கொண்டு போயிருக்கிறது!

''மனுசங்க, காட்டில் இருக்கிற மிருகங் களைத் தாங்கள் தின்பதற்காக வேட்டையாடு றாங்க. காட்டில் இருக்கிற மிருகம் ஊருக்குள்ள வந்து மனுசங்க திங்கறதுக்கு வெச்சிருந்த அரிசியை வேட்டையாடிட்டுப் போயிடுச்சு...'' தெருவில் யாரோ இருவர் பேசிக் கொண்டு போனார்கள். ●

கட்டுரை

காளமேகம் எனும் கவிதைப் புயல்


காளமேகப் புலவர்

பெரும் காப்பியமோ, பேரற நூலோ படைக்காமல், தாம் எதிர்கொள்ளும் செவ்விகளுக்கேற்ப, அவ்வப்போது விளையாட்டுப் போல, ஏறக்குறைய 170 தனிப் பாடல்கள் மட்டுமே பாடி, தமிழ் வரலாற்றில் ஓர் அழுத்த மான இடத்தைப் பிடித்துக் கொண்டவர் காளமேகப் புலவர் ஒருவரே!

உட்கார்ந்து, யோசித்து, நீண்டநேரம் சிந்தனையில் ஆழ்ந்தெல்லாம் அவர் பாடுவதில்லை. அவர் எதிரே நின்று இளக்காரமாகவோ, எரிச்சலூட்டும் வகையிலோ, முடியுமா என்று சவாலுக்கு அழைப்பதாகவோ ஒருவர் அறைகூவல் விடும்போது, அடுத்த கணம் அவரிடமிருந்து வெண்பாக்கள், விருத்தங்கள், கட்டளைக் கலித்துறைகள், ஆசுகவிகளாகப் பீரிட்டு வழிகின்றன.

இப்படி அவரிடமிருந்து நமக்குக் கிடைத்தவை பல தனிப்பாடல் திரட்டுகளில் அங்கங்கே சிதறிக் கிடக்கின்றன. அவை சிலேடையாக இருக்கும்; வஞ்சப் புகழ்ச்சியாக இருக்கும்; வசையாகவும் இருக்கும். நகைச்சுவையும், கேலியும் எரிச்சலும் ஆகத் தமிழ் அங்கே பொங்கும்; சீறும்; கூத்தாடும்; கும்மாளமிடும்!

அதனால்தானோ என்னவோ, ‘வசைபாடக் காளமேகம்’ என்று தமிழுலகம் இவரைக் கொண்டாடுகிறது.

திருவானைக்கா உலா, திருவானைக்கா சரசுவதி மாலை, பரப்பிரம்ம விளக்கம், கல்வி விலாசம், கடல் விலாசம், சித்திர மடல் என்பனவாக இவர் எழுதிய சிற்றிலக்கியங்கள் புகழ் பெறாமல் போயிருக்கலாம்! ஆயின், தனிப்பாடல்களே இவரைக் குன்றின் மேலிட்ட கொப்பரைத் தீபமாய் ஒளிர வைக்கின்றன.

“தூது ஐந்து நாழிகையில், ஆறு நாழிகைதனில் சொற்சந்த மாலை சொல்ல, துகள் இலா அந்தாதி ஏழு நாழிகைதனில் தொகைபட விரித்துரைக்க, பாதஞ்செய் மடல் கோவை பத்து நாழிகைதனில், பரணி ஒரு நாள் முழுதுமே! பாரகாவியம் எலாம் ஓரிரு தினத்திலே பகரக்கொடி கட்டினேன்” என்று காளமேகம் கருதுகிறார். இதைப் புரிந்து கொண்ட அதிமதுரகவி என்பான்,



பொன்முடி சி. சுப்பையன்

"மூச்சு விடுமுன்னே முந்நூறும் நானூறும்
ஆச்சென்றால் ஐந்நூறும் ஆகாதோ? – பேச்சென்ன
வெள்ளைக் கவிகாள மேகமே! உன்னுடைய
கள்ளக் கவிநடையைக் கட்டு"

என்றான். அதற்குக் காளமேகத்திட மிருந்து பதில் வருகிறது...

"இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும்
அம்மென்றால் ஆயிரம்பாட் டாகாதோ? – சும்மா
இருந்தால் இருப்பேன் எழுந்தேனே யாகில்
பெருங்காள மேகம் பிளாய்" என்றார்.

'ஆசுகவி' என்பதற்குச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் அகராதி, 'கொடுத்த பொருளை அடுத்த பொழுதில் பாடும் பாட்டு' என்று விளக்கம் தருகிறது.

அப்படி ஆசுகவியால் அகிலப் புகழ் பெற்றவர் காளமேகம்! கேள்வி கேட்டவர் வாய் மூடும் முன்னதாகவே இவரிடமிருந்து விடையாக வெண்பாக்கள் வெளிவருகின்றன.

இவர் திருக்குடந்தையில் வைணவ வேதியராகப் பிறந்து, சீரங்கத்துப் பெருமாள் சன்னிதியில் பரிசாரகராக இருந்தார் என்றும், பின்னர் சிவதீட்சை பெற்று, சம்புகேசுவரத்தில் பரிசாரகராகப் பணியாற்றிய காலத்தில் அகிலாண்டேஸ்வரியம்மை அருளால் கவிபாடும் ஆற்றல் பெற்றார் என்றும் இவரின் இயற்பெயர் வரதர் என்றும், 'கவிபாடும் விரைவு' பற்றிக் காளமேகம் என்னும் பெயரடைந்தார் என்றும் செவிவழிச் செய்திகளால் அறிகிறோம்.

தலங்கள் தோறும் சென்று தனிப் பாடல்கள் பாடினார். பின் ஒரு சமயம் 'திருமலைராயன் பட்டினம்' சென்றார். அங்கே அப்பொழுது விஜயநகர அரசின் கால்வழி வந்த திருமலைராயன் என்ற சிற்றரசன் இருந்தான். தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தாலும், தமிழில் ஆர்வமுடையவன் அவன். 64 தண்டிகைப் புலவர்கள் அவன் அவைக்களத்தில் இருந்தனர். அவர்களுக்குத் தலைவன் அதிமதுரகவி!

மன்னனிடம் மதிப்பும் மரியாதையுமாக இருந்த அப்புலவர்கள், காளமேகத்தின் வருகையால் துணுக்குற்றனர். அவர் வருகையால், தம் மதிப்புக்கு ஊறு நேருமோ என அஞ்சினர். அவர்களைப் பார்த்து "நீங்களெல்லாம் யார்?" என்று கேட்டார் காளமேகம்!

"நாங்கள் கவிராயர்கள்" என்றனர் கனத்தோடு. 'கவி' என்றால் குரங்கு அல்லவா? அப்படியானால்,

"வால்எங்கே நீண்ட வயிறெங்கே? முன்இரண்டு
கால்எங்கே? உட்குழிந்த கண்எங்கே – சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்காள், நீவிர்
கவிராயர் என்றிருந்தக் கால்!"

என்று வம்புக்கு இழுத்தார். எரிச்சல் அடைந்த அவர்கள், "நீர் யார்? உம் பெயர் என்ன?" என்று கேட்க, "யாம் காளமேகம்" என்றார். "காளமேகமா? அப்படியாயின் பொழியுமோ?" என்று கேட்டனர். "ஆம்! பொழியும்! எப்படித் தெரியுமா?"

"கழியுந்திய கடல் உப்பென்று நன்னூற்
கடலின்மொண்டு
வழியும் பொதிய வரையினில் கால்வைத்து,
வன்கவிதை
மொழியும் புலவர் மனத்தே இடித்து முழங்கி
மின்னிப்
பொழியும் படிக்குக் கவிகாள மேகம் புறப்பட்டதே!"

இப்படியாக விவாதம் சூடேறிக் கொண்டிருக்கையில், இவரை எப்படியும் மடக்க வேண்டும் என்ற முனைப்பில், 'உமக்கு அரிகண்டம் தெரியுமா?' என்றான் அதிமதுரகவி.

"அப்படியென்றால்..."

"கழுத்தில் கத்தி கட்டிக்கொண்டு பாடுவது. கொடுத்த குறிப்புக்குப்

பாடாது போனால் வெட்டுண்டு சாவது."

"ஓ! அவ்வளவுதானா? நீங்கள் எம கண்டம் அறிவீர்களா? பூமியில் 16–க்குப் 16 அடிக் குழிவெட்டி, அதன் நாலு மூலைகளிலும் நான்கு கம்பங்கள் நிறுத்தி, நடுவே ஒரு சட்டம் போட்டுச் சட்டத்தில் உறி கட்டி, குழிக்குள் நெருப்பு மூட்டி, பெரிய கொப்பரையில் எண்ணெய் விட்டு அரக்கு, மெழுகு, குங்கிலியம், கந்தகம், சாம்பிராணி போட்டுக் கொதித்துக் கொண்டிருக்க, நேர் மேலே தொங்கும் உறியில் (ஊஞ்ச லில்) புலவர் அமர்ந்து, கொடுத்த சமிக் கைக்குப் பாடுவது.

பாட முடியாவிட்டால் நாலு பக்கமும் யானை இழுக்க, உறி மேலே போகும். அங்கிருக்கும் கூரிய வாள்கள் புலவன் உடலைப் பிளக்கும். வெட் டுண்ட புலவன் கொப்பறையில் விழுந்து பொரிந்து சாவது. இதுதான் எமகண்டம்" என்று காளமேகம் கூற, அதிர்ந்து போனான் அதிமதுரம்.

"சும்மா வாயினால் டம்பமாகச் சொல்வதென்ன? மாடு திருப்பியவன் அல்லவோ அர்ச்சுனன்? சொன்னபடி செய்வதல்லவோ கவுரவம்! ஆகையால் நீயே செய் பார்க்கலாம்" என்றான்.

"இந்த விசயத்தை நீ கேட்டதால் நான் சொன்னேன். ஆடவிட்டு நாடகம் பார்ப்பது போல நீ என்னைச் செய்யச் சொல்கிறாய்! 'அதிமதுர சிங்கம் பராக்' என்று விருது கூறி வந்தவன் நீதான். இதை நீதான் செய்ய வேண்டும். நீ தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறாய். நீ அஞ்சினால் ஒத்துக்கொள். நானே எம கண்டத்தில் ஏறிப் பாடுகிறேன், வென்று காட்டுகிறேன்" என்று கூறிய காள மேகம், சொன்னபடி ஏற்பாடு செய்த எமகண்டத்தில் அமர்ந்து பாடினார். 64 புலவர்களும் ஒவ்வொருவராக ஆளுக் கொரு குறிப்பைக் கொடுத்தார்கள்.

அதிமதுரகவி, முதல் சமிக்கை தந்தான். "திருமால் எடுத்த அவதாரம் பத்தினையும் ஒரு நேரிசை வெண்பா வில் அடக்கிப் பாடுக" என்று. அதற்குக் காளமேகம், "இதைப்பாட ஒரு முழு வெண்பா வேண்டுமோ? நான் பாதி வெண்பாவில் பாடுகிறேன்" என்று,

"மெச்சுபுகழ் வேங்கடவா வெண்பாவிற்
பாதியிலென்
இச்சையிலுன் சென்மம் எடுக்கவா – மச்சாகூர்
மாகோலா சிங்காவா மாராமா ராமாரா
மாகோபா லாமாவா வாய்"

என முடித்தார். மச்சா – மீன் அவதார மாக, கூர்மா – ஆமை அவதாரமாக, கோலா – பன்றி அவதாரமாக, சிங்கா – நரசிங்க அவதாரமாக, வாமா – வாமன அவதாரமாக, ராமா – பலராம அவ தாரமாக, ராமா – பரசுராம அவதார மாக, ராமா – தசரதராம அவதாரமாக, கோபால – கிருஷ்ணா அவதாரமாக, மாஆவாய் – இனி எடுக்கப்போகிற கல்கி அவதாரமாக ஆவாய்.

ஒரு புலவர், 'ஈ ஏற, அதனால் மலை குலுங்கியதாகப் பாடுக' என்க, "மலை என்ன, அண்ட சராசரங்கள் அனைத் தும் குலுங்கியதாகப் பாடுகிறேன்" என்று கூறிவிட்டுப் பாடினார்.

"வாரணங்கள் எட்டும் மகமேரு வுங்கடலும்
தாரணியும் எல்லாம் சலித்தனவால் – நாரணனைப்
பண்வாய் இடைச்சி பருமத்தினால் அடித்த
புண்வாயில் ஈமொய்த்த போது"

விலைமதிப்பற்ற மூலிகை!
தென் கொரியாவில் விளையும் 'கின்ஸென்' என்ற மூலிகை தங்கத்தை விட விலைமதிப்புள்ளதாகும். இம்மூலிகை இருதய நோய்க்கு அருமருந்தாகப் பயன்படுத்தப் படுகிறது.
– ஆர்.கே. லிங்கேசன்

வெண்ணெய் திருடிய கண்ணனைக் குழந்தையென்றும் பாராமல் ஆய்ச்சி ஒருத்தி மத்தினால் அடித்துவிட்டாள். கண்ணன் உடலில் அதனால் ஒரு காயம் ஏற்பட்டது. அந்தக் காயத்தில் ஓர் ஈ வந்து மொய்த்தது. கண்ணன் துடி துடித்துப் போனான். கண்ணன் துடித் தால் அண்ட சராசரங்களும் துடிக்கும் தானே! விரைந்து கற்பனை செய்து ஒரு தொன்மச் செய்தியைப் பயன்படுத்தி வெண்பாப் பாடிய காளமேகத்தின் திறன் பெரிது, மிகப்பெரிது!

இன்னொருவன் எழுந்து, சாத்திய மில்லாத ஓர் ஈற்றடியைக் கொடுத்துப் பாடுக என்றான். "குடத்திலே கங்கை அடங்கும்" என்பது அந்த ஈற்றடி.

கங்கையிற் போய்க் குடத்தில் நீர் மொள்ளலாம். ஆனால், முழுக் கங் கையும் குடத்தில் அடங்குமா? எப்படிப் பாடலைப் பாடப் போகிறார்? எமகண்டத்தில் காளமேகம் உயிர்விடப் போகிறார் என்று திருமலைராயனும், அதிமதுரமும் அவன் சீடர்களும் நினைத்திருக்க, காளமேகம் 'முடியும்' என்றார், பாடினார்...

"விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல்
மண்ணுக் கடங்காமல் வந்தாலும் – பெண்ணை
இடத்திலே கொண்ட இறைவர் சடாம
குடத்திலே கங்கை யடங்கும்."

"பகீரதன் தவத்தால் வானிலிருந்து பூமிக்கு வந்த கங்கையைச் சிவபெரு மான் தம் சடாமகுடத்தில் அல்லவா தாங்கிக்கொண்டார்?"

கேள்வி கேட்டவன் திகைத்துப் போனான். மூன்றாம் அடியின் இறுச் சீரை 'சடாம' என்று நிறுத்திக் கொண்டு, அடுத்த அடியின் குடத் தொடு இணைத்து 'சடாமகுடத்திலே கங்கை அடங்கும்' என்று பாடிவிட்டார் ஆசுகவி. கங்கை மட்டுமா அடங்கியது? கேட்டவனின் வாயுமல்லவா அடங்கிப்போயிற்று!

"பாம்புக்கும் வாழைப் பழத்திற்கும் சிலேடையாகப் பாடுக" என்றார் ஒருவர்.

"நஞ்சிருக்கும் தோலுரிக்கும் நாதர்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்திற் பற்பட்டால் மீளாது – விஞ்சுமலர்த்
தேம்பாயும் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பாகும் வாழைப் பழம்."

பாம்புக்கு = நஞ்சு இருக்கும், மாதம் ஒரு முறை சட்டை உரிக்கும், சிவன் முடியில் வீற்றிருக்கும், கொடுஞ்சினத் துடன் அதன் பல் நம் உடலில் பட்டால் உயிர் மீளாது.

வாழைப்பழத்திற்கு = நன்றாக நைந்து (பழுத்து) இருக்கும். இறைவன் மேனியில் அபிடேகப் பொருளாகத் தங்கும். வெஞ்சம் (உணவில்) பல் பட் டால் பழம் மீளாது, விழுங்கப்படும்.

ஒருவனுக்கு வேறொன்றும் கேட்கத் தோன்றவில்லை. "திருமலைராயன் வாள் பற்றிப் பாடுக" என்றான். புலவர் மிகவும் எளிதாக,

"செற்றலரை வென்ற திருமலைரா யன்கரத்தில்
வெற்றிபுரி யும்வாளே வீரவாள்! மற்றையவாள்
போவாள் வருவாள் புகுவாள் புறப்படுவாள்
ஆவா ளிவளாவா ளாம்"

பிற்பகுதி வெண்பாவைக் கேலிக் குறிப்பாக்கிப் பாடிவிட்டார்.

"சிவன், முருகன், விநாயகர், திருமால், சிவனடியார் இவர்களுக்குத் தனித்தனியே ஆறு தலை உண்டென்று பாடுக" என்றார் ஒருவர். காளமேகம் பாடினார்...

"சங்கரற்கு மாறுதலை சண்முகற்கு மாறுதலை
ஐங்கரர்க்கு மாறுதலை யானதே – சங்கைப்
பிடித்தோர்க்கு மாறுதலை பித்தாநின் பாதம்
படித்தோர்க்கு மாறுதலைப் பார்."

சங்கரற்கும் ஆறு தலை – தலையில் கங்கை ஆறு, சண்முகற்கும் ஆறு தலை – 6 தலைகள் முருகனுக்கு, ஐங்கரர்க்கு (விநாயகர்க்கு) மாறுதலை – மாறுபட்ட தலை. சங்கு கொண்ட திருமாலுக்கும் ஆறுதலை – ஆறே இருப்பிடம். அடி யார்க்கு ஆறுதல் ஐ – ஆறுதல் கொடு.

(அடுத்த இதழில் முடியும்)



உலக விவசாயிகளே ஒன்று சேருங்கள்!

இரா. வேணுகோபாலகிருஷ்ணன்

'ஓம் சக்தி' ஜூலை 2020 இதழில் வெளியான இலவச மின்சாரம் தொடர்பான விவாதத்திற்கு வாசகர்கள் எழுதிய விவாதக் கடிதங்கள் ஆகஸ்டு 2020 இதழில் வெளியாகியிருந்தன. சில வாசகர்கள் விவசாயத்திற்கு இலவச மின்சாரம் கூடாது எனக் கருத்துத் தெரிவித்திருந்தனர். ஒரு விவசாயி என்ற முறையில் இது பற்றி விவசாயிகள் தரப்புக் கருத்தினைத் தெரிவிக்க வேண்டியுள்ளது.

விவசாயத்திற்கு இலவச மின்சாரம் கூடாது என்று சொல்பவர்கள் விவசாயம் செய்வதில் உள்ள இடர்ப்பாடுகள் பற்றி எந்த அளவிற்குத் தெரிந்து எழுதுகிறார்கள் எனத் தெரியவில்லை. டாக்டர் பேச்சியப்பன் பாரதி என்பவர் எழுதியிருந்தது போல, விவசாயத்திற்குச் சூரிய ஒளி, காற்று, நீர் ஆகிய மூன்றும் தேவையானவை. இவற்றில் நீரைக் கொண்டு வருவதுதான் கடினம்.

விவசாயி ஒரு பயிரைப் பயிரிட்டு, வளர்த்து, அறுவடை செய்யும் வரை அவன் எதிர்கொள்ளும் சிக்கல்கள் எத்தனை என்று நகர்ப்புற மக்களுக்குத் தெரிய வாய்ப்பில்லைதான்.

பயிரிட்டு முடித்ததும் உடனே பயிர் விளைந்து பலன் பெற்று விடுவதில்லை. நீர் பாய்ச்சி, உரமிட்டு, களை எடுத்துப் பறவைகள், விலங்குகளிடமிருந்தும், பூச்சி, புழுக்களிடமிருந்தும் பயிர்களைக் காப்பதற்குள் விவசாயி படும் பாடு எத்தகையது என்பதை மின்விசிறிக்கடியிலும், குளிரூட்டப்பட்ட அறையிலும் அமர்ந்து கொண்டு எழுதிக் கொண்டிருப்பவர்கள் நேரில் வந்து அனுபவித்துப் பார்த்தால் தெரியும்.

காட்டுப் பன்றிகள் இரவு நேரங்களில் வந்து விளைபொருள்களைத் தின்று, பயிர்களையும் தாக்கி அழிக்கின்றன. இந்தக் காட்டுப் பன்றிகளை அழிக்க அரசு எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. யாரேனும் அழித்தால் அவர்களுக்குச் சிறைவாசம் உறுதி.

அடுத்து, காட்டு யானைகள். பன்றிகளைக் கூட ஏதோ ஒரு வகையில் விரட்டிவிடலாம். ஆனால் யானைகளிடமிருந்து பயிர்கள் மட்டுமல்ல, மனிதர்களும் தப்புவது கடினம். எத்தனையோ அப்பாவி விவசாயிகள் யானைகளுக்கு எந்தத் தீங்கும் செய்யாமல் யானைகளால் கொல்லப்பட்டுள்ளனர்.

தோட்டங்களில் உள்ள வீடுகளையும் தாக்கி, விவசாயிகளையும் தாக்கி, பயிர்களையும் அழிக்கும் யானைகளின் தொல்லைகளுக்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது? வனத்துறையினர் தகவல் அறிந்து வந்தால் பட்டாசு வெடித்து விரட்டுவார்கள். ஆனால், உயிரிழப்பிற்கு என்ன செய்துவிட முடியும்? குறைந்த அளவில் கொடுக்கப்படும் இழப்பீடுகள் உயிரிழப்பிற்கு ஈடாகிவிடுமா?

யானைகள் வலசைப்பாதையில் கல்லூரிகள், ஆசிரமங்கள் கட்டுவதைத் தடை செய்யாத அரசு, விவசாயிகளை மட்டும் யானை தின்னும் பயிர்களைப் பயிர் செய்யாதீர்கள் என்கிறது.

அடுத்து, மயில்கள். மயில் நம் நாட்டின் தேசியப்பறவை. இந்த ஒரு காரணத்தினால் இவற்றை யாரும் எதுவும் செய்துவிட முடியாது. ஆனால், இவற்றிற்காகக் காவல் இருப்பதற்கே ஒரு விவசாயி ஒரு நாளின் பெரும்பகுதியைச் செலவிட வேண்டியுள்ளது. மயில்கள், பயிர்களை முளையிலேயே கொத்தித் தின்றுவிடுகின்றன. பயிர் வளர்ந்து தானியம் விளைந்தாலும் அவற்றைக் கொத்தித் தின்கின்றன. இதனால் ஏற்படும் இழப்புகள் நகரத்தார்க்குத் தெரியுமா?

இவை மட்டுமா? முயல்கள், எலிகள், குள்ளநரிகள், பிற பறவைகள் என எத்தனை உயிரினங்களுக்குக் கொடை கொடுத்து ஒரு விவசாயி வேளாண்மை செய்கிறான் என்பது தெரியுமா?

இத்தனைக்கும் மேலாக இயற்கை. மழை பெய்ய வேண்டிய காலத்தில் பெய்தால் பரவாயில்லை. மழையின்றிப் பயிர்கள் கருகினால் அரசு கொடுக்கும் வறட்சிக்கான இழப்பீடு விவசாயி செலவிட்ட தொகையில் பாதிகூட இருக்காது. ஆனால், அத்தொகையும் ஒழுங்காகக் கைக்கு வந்து சேராது.

அதேபோல் பெரும் மழை, வெள்ளம் வந்து வேளாண்மையைக் கெடுத்தாலும், விளைநிலங்களைக் கெடுத்தாலும் விவசாயி எந்த அளவிற்குப் பாதிக்கப்படுகிறான் என்பது, இலவச மின்சாரம் கூடாதென்பவர்களுக்குத் தெரியுமா?

இன்றைக்கு எல்லாத் தரப்பிலும் கல்வி கற்றுப் பெரிய வேலைகளுக்குச் சென்று விடுகின்றனர். ஆனால், விவசாய வேலைகளுக்கு ஆட்கள் கிடைப்பது மிகவும் கடினம். யாரும் விவசாய வேலைகளை விரும்புவதில்லை. ஏதோ பழைய ஆட்கள் சிலர் இருக்கும்வரை இந்தப்பணி தொடரும். பின்னர்தான் விவசாயத் தொழிலின் நிலை என்னவாகும் என்பது தெரியும்.

விவசாயத்தை இயந்திரமயமாக்க வேண்டும் எனச் சொல்கின்றனர். ஆனால், விவசாய இயந்திரம் விவசாயி சாதாரணமாக வாங்கும் விலையில் இருக்கிறதா?

விவசாயி வாங்கும் உரமாகட்டும், பூச்சி மருந்தாகட்டும், பெரும் நிறுவனங்களால் விற்கப்படும் விதைகளாகட்டும் எவற்றையேனும் விவசாயி விலைபேசி வாங்க முடியுமா? உற்பத்தியாளர்கள் என்ன விலை சொல்கிறார்களோ, அந்த விலைதான்.

ஆனால், விவசாயி உற்பத்தி செய்யும் விளைபொருள்களுக்கு மட்டும் வியாபாரி விலை நிர்ணயம் செய்வது எந்த வகையில் அறமாக இருக்கிறது என்பதைப் பொதுமக்கள் சொல்லுங்கள். ஒரு பயிரை விளைவித்து அறுவடை செய்து, தூய்மையாக்கிக் கொண்டு வர விவசாயி படும் பாடு என்ன? வியாபாரி உழைத்த உழைப்பு என்ன?

சாதாரணத் தள்ளுவண்டியில் பழம் விற்கும் வியாபாரி, ஒரு பலாப்பழச் சுளையை ரூ. 2–க்கு விற்கிறார். சுளை கிலோ ரூ. 120–க்கு விற்கிறார். அறுக்காத முழுப்பழம் கிலோ ரூ. 80 என்கிறார். ஆனால், விவசாயி அவரிடம் ஒரு பழத்தைக் கொண்டு வந்து விற்றால் கிலோ ரூ. 5 அல்லது ரூ. 6–க்குத்தான் எடுப்பேன் என்கிறார். இதில் யார் அறிவாளி? யார் ஏமாளி?

புற்றுநோயைக் கட்டுப்படுத்தும் மருத்துவக் குணமுள்ள 'முள் சீத்தாப்' பழம் ஒன்றைத் தள்ளு வண்டி வியாபாரி எம்மிடம் ஒரு பழம் ரூ. 50–க்கு வாங்கினார். ஆனால், கண்ணெதிரே அப்பழத்தை ஒரு வாடிக்கையாளரிடம் ரூ. 120–க்கு விற்கிறார். விவசாயி பிழைப்பானா? வியாபாரி பிழைப்பாரா?

பாலுக்கு ரூ. 2 அதிக விலை என்று அரசு அறிவித்துவிட்டால் மாட்டுத் தீவன நிறுவனங்கள் உடனடியாகக் கிலோவிற்கு ரூ. 2 விலை அதிகமாக்கி விடுகின்றன. நாளெல்லாம் மாட்டை மேய்த்துப் பராமரித்துப் பால் கறந்து கொடுக்கும் விவசாயி என்ன லாபம் கண்டு விட முடியும்? பால் விலை ஏற்றம்



எனக் கண்டிக்கும் மேதாவிகள் நாள் தோறும் உயர்த்தப்படும் பெட்ரோல், டீசல் விலையேற்றத்தைப் பற்றி எண்ணிப் பார்ப்பதுண்டா?

தங்கம் இன்று ஒரு பவுன் ரூ. 42 ஆயிரத்தைத் தாண்டிவிட்டது. அதன் விலையைக் குறைக்கக்கோரி எவரேனும் போராட்டம் நடத்துகிறார்களா? இல்லையே! ஆனால், விவசாயி விளைவிக்கும் வெங்காயமோ, தக்காளியோ விலை கூடிவிட்டால், உடனே விலைவாசி விண்ணைத் தாண்டிவிட்டதென்று கூப்பாடு போட்டுப் போராட்டம் நடத்துகிறார்கள்.

பொதுவாக ஒரு பொருளைக் கடையில் வாங்கினால், வாங்குவோர் அதற்கு விற்பனை வரி செலுத்து கின்றனர். ஆனால், விவசாயி உற்பத்தி செய்யும் காய்கறிகளைச் சந்தைப்படுத்தும்போது கமிஷன் மண்டிக்காரர்கள் விற்கிற விவசாயியிடம்தான் 10 சதவிகிதம் கமிஷன் பிடித்துக் கொள்கிறார்களே தவிர, வாங்குகிற வியாபாரியிடம் கமிஷன் வாங்குவதில்லை. இது நகர்ப்புற நுகர்வோர்கள் எத்தனை பேருக்குத் தெரியும்?

எந்த வியாபாரி எவ்வளவு செல்வம் ஈட்டி வளமாக வாழ்ந்தாலும் சரி, அடிப்படைத் தேவையான உணவுப் பொருளை உற்பத்தி செய்யும் விவசாயி மட்டும் வளம் பெற்றுவிடக் கூடாதென்பதில் அனைவரும் ஒருமித்து நிற்கின்றனர்.

விவசாயி, நிலத்தடி நீரை தேவைக்கதிகமாக உறிஞ்சி ஆயிரம் அடி ஆழத்திற்குக் கொண்டு சென்றுவிட்டதாகக் கூறுகிறார்கள். பாட்டில்களில் அடைத்துக் குடிநீர் விற்கும் நிறுவனங்களைவிடவா விவசாயி தண்ணீரை உறிஞ்சிவிட்டான்? விவசாயி நிலத்தடி நீரைக்கொண்டு வேளாண்மை செய்து, இதைக் குறை கூறுவோர்க்கும் சேர்த்தே உணவை உற்பத்தி செய்கிறான். நீரை விலைக்கு விற்கவில்லை.

ஆறுகளில் ஓடும் நீரை வெளிநாட்டுக் குளிர்பான நிறுவனங்களுக்கு அரசே விற்கிறது. ஆனால், விவசாயிக்குப் பாசன வசதியைச் செய்து கொடுப்பதில் அக்கறை இல்லை. ஆறுகள் இணைப்பைப் பற்றிப் பேசுவதோடு சரி. எந்த நடவடிக்கையும் இல்லை.

அமெரிக்காவில் விவசாயிகளுக்கு அந்நாட்டு அரசு பெரும் மானியங்களைக் கொடுக்கிறதாம்! முன்னர் ஒரு முறை அங்கு மிதமிஞ்சிய விளைச்சல் ஏற்பட்டதால், ஓராண்டுக்கு வேளாண்மையே செய்ய வேண்டாம் என்று சொல்லி விவசாயிகளுக்கு அமெரிக்க அரசு மானியம் கொடுத்ததாகவும் செய்தி உண்டு. இங்கே விவசாயிகளுக்கு நகைக் கடனுக்குக்கூடத் தற்போது மானியம் நிறுத்தப்பட்டுவிட்டது.

நம் நாட்டில் வறட்சி என்றால் வறட்சி நிவாரணம் எனப் பெயரளவில் பேசப்படும். ஆனால் அது விவசாயிக்கு எட்டுவது எந்த அளவிற்கு என்று தெரியுமா? இந்த ஆகஸ்ட் 2020–இல் பெய்த கடும் மழையால் நிலத்தில் பயிரிட்டிருந்த வெங்காயங்கள் அழுகின. கடும் காற்றில் வாழைகள் சாய்ந்து அழிந்தன. ஏராளமான விளைநிலங்கள் நீர்ப்பெருக்கால் மண் அரிப்பிற்கு உள்ளாகின.



இந்தச் சேதங்களால் விவசாயி துன்புறுகிறானே என்று யார் ஓடோடி வந்து உதவுகிறார்கள்? செய்தித் தாள்களிலும், தொலைக்காட்சிகளிலும் செய்திகளைப் படிப்பதோடும், பார்ப்பதோடும் மேல்தட்டு மக்களின் செயல் முடிந்துவிடும். ஆனால், இழந்த இழப்பை ஈடுகட்ட மேலும் கடன்களுக்கு ஆளாகி உணவை உற்பத்தி செய்து தருபவன் விவசாயிதான்.

நெல்மணிகளிடையே பதர்கள் போல ஏதோ ஒரு சில விவசாயிகள் மின்சாரத்தைத் தவறாகப் பயன்படுத்தலாம். அதற்காக அனைத்து விவசாயிகளும் இலவச மின்சாரத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்பது தவறு.

இன்று விவசாயி மின் இணைப்புப் பெறுவதற்கு ரூ.3 லட்சம் வரை கட்டணம் அரசு நிர்ணயித்துள்ளது. தண்ணீருக்காக 900 முதல் 1000 அடிக்கு ஓர் ஆழ்துளைக் கிணறு அமைக்க ரூ. 2 லட்சத்திற்கு மேல் செலவாகிறது.

இவை போக ஆழ்குழாய்க் கிணற்றிலிருந்து நீர் இறைக்கும் மோட்டார், அதற்கான வயர், நீர் வரும் குழாய்கள், போக்குவரத்துச் செலவு, மோட்டார் இறக்குவதற்கான செலவு, ஆள் கூலி என ஓர் ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தண்ணீரைப் பாசனத்திற்குக் கொண்டு வருவதற்கு ரூ. 8 முதல் ரூ. 10 லட்சம் ரூபாய் வரையில் செலவாகிறது. இது ஒரு சாதாரண விவசாயிக்குக் கட்டுபடியாகக் கூடியதா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்!

விவசாயிகளே விளைபொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்ய அனுமதித்துவிட்டால், மின்சாரத்திற்குக் கட்டணம் செலுத்துவதில் எந்த இடர்ப்பாடும் இல்லை. ஆனால், விவசாயிகள் இலவச மின்சாரம் மட்டுமன்றி, இன்னும் பல சலுகைகள் தேவைப்படும் நிலையில்தான் உள்ளார்கள் என்பதே உண்மை நிலை.

மனம் பிறழ்ந்தவள் படைத்த முதல் சுயசரிதை



மார்ஜெரி கெம்ப்

மகாகவிஞன் மில்டன், தனது ஒப்பிலாக் காவியமான 'இழந்த சொர்க்கத்தில்' (Paradise Lost) நரகத்தை விவரிக்கும்போது, அங்கே ஒரு பெரும் அடுப்பு எரிந்துகொண்டிருந்ததாகவும், அதில் எழுந்த கனல், வெளிச்சத்திற்குப் பதிலாக இருளைக் கவித்ததாகத் தீயின் பொருளையே தனது கவித்துவத்தால் தலைகீழ் செய்திருப்பான்.

சொர்க்கம், நரகம் – இவ்விரு எண்ணக் கருத்துக்கள் முறையே, மனித வாழ்வில் பேரின்பம், பெருந்துன்பம் என்பவற்றின் குறியீடுகளாய் இந்த நொடிவரை தொடர்கின்றன. இறை இலக்கியங்களிலோ அவ்விரண்டும் கடவுள் மற்றும் சாத்தானின் வசிப்பிடங்களாய்க் காட்டப்படுகின்றன.

அவ்வாறாக, ஆனால் மில்டன் காட்டிய நரகத்தைவிட, அவனுக்கு முன்பே 14–ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வாழ்ந்த பெண்மணி ஒருத்தி விவரித்த நரகம், அவளை இரவிலும் பகலிலும் துன்பத்தில் தோய்த்தெடுத்த ஒன்றாய் இருந்தது.

நெருப்பையே பெருமூச்சாய்ச் சுவாசித்து, அவளைச் சுற்றி நின்று ஓலம் எழுப்பிய நரகத்து ஆவிகள், அவளை விழுங்கப் போவதாய் மிரட்டின. அத்தீய ஆவிகளால் போகுமிடமெல்லாம் துரத்தப்பட்ட அவள், இவ்வுலகில் வாழ விருப்பமின்றிச் சாவின் கதவைத் தட்டிப்பார்த்தாள்.

உயிரென்னும் பெருஞ்சுமையை இறக்கிவைக்க வழி தெரியாமல், தன்னைத் தானே தனது நகங்களால் பிராண்டிக் கொண்டு, தனது கையை, தானே இரத்தம் கசியக் கடித்துக் காயப்படுத்திக் கொண்ட அப்பெண்மணியே, ஆங்கில இலக்கிய வரலாற்றுக்கு முதல் தன்வரலாற்று நூலைத் தந்தவள்.

இன்றைய இங்கிலாந்தில் 'கிங்ஸ் லின்' (King's Lynn) என்ற நகரம், சாதாரணமாக 'லின்' (Lynn) என்று அழைக்கப்பட்ட காலத்தில், மார்ஜெரி கெம்ப் (Margery Kempe) ஒரு செல்வச்செழிப்பு மிகுந்த குடும்பத்தில் பிறந்திருந்தாள். அந்நாளைய பாராளுமன்ற உறுப்பினராகவும் 'லின்' நகரத்துத் தந்தையாகவும் (Mayor) புகழ்பெற்றிருந்த ஜான் பிரோனம் (John Bruhnum) என்பவரின் மகளான மார்ஜெரி, இலத்தீன், பிரெஞ்சு மொழிகளைப் பயின்று, உயர் பதவி எதையும் அடையவில்லை என்றாலும், குதிரையால் இயக்கப்பட்டுத் தானியங்கள் அரைக்கப்படும் ஆலை (Horse


Mill) ஒன்றையும், 'பியர்' எனும் மது வகையைக் காய்ச்சும் கூடம் (Brewery) ஒன்றையும் நிர்வகித்து வந்தாள்.


ஜான் கெம்ப் (John Kempe) என்பவரை மணந்து பதினான்கு பிள்ளைகளைப் பெற்ற மார்ஜெரியின் முதல் மகப்பேறு மிகுந்த சிக்கலும் சிரமமும் கொண்டதாய் இருந்ததால், அதன்பின் அவளிடம் ஏற்பட்ட உளவியல் மாற்றங்களை, தற்காலத்தில் சில பெண்களுக்கு ஏற்படும் 'மகப்பேற்றிற்குப் பின்னான மனச்சோர்வு' (Postpartum Depression) என்ற நோயை ஒத்திருக்க வேண்டும் என 'தி புக் ஆஃப் மார்ஜெரி கெம்ப்' (The Book of Marjery Kempe) என்ற மார்ஜெரியின் தன்வரலாற்று நூலை ஆய்ந்து கண்டறிகின்றனர் இன்றைய மனநல மருத்துவர்களும் உளவியல் நிபுணர்களும்.

பெண் என்பவள் 'கற்பு' என்ற ஒன்றைக் கொண்டிருப்பதாகவும், ஓர் ஆணுடன், அவள் புணர்ச்சியில் ஈடுபடும்போது, அதை இழந்து மாசு நிறைந்தவளாக மாறிவிடுவதாகவும் சமயங்கள் உருவாக்கிய ஆழமான கருத்தாக்கம் மார்ஜெரியையும் விட்டுவைக்கவில்லை.

இயற்கையின் உந்துதலால், அப்படி ஓர் ஆணோடு புணர்ச்சியில் ஈடுபட்டு, தனது 'தூய்மையை' இழந்துவிட்ட பெண், சமயம் உருவாக்கிய கற்பென்னும் கருத்தாக்கத்தால், தான் ஒரு பாவச்செயலைப் புரிந்துவிட்டதாகவே தனது நெஞ்சத்தில் ஒரு முள்ளின் நெருடலை உணர்கிறாள்.

அந்த முள்ளைக் களைந்து கொள்வதற்கு அவள் தேவாலயத்திற்குச் சென்று ஒரு சமய குருவிடம் தன் பாவங்களைச் சொல்லி மன்னிப்புக் கோர வேண்டும். அவரும் அவளது 'பாவங்களை' ஒப்புக்கொண்டு, தேவனின் பேராலே, அவளுக்குப் பாவமன்னிப்பை வழங்க வேண்டும்.









மார்ஜெரியும் அப்படியோர் 'பாவத்தைச்' செய்திருக்கக் கூடுமென்று ஆங்கில இலக்கியத் திறனாய்வாளர்களும் உளவியல் நிபுணர்களும் அவளது தன் வரலாற்று நூலின் வழியே அனுமானிக்கின்றனர்.

பாலுறவு குறித்த வெறுப்பு அவள் மனமெங்கும் வியாபித்திருந்ததை அவளது எழுத்தின் வழியே காணும் அவர்கள், அதற்கான கருதுகோளை, தான் திருமணம் செய்திருக்கக் கூடாதென்றும், பாலுறவில் ஈடுபட்டிருக்கக் கூடாதென்றும், மார்ஜெரி, தனது நூலில் கூறுவதை வைத்தே முன்வைக்கின்றனர்.

வாழ்வில் நெடுங்காலமாய் தனக்குள் மறைத்து



பா. மீனாட்சிசுந்தரம்



யாத்ரிகர்களுடன் மார்ஜெரி கெம்ப்

வைத்திருந்த ஒரு ‘பாவத்தை’ திருச்சபைச் சமய குருவிடம் வெளிப்படுத்த, மார்ஜெரி ஒருநாள், தேவாலயம் சென்றாள். ஆனால், அதை அவள் முழுதாய்க் கொட்டித் தீர்க்கும் முன்னரே அந்தச் சமயகுரு அவளைக் குற்றங்கூறி விமர்சித்ததால், மனம் வெதும்பி மனை திரும்பினாள் மார்ஜெரி.

அவ்வாறு, தான்புரிந்த ஒரு ‘பாவச் செயலுக்கு’ மன்னிப்பைப் பெற முடியாத மார்ஜெரியைத்தான், நெருப்பைச் சுவாசித்த நரகத்தின் ஆவிகள் விழுங்கப் போவதாய் அன்றாடம் துரத்திக் கொண்டும் மிரட்டிக் கொண்டும் இருந்தன.

மனப்பிறழ்ச்சி அடைந்த மார்ஜெரிக்கு இப்பெருந்துன்பமே தன்னைத் தானே வதைத்துக் கொள்ளவும், இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலை பெற, உயிரை மாய்த்துக் கொள்ளவும் தூண்டியது.

ஓர் இரவு நேரம். மார்ஜெரி தனிமையில் தூங்கிக் கொண்டிருந்தபோது, அவளது படுக்கையின் ஓரம், கண்கவரும் தனது ஊதாநிறப் பட்டாடையில் அமர்ந்திருந்தான் தேவகுமாரன்.

“மகளே, உன்னை நான் கைவிடாத போது, நீ ஏன் என்னைக் கைவிட்டாய்?” இப்படி மார்ஜெரியிடம் கேட்டுவிட்டு, ஒரே கணத்தில் காற்றோடு எழுந்து, மெதுவாய் மறைந்து போனான் தேவகுமாரன்.

இன்னும் சில தருணங்களில், மார்ஜெரியின் காதுக்குள் அவன் உரத்துப் பேசினான். ஒரு புறாவின் கொஞ்சும் குரலாகவும், ஒரு ‘ரெட் ப்ரெஸ்ட்’ (Red Breast) பறவையின் இனிய பாடலாகவும், சில வேளைகளில், மார்ஜெரிக்கு ஒலித்தான் தேவகுமாரன்.

அவ்வேளைகளில், சிறிது மன அமைதி பெற்றிருந்தாள் மார்ஜெரி.



தேவனின் கட்டளையென, பின்னாளில் எத்தனையோ புனிதத் தலங்களுக்கு யாத்ரீகக் குழுக்களோடு கடல்வழிப் பயணம் செய்த மார்ஜெரி, தேவகுமாரனைத் தனக்குள் உணர்ந்தபோதெல்லாம் சப்தமிட்டு அழுதும், கண்ணீர் மல்கியும், தன்னோடு பயணித்த யாத்ரீகர்களுக்குப் பெருந்தொந்தரவாய் இருந்தாள்.

ஒருமுறை, தேவகுமாரன் சிலுவையில் அறையப்பட்ட கல்வாரி மலையை, எருசலேத்திலிருந்து ஒரு கழுதை மீதமர்ந்து அவள் அடைந்தபோது, அவளது நேசத்திற்குரியவன், கைகளில் ஆணிகள் அடிக்கப்பட்டு, இரத்தம் வடியச் சிலுவையில் அறையப்பட்டுக் கொண்டிருந்தான். அக்கொடூர நிகழ்வைக் காணச்சகியாது, மார்ஜெரி, தரையில் விழுந்து, உருண்டும், புரண்டும் கண்ணீர் வடித்துக் கதறினாள்.

இப்படியான உணர்ச்சி நிலையில் உரக்கக் கத்துவதும், கண்ணீர் வடிப்பதும் மார்ஜெரியின் இயல்பாய் இருந்தது. பதினான்குக் குழந்தைகளைப் பெற்றும், 'கற்பின்' நிறமான வெண் மையை உடுத்திக்கொண்டு, 'இயேசு என் நேசத்திற்குரியவர்' (Jesus My Love) என்ற வாக்கியம் பொறிக்கப்பட்ட மோதி ரத்தை அணிந்துகொண்டு, புனிதப் பயணங்களையே தனது வாழ்வாகக் கொண்டிருந்த மார்ஜெரி, விசித்திரங் களின் தோற்றமாய் இருந்தாள்.

ஒருமுறை அவளது ஓலத்தாலும், உரத்த பிரார்த்தனைகளாலும் எரிச் சலடைந்த சக யாத்திரீகர்கள், அவள் அணிந்திருந்த நீளமான அங்கியைக் கிழித்து, அதை முழங்காலுக்கு மேல் நிற்கிற குட்டைப் பாவாடையாய் வெட்டி, அதை, அவளுக்கு அணியவும் செய்வித்து அவமானப்படுத்தியதை, தனது வாழ்க்கை வரலாற்று நூலில் குறித்துச் செல்கிறாள் மார்ஜெரி.

பிறிதொரு நாளிலும் அவளது தெய் வீகக் காட்சிகளின் வெளிப்பாட்டை ஒரு விசித்திரச் செயலாய்க் கண்டவர் கள், அவளை, ஒருவித நோய்மை கொண்டவளாகவும், அளவிற்கு அதிக மாக மதுவை அருந்தியவளாகவும் சபித்துச் சென்றனர்.

இன்னொரு நாள், தேவனின் கட் டளைகளை இதயப்பூர்வமாய் உணராத ஒரு சமய குருவை, மார்ஜெரி நேரடி யாக விமர்சனம் செய்தபோது, அக் காலச் சமய எதிப்பாளரான ஜான் விக்லிஃப்பின் (John Wycliffe) 'லோலெட்' (Lollard) இயக்கத்தைச் சார்ந்தவள்தான் மார்ஜெரி என்றும், அதனால், அவளை தீயிலிட்டுக் கொளுத்தப் போவதாகவும் திருச்சபை ஊழியர்கள் எச்சரித்தனர்.

மனநலதிற்கான சிகிச்சையும் மருத்துவமும் தோன்றியிராத 14–ஆம் நூற்றாண்டில், மார்ஜெரியைப் போல், தேவனின் குரலைக் கேட்டதாகக் கூறிக் கொண்டவர்கள், அறிவுக்கு எட்டாத


ஹார்ஸ் மில்

ஒருவித ஞானத்தைப் பெற்றவர்களாகக் கருதப்பட்டனர். கிறித்துவமும் அவர் களை தேவனாலோ, சாத்தானாலோ ஆட்கொள்ளப்பட்டவர்களாக நம்பியது.

ஆனால் இன்றைய உளவியல் கோட்பாடுகள், மார்ஜெரி வெளிக் காட்டிய அதீத உணர்ச்சிகளை அவளது மனத்தின் ஊனநிலையாகவே பார்க் கின்றன. அப்படிப்பட்ட அதீத உணர்ச்சிகளே அன்றைய நாட்களில் மார்ஜெரியைப் போன்ற ஒருவர் ஆன் மீகத்தில் கொண்டிருந்த அடிப்படை நேயமாகவும் உணர்வாகவும் இருந்தது.

தான்சொல்ல எழுத்தர்கள் சிலரால் எழுதப்பட்ட மார்ஜெரியின் தன்வர லாற்று நூலில், மார்ஜெரி, தன்னை, 'இந்த உயிரினம்' (This Creature) என்றும், 'அவள்' (She) என்றும் மூன்றாம் நபராக அழைத்துக்கொள்கிறாள்.

இந்நூலிற்காக மார்ஜெரியின் இதழ் கள் உதிர்த்த ஒவ்வொரு சொல்லும் தேவகுமாரன் மீதான அவளது அளவற்ற அன்பில் நிறைகிறது. தனது கைகளில் அடிக்கப்பட்டிருக்கிற ஆணிகளின் இறுக்கம் தளர, சிலுவையைவிட்டுக் கீழிறங்கி, தேவ குமாரன், தன்னை ஒருநாள் கட்டித் தழுவத்தான் போகிறான், என்ற நம்பிக் கையில், இந்நொடியிலும் அவன் முன்னே நின்று கொண்டிருக்கிறாள் மார்ஜெரி.



விவாதம்

இன்றைய தேவை இரு மொழியா? மும்மொழியா?

34 ஆண்டுகளுக்குப் பிறகு பிரதமர் மோடியின் மத்திய அரசு புதிய கல்விக் கொள்கையை வெளியிட்டுள்ளது. இதற்கு இந்தியாவிலுள்ள 28 மாநிலங்கள் மற்றும் 8 யூனியன் பிரதேசங்களில், தமிழ்நாட்டில் திராவிட இயக்கங்கள், பொதுவுடைமை இயக்கங்கள், விடுதலைச் சிறுத்தைகள், பா.ம.க., ம.தி.மு.க., மனிதநேய மக்கள் கட்சி ஆகியவை எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்துள்ளன. இப்புதிய கல்விக் கொள்கையில் இந்தியும், சமஸ்கிருதமும் இடம் பெற்றுள்ளதால்தான் இந்த எதிர்ப்பு எனப்படுகிறது.

ஏற்கனவே, தமிழ்நாட்டில் இரு மொழிக் கொள்கை கடந்த 1967 முதல் தொடர்ந்து இருந்து வருவதால், தமிழ் நாட்டிற்கு மும்மொழிக் கொள்கை அவசியமில்லை என்கிறார்கள். மும்மொழித் திட்டம் என்பது இந்தி மொழியை மறைமுகமாகத் திணிப்பதற்கான முயற்சி எனத் தி.மு.க. கூறி வருகிறது.

இதேபோல் இக்கல்விக் கொள்கையில் குழந்தைப் பருவத்திலேயே அவர்கள் விரும்பும் மின்சார வேலை போன்றவற்றைக் கற்றுக் கொடுக்கத் திட்டமிட்டால், அதனைக் குலக்கல்வி எனவும் குறை கூறுகிறது.

பொள்ளாச்சியில் அரசு அனுமதித்த ஒரு பள்ளி. அதில் 3 நாள் படிப்பு, 3 நாள் தொழில் என்று 30 ஆண்டுகளாக உள்ளது. அதற்குத் தேசிய விருதும் கிடைத்துள்ளது. அப்பள்ளி குலக்கல்வியையா கற்பிக்கிறது?

2019 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டிலிருந்து 39 எம்.பி.க்களில் 38 பேர் ஆளும் கட்சியிலிருந்து அல்ல, எதிர்க்கட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அப்படி ஓர் அதிருப்தி அலை ஆளும் கட்சி மீது அன்றைக்கு வீசிய காரணத்தால், வெற்றிபெற்ற 38 பேரில் 4 எம்.பி.க்கள் கம்யூனிஸ்டுகள்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆளும் கேரளாவில் மும்மொழிக் கல்விக் கொள்கைக்கு எதிராக மார்க்சிஸ்ட் கட்சி மூச்சு விடுவதில்லை. திரிபுரா, மேற்கு வங்கம் மாநிலங்களிலும் மும்மொழிக் கொள்கையை மார்க்சிஸ்டுகள் எதிர்க்கவில்லை. கம்யூனிஸ்டுகள் தமிழ்நாட்டில் மட்டும் எதிர்க்கக் காரணம், இவர்கள் இடம் பெற்றுள்ள கூட்டணியின் கல்விக் கொள்கை என்பதால்தான்.

மும்மொழிக் கொள்கையைக் கம்யூனிஸ்டுகள் ஆதரிப்பார்களானால், கூட்டணியிலிருந்து விலக்கப்படுவார்கள்.

இந்தித் திணிப்பைப் பற்றி மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் குறிப்பிடுகையில், இந்தப் புதிய கல்விக் கொள்கையில் உள்ள மூன்று மொழிகள் என்பது எண்ணிக்கை மட்டும்தான்.

அந்த மூன்று மொழிகளின் பட்டியலில் ஜெர்மன், பிரெஞ்ச், இங்கிலீஷ், ஜப்பான், அரபி முதலிய வெளிநாட்டு மொழிகளில் ஏதேனும் ஒன்றைப் புதிய கல்விக் கொள்கைப்படி படிக்கலாம். தமிழ்நாட்டில் ஆங்கிலம் படிக்கிறார்கள்.

சமஸ்கிருதம், இந்தி, வங்காளம், பஞ்சாபி முதலிய இந்திய மொழிகளில் ஏதேனும் ஒன்றைப் படித்துக் கொள்ளலாம்.

தமிழ்நாட்டில் வாழ்வதற்குத் தமிழும், இந்தியாவில் வாழ்வதற்கு ஆங்கிலமும் போதும் என்கிறவர்கள், மூன்றாவது மொழியே அவசியமில்லை என்கிறார்கள். மூன்றாம் மொழி படிப்பது மாணவர்களைத் துன்புறுத்தும் எனவும் இரு மொழிகள் என்றால்தான் மாணவர்களுக்கு இலகுவாக இருக்கும் என்கிறார்கள்.

மூன்றாவது மொழி படிப்பது என்பது 30 வயது அரசியல்வாதிகளுக்கு அல்ல. 12 வயதுப் பள்ளி மாணவர்களுக்குத்தான்.

புதிய கல்விக் கொள்கை 5–ஆவது வயது வரை தாய்மொழியில்தான் கட்டாயம் கற்க வேண்டும் என்கிறது. 5–வது வயதில் முதல் வகுப்பிலிருந்து 8–ஆவது வகுப்பு வரை விரும்பினால் தாய்மொழியில் கற்கலாம்.

பிஞ்சு வயதில் கற்கிற மாணவர்களுக்கு எதைக் கற்றுக் கொடுத்தாலும் அது பசுமரத்தாணி போல் பதிந்துவிடும். மூன்று மொழி என்ன? ஏழு மொழிகளைக் கூட விளையாட்டாகவே கற்றுக் கொள்வார்கள். அதைச் சுமை என்பவர்கள் அரசியல்வாதிகள்தான்.

இருமொழிக் கொள்கையில் தமிழ்நாட்டில் ஒரு மொழி தமிழ். மற்றொரு மொழி ஆங்கிலம்.

நடைமுறையில் நாம் என்ன பார்க்கிறோம்? நடுத்தரப் பிரிவினர்கூட அல்ல, அதற்கும் கீழுள்ள சாமான்யப் பெற்றோர்கள்கூட, தங்கள் பிள்ளைகளை நன்கொடை கொடுத்தாவது ஆங்கிலம் கற்றுத் தருகிற தனியார் மெட்ரிக் பள்ளிகளில் சேர்க்க வேண்டும் என்றே அலைகிறார்கள்.

இதன் காரணமாக, அரசுப் பள்ளிகளிலும் ஆங்கில வழிப் போதனை வகுப்புகளைத் தமிழக அரசு தொடங்க வேண்டியதாகியது. அரசுப் பள்ளிகளில் இலவசமாகவே வந்து படியுங்கள் என்று அழைக்கவும் பட்டனர்.

இதனால், இருமொழிக் கொள்கை தமிழ்நாட்டில் ஒருமொழிக் கொள்கையாகிவிட்டது. அதுவும் ஆங்கிலத்தின் மீது அதிக மோகமும், தமிழைத் தவிர்க்கவுமானதாகிவிட்டது.

தமிழ்நாட்டிலுள்ள சுமார் 4500 அரசு மற்றும் அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளில், ஆங்கிலவழிக் கற்பித்தல் இல்லை என்பதாலும் 5800 மெட்ரிகுலேசன் மற்றும் சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் ஆங்கிலவழிக் கற்பித்தல் இருப்பதாலும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அரசுப் பள்ளிகளில் சேர்க்காமல் ஆங்கிலவழிப் பள்ளிகளில் சேர்ப்பதற்காகவே அலைகிறார்கள்.


அரசுப் பள்ளிகளின் நிலைமை காலப் போக்கில் மோசமடைந்தது. ஆயிரக்கணக்கான பள்ளிகள் மூடப்படும் நிலையும் அண்மையில் ஏற்பட்டதை நாம் அறிவோம்.

நீதியரசர் மகாதேவன் ஓர் உத்தரவே போட்டார், அரசுப் பணியாளர்களும் பள்ளி ஆசிரியர்களும் தங்கள் பிள்ளைகளை அரசுப் பள்ளிகளில்தான் சேர்க்க வேண்டும் என்று. என்ன ஆயிற்று அந்த உத்தரவு?

இருமொழிக் கொள்கையை வலியுறுத்துகிற பிரதான எதிர்க்கட்சிகளின் குடும்பத்தார் நடத்துகிற தனியார் பள்ளிகளில், மும்மொழிக் கொள்கையைத்தான் நடைமுறைப் படுத்துகிறார்கள். அதேசமயம் மும்மொழிக் கொள்கையை மைதானத்தில் நின்று எதிர்க்கிறார்கள். அவர்கள் நடத்துவது போராட்டமல்ல, பித்தலாட்டம்.

மத்திய அரசின் நியூட்ரினோ திட்டமானாலும், எண்ணெய்க் குழாய் பதிப்பதாக இருந்தாலும், ஹைட்ரோ கார்பன் திட்டமானாலும், எட்டுவழிச் சாலையானாலும், அணுமின் திட்டமானாலும், நீட் தேர்வானாலும் மத்திய அரசை எதிர்ப்பது என்பதே தமிழ்நாட்டில் வழக்கமாகிவிட்டது. பிற மாநிலங்களில் இப்படி இல்லை.

மத்திய அரசு வலுவாக இருப்பதால்தான் காவிரியில் தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் தரப்படவில்லையென்றால் அதனிடம் முறையிடுகிறோம். உத்தரவு வருகிறது. தண்ணீர் கிடைக்கிறது. முல்லைப் பெரியாறு அணையின் உயரத்தை 152 அடி உயர்த்த முதலில் மத்திய அரசிடம்தான் சொன்னோம். பிறகுதான் உச்சநீதிமன்றம் சென்றோம்.



இலங்கையில் தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்பட்டால், அவர்களை விடுதலை செய்ய மத்திய அரசிடம்தான் கேட்கிறோம்.

நமது தேசம் ஒரு சமஷ்டி தேசம். இதில் இடம்பெற்றுள்ள 28 மாநிலங்கள், 8 யூனியன் பிரதேசங்கள் ஒவ்வொன்றும் சிலவற்றை விட்டுக் கொடுக்கத்தான் வேண்டும். சிலவற்றைப் பெற்றுக் கொள்ளவும் வேண்டும்.

தேச ஒற்றுமையைக் காட்டத்தான் இந்தியா முழுவதற்கும் ஒரே ரேசன் கார்டு. இதில் என்ன தவறு? நமது நாட்டின் தேசிய மொழிகள் 22 என அரசியல் சாசனம் சொல்வது உண்மையாக இருந்தாலும், 22 மொழிகளிலும் நிர்வாகம் செய்வது தேசிய விரயமாகிவிடும்.

அதற்குப் பதிலாக, இந்தியாவில் டெல்லி, மத்தியப்பிரதேசம், உத்தரப் பிரதேசம், பீகார், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், ராஜஸ்தான் முதலிய 9 மாநிலங்களில் ஏறக்குறைய 70 கோடிப் பேர் உள்ளனர். பாமரன் முதற்கொண்டு அங்கெல்லாம் இந்தியில் பேச முடியும்.

70 கோடிப்பேர் இவ்வாறு ஏற்கனவே பேசிக் கொண்டிருக்கிற ஒரு மொழியை, அவரவர் தாய்மொழிக்கு எந்தச் சேதாரமும் இல்லாமல் மிச்சமாகவுள்ள குழந்தைப் பிராயத்தினரும்

Right to Education

தமிழ்நாட்டில் பெரும்பாலான அரசியல் கட்சிகள் மும்மொழிக் கொள்கையை எதிர்க்கின்றன என்பதால், அதன் அவசியத்தைக் கருதுகிற பெற்றோர்கள், உயர்நிலைப் பள்ளிகளுக்குச் சென்று தங்கள் பிள்ளைகள் இரு மொழிகளைப் படிப்பதோடு, மூன்றாவது மொழியாக ஏதேனும் ஒன்றைப் படிக்க வசதி வேண்டும் என்று கோரிக்கை மனுக் கொடுப்பதும் கல்வி உரிமைச் சட்டத்திற்கு உரியதாகும்.

படித்துக் கொள்வது பஞ்சமாபாதகம் அல்ல.

இந்த முயற்சி சென்ற 10 ஆண்டுகளுக்கு முன்பே தென் மாநிலங்களான கேரளா, ஆந்திரா, கர்நாடகாவில் தொடங்கிவிட்டதால், இப்போது அங்கு இந்தி மொழி திணிப்பாக இல்லாமல், இனிப்பாகவே கருதப்படுகிறது.

ஒரு வேளை இதைச் சூது, வஞ்சகம், சதி எனத் திராவிடக் கட்சிகள் கருதுமேயானால் ஒன்றைச் செய்யலாம். இந்தி மொழியை ஆங்கில எழுத்துக்களில் தமிழ்நாட்டில் படித்துக்கொள்ளக் கேட்கலாம். முன்பு இந்திய தேசிய ராணுவத்தில் இப்படித்தான் இந்தி மொழி கற்பிக்கப் பட்டது.

'கியா' என்ற இந்திச் சொல்லுக்கு 'என்ன?' என்று அர்த்தம். 'கியா' என்பதை இந்தி எழுத்துக்களில் படிக்காமல் Kiya என்று ஆங்கில எழுத்துக்களில் படித்துக் கொண்டாலே போதும். ஒரு வகையில் இந்தியைப் படிக்காதவராகவும், இன்னொரு வகையில் ஆங்கிலத்தைக் கைவிடாதவராகவும் ஆக முடியும். மூன்று மொழிக்கொள்கையைச் சாத்தியப் படுத்த இப்படியும் சிந்திக்கலாம்.

தமிழில் பிற மொழிகளின் கலப்போ, திணிப்போ கூடாது என்கிற திருவாளர் பரிசுத்தங்கள் ஒன்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் கையாள்கிற எண்கள் I, II. III. ரோமன் எண்கள். அநேகமாக ஆங்கிலத்திலும் இதுதான். இந்தியில் १ २ ३ எனவும், தமிழில் க உ ங என்றும் எண்கள் உள்ளன. இவற்றை யார் இப்போது கையாண்டாலும் மற்றவர்களுக்குப் புரியாது. முன்பு புரிந்திருக்கலாம்.

உலகம் முழுவதும் இப்போது கையாளப்படுகிற எண்கள் 1, 2, 3 ஆகியவற்றின் தொடர்ச்சிதான். இவை அரேபிய மொழி எண்கள். தமிழிலும் இதைத்தான் கையாள்கிறோம். இது எல்லோருக்குமே புரிகிறது.

அரேபிய எண்களை எதிர்த்துத் தமிழ் எண்களான க உ ங ஆகியவற்றைத்தான் கையாள வேண்டுமென நாம் போராடவில்லை. ஏன்? பழகிக் கொண்டுவிட்டோம். அதுபோல, மூன்றாவது மொழி ஒன்றைப் பழகிக் கொள்வது பாவம் அல்ல.

இதுவரை இந்தியாவில் சிக்கலான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காகப் பொது வாக்கெடுப்பு (Plebiscite) என்பதைப் பரிசீலிக்கவே இல்லை. அப்படிப்பட்ட ஒரு பொது வாக்கெடுப்பை இன்றைய மும்மொழிக் கொள்கைக்காகவே நடத்தலாம். மூன்றாவது விருப்ப மொழிகளாகப் பஞ்சாபி, குஜராத்தி, வங்காளி, இந்தி, சமஸ்கிருதம் இவற்றை வைக்கலாமா? வேண்டாமா? என்று தமிழ்நாட்டில் ஒரு வாக்கெடுப்பே நடத்தி முடிவு கண்டாலும் தவறில்லை.

இந்தியாவைக் கட்டமைப்பதற்கு ராணுவம், தகவல் தொடர்புச் சாதனங்கள், நெடுஞ்சாலைகள், ரயில், விமான சேவைகள் முக்கியப் பங்களித்துள்ளன. அது போல மும்மொழிக் கொள்கையும் தேச ஒற்றுமைக்குத் தேவை.

தாய்மொழிக்குச் சேதாரம் இல்லாமல் தக்க பாதுகாப்போடுள்ள இன்றைய மும்மொழிக் கொள்கையைப் பற்றி வாசகர்களாகிய நீங்கள் என்ன எண்ணுகிறீர்களோ, அதை எழுதுங்கள் செப்டம்பர் 15–க்குள்.

– பி.சி.



நாணயத்தின் இரு பக்கங்கள்

1999–இல் தூத்துக்குடியில் தொடங்கப்பட்ட வேதாந்தா காப்பர் தொழிற்சாலை நாளொன்றுக்கு 391 டன் தாமிரக் கம்பியும் (காப்பர்), 1060 டன் சல்ஃபோரிக் அமிலமும் உற்பத்திக் கானத் திறனுள்ளது. 2010–இல் தாமிர உற்பத்தி நாளொன்றுக்கு 2400 டன்னை எட்டியது.

2018–இல்தான் இது சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்கிறது என்ற போராட்டம் கடுமையாகியது. அப்போதைய அசம்பாவிதத்தில் 13 பேர் பலியானார்கள். அதனால் இந்நிறுவனத்தின் மீது கூடுதல் கவனம் ஏற்பட்டுத் தமிழக அரசு கடுமையான நட வடிக்கை எடுக்க எதிர்க்கட்சிகள் தூண்டின.

இத்தொழிற்சாலையை அரசு மே 2018–இல் இழுத்துமூடிச் சீல் வைத்து விட்டது. அதன்பிறகு வேதாந்தா நிர்வாகம் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது.

சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்கும் தொழிற்சாலையை மீண்டும் திறக்க உரிமை கிடையாது என்று உயர் நீதிமன்றம் 2020–இல் தீர்ப்பளித்தது.

உச்சநீதிமன்றத்தின் மேல்முறையீட்டிற்கு வேதாந்தா நிர்வாகம் செல்ல உள்ளது. அதன் வழக்குரைஞர் ஆர்யா சுந்தரம் எழுப்பியுள்ள கேள்விகள் ஒதுக்கித் தள்ளப்படக் கூடியவை அல்ல.

இந்தத் தீர்ப்பு காலத்தைப் பின்னோக்கிச் செலுத்துகிற தீர்ப்பு என்றும், இதனால் தமிழ்நாட்டிற்கு மட்டுமல்லாமல், இந்தியாவிற்கே இழப்புதான் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். எப்படி?

இந்தியா தாமிர உற்பத்தியில் தன்னிறைவுபெற்ற நாடாக இருந்தது. தற்போது தாமிரம் தன்னிறைவு நிலையிலிருந்து, தாமிரப் பற்றாக்குறை ஏற்பட்டு விட்டது. தாமிரக் கம்பிகள்தான் மின் சார இணைப்பிற்கு முக்கியமானவை.

தாமிரப் பற்றாக்குறையால் இந்தியா ரூ. 14 ஆயிரம் கோடி அளவிற்குத் தாமிரத்தைச் சீனாவிலிருந்து இறக்குமதி செய்துள்ளது. முன்னேறி வந்த இந்தியாவிற்கு இது ஒரு பெரிய வீழ்ச்சியாகும். அதுவும் ஏற்றுமதியை அதிகரிப்பதற்காக பிரதமர் சுயசார்புப் பொருளாதாரக் கொள்கையை அறிவித்த நிலையில், இந்த வீழ்ச்சி சம்பவித்துள்ளது.


தொடர்ந்து சீனாவிலிருந்து இதை இறக்குமதி செய்வதுதான் தீர்வா? சில அரசியல் கட்சிகளுக்கு இது வெற்றிதான். சுற்றுச்சூழலுக்குக் கேடு வராமல் அவை தடுத்ததும் வரவேற்கத் தக்கது தான். ஆனால், தாமிர உற்பத்திக்கு என்ன மாற்று வழி?

இறக்குமதி செய்தே சமாளித்துவிடலாமா? அல்லது சுயமாக உற்பத்தி செய்யத்தான் போகிறோமா? சுயமாக என்றால், தூத்துக்குடியைத் தவிர்த்துவிட்டு லால்குடிக்குப் போனாலும் இதே பிரச்சினைதானே நீடிக்கும்?

தொழிற்சாலை என்றாலே கழிவுகள் இருக்கத்தான் செய்யும். அதனைக் கட்டுப்படுத்துவதும் அதனுடைய உற்பத்திக்குச் சமமானதாகும். ரூ. 3 ஆயிரம் கோடி மதிப்புள்ள இத்தொழிற் சாலையை நாம் இழந்திருக்கிறோம்.

உயர்நீதிமன்றத் தீர்ப்பு அரசியல் கட்சிகளுக்குச் சாதகமாக உள்ளது, சந்தோஷம்தான். பொருளாதாரப் பார்வையில் தீங்கில்லாமல் இதை மீட்டெடுப்பது எப்படி?

– **ந.நி.**



அட்டைப்பட விளக்கம்

சரித்திர நாயகன் ராமன்!

சரித்திரம் கற்றால் எனது
சந்ததிகளின்
சிம்மா சனங்களையும்
சிலுவைத் துயர்களையும்
புதையலாய்த் தோண்டலாம்;

புரிந்துகொள்வோரை ஒரு
புரட்சிக்கே தூண்டலாம்.

சரித்திரம் என்பது
மதங்களைத் தாண்டிய
மகிமைகள்

சாதிகள் தீண்டாத சிகரங்கள்

மராட்டிய மன்னன் தஞ்சை
மண்டலம் ஆண்டான்
என்கிறபோது எனது
இனஉணர்வுக்குள் ஏதோ
ஈட்டியின் நுனியை வருடுகின்றேன்

சரஸ்வதி மஹாலை அவன்
கட்டியிருக்கலாம் அதனால் நமது
சந்ததி ஆகிட முடியுமா?

கட்ட பொம்மன்
வெள்ளைத் துரைமாரை
வெட்டிச் சாய்க்கும்
வெறியோடு வந்தவன்தான்

பாண்டிய மண்ணை ஆண்டதால்
அவன் பாண்டியன்
பரம்பரையாகிட முடியுமா?

இது போலத்தான்
திப்பு சுல்தானும்
தீராப் பசியோடு
பரங்கியரை எதிர்த்தவன்

தாஜ்மகாலை
அகிலத்தின் அதிசயமாக
தரிசிக்கின்றபோது – பாரத
வரலாற்றுக்குப் புதியதோர்
வர்ணம்தான் தீட்டுகிறேன் –
அவ்வளவுதான்.

கஜினியை ஒரு
கொள்ளைக் காரனென்று
குமுறுகிறபோது
இசுலாத்தை எள்ளளவும்
இழிவுபடுத்தவில்லை நான்

பாரத சரித்திரத்தைத்தான்
படமாய்ப் பிடிக்கிறேன்.

மாலிக் கபூரால் மதுரைக் கோயில்
அன்று பூட்டப்பட்டதே
அந்த அராஜகத்தை எதிர்த்து
முழக்கமிட என்னோடு
ரஹீமையும் ராபர்ட்டையும்
எதிர்பார்ப்பது எப்படித் தப்பாகும்?

தேவாரத்தில் சைவம் தெரியலாம்
புறநானூற்றில் தெரிவது – நம்
சரித்திரமல்லவா!

திருவாசகத்தைக் கண்ணீரினால்
ஆங்கிலப்படுத்திய
போப் பாதிரியார் – கல்லறையில்
பொறிக்கச் சொன்னது
மதம் மாறிய
சைவத்துறவி என்றல்ல – ஒரு
தமிழ் மாணவனென்றுதான்.

திருவாசகத்துக்குள் அவர்
தேன் கூட்டைப் பார்த்ததைப் போல்

ஸ்ரீராமனுக்குள்
பாரத சிரஞ்சீவிகள்
பலர் தெரியவில்லையா?

பின்னணிகள் இவற்றை நான்
பிரயோகப்படுத்தியது
கண்ணிமைபோல நம்
கலாச்சாரம் காக்கத்தான்.

அயோத்தி ராமபிரான்
அரக்கர் குலத்தவனை
அரசனாக்கினவனே தவிர
அவனிடமிருந்து நாட்டை
அபகரித்துக் கொள்ளவில்லை.

தாழ்த்தப்பட்டவனைக் கூட
தழுவிக் கொண்டானே தவிர
தள்ளி நிற்கவில்லை.

ஏகபத்தினி விரதமேற்று
பெண்மைக்குப்
பெருமை சேர்த்தானே தவிர
மீண்டும் மீண்டும்
மிதிலாபுரிகளைத்
தேடியலையவில்லை.

பிராணிகளின் மீது
பிரியமாயிருந்தான்

பறவைகளின் மீது
பாசம் காட்டினான்

மலைகள் அவன்
பாதம் படுவதற்கு மண்டியிட்டன

நதிகள் அவனைத்
தொட்டே புனிதமடைந்தன

ராமராஜ்யத்தில்
கடையவரையே
காணமுடியவில்லை

எல்லோருமே உடையவர்தான்



ஊழ்கண்ட சமயத்தார் அவரவர்
“உருவுகண்டார்”

வழிபாடு போலவே
ராமருக்குத் தேவைப்படுவது
தேசியத் தொழுகையும்
தேவாலயப் பிரார்த்தனையும்தான்

ராமர்களில் எத்தனையோ
ராமர்கள் உண்டு

இந்திய ராமன் இந்து ராமனல்ல;
சரித்திர ராமன் சனாதன ராமனல்ல

நம் பண்டைய பாரதத்தின்
நாபிக்கொடிக்கு அவனே நாயகன்.

– ந.நி.



உங்கள் மனம் மகிழும்
வாகனத்தை தேர்ந்தெடுப்பீர்
FORCE
MOTORS
TRAX CRUISER
புதிய
TRUMP 40
3 சிலிண்டர் MERCEDES
Derived Engine மற்றும் Gear Box
4.4.4
FORCE
GURKHA E.O.V.
BUILT FOR WAR
Traveller
SIMPLY WORLD CLASS
Luxury
கல்வி மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு
ஏற்றதொரு வாகனம்
Available in 9 to 20 Seats
விவசாயிகளின்
செல்வ வெற்றிக்கு
BALWAN
400, 450 & 500
FORCE
MAN
MAN FORCE TRUCKS Pvt. Ltd.
MAN TRUCKS
The New Force in India
NM நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr. நஞ்சப்பா ரோடு, கோவை-18. ✆ 2239800, 2239808
செல் : 98438-84900, 98438 84920 பொள்ளாச்சி : ✆ 224096, 98438 84931
திருப்பூர் : ✆ 2478665, 98438-84902 ஈரோடு : 98438 84940

ஆகஸ்டு 2020 இதழ் விவாதம்

இருவேறு நம்பிக்கைகளின் நல்லிணக்கம்

விவாதக் கடிதங்களில் சில... சில... சில...

கந்த சஷ்டிக் கவசத்தைப் பழித்த கருப்பர் கூட்டத்திற்கு பைபிளையோ, குரானையோ விமர்சிக்கத் தைரியம் உண்டா? இளிச்சவாய இந்துக்கள் என்ன சொன்னாலும் கேட்டுக் கொள்வார்கள் என்ற தைரியம்! ராமனைப் பழித்த பெரியார் ராமசாமி, தமிழனைக் காட்டுமிராண்டி என்றார். மஞ்சள் துண்டு அணிந்த முத்தமிழ்க் காவலர் இந்து என்றால் திருடன் என்றார். இன்னொரு தலைவர் பெண்களுக்குத் தாலி தேவையில்லை என்று கூறித் தாலி அறுப்புப் போராட்டம் நடத்தினார். இந்தப் பகுத்தறிவுப் பாசறையிலிருந்து வந்த நிர்வாகிதான் கவசத்தைக் கொச்சைப்படுத்தி வெளியிட்டுள்ளார். கவசத்தின் மகிமை தெரியாத கருப்புக்கூட்டப் பேய்களைக் கந்தர் கைவேல் பொடிப் பொடியாக்கிவிடும் என்பதை அவர்கள் உணர்வார்கள். எல்லாவற்றையும் சகித்துக் கொண்டோம். அதனால் இதுவும் கடந்து போகும்!

– **பே. சண்முகம்**, செங்கோட்டை.

“**சு**வையான உணவு படைக்க அன்புள்ள தாய் இருக்க வேண்டும். ஒழுக்கமுள்ள நடத்தைக்கு நல்ல நண்பர்கள் இருக்க வேண்டும். நல்ல அறிவு வளர, சிறந்த ஆசான் வேண்டும். இனிமையான இல்வாழ்க்கைக்கு இங்கிதமான மனைவி வேண்டும். தூய சிந்தனை பிறக்க தெய்வ பக்தி வேண்டும்” என்று உபநிடதம் பகர்ந்ததை பக்தி நூல்களிலும், நாம் காணாத ஒன்றை நம்பிக் கொள்வதே பக்தியாகும். அண்ணாவும் ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்பதைத் தனது அரசியல் கொள்கையாக வரித்து, பிறர் மனம் காயப்பட்டுவிடக் கூடாது என்று கருதியும் தேசிய மத நல்லிணக்கம் மலரவும் வழிகாட்டியதைச் சிலர் புறந்தள்ளிக் கருத்துரிமை எனும் பெயரில் மக்களைக் குழப்ப, ஒற்றுமையை உருக்குலைத்துவிடும் செயல்பாடுகள் கண்டிக்கத் தக்கவையே!

– **நவீன்குமார்**, நடுவிக்கோட்டை.

இறைவன் ஒரு மருத்துவன். மருத்துவனிடம் உடல் உறுப்புக்களை ஒளிவு மறைவின்றிக் காட்டி மருத்துவம் பெறுதலே பகுத்தறிவு. இதற்குச் சமமானதே சஷ்டிக் கவச ஒளிவு மறைவற்ற சொல்லாடலும், கருத்தாடலுமாகும். ஒருவர் பார்க்கும் பார்வையைப் பொறுத்தே பார்க்கப்படும் பொருள் இருக்கும் என்பது ஒரு கோட்பாடு. இதை மணிவாசகர் தாம் பாடிய திருக்கோவையார் பற்றிய மதிப்பீட்டுக் கருத்தாகப் புலப்படுத்துகையில், “திருக்கோவையார் நூலை அந்தணர் வேதம் என்பர். யோகியர் ஆகமம் என்பர். காமுகர் காம நூல் என்பர். தர்க்கவாதி தர்க்க நூல் என்பர். புலவர்கள் இயற்றமிழ் சார்ந்த அகப்பொருள் நூல் என்பர்” எனக் கூறுகிறார்.

உலகியலில் குடிகாரன் தான் காண்போரைத் தன்னைப்போல் குடிகாரன் என்பான். இது ஒரு தத்துவ நுட்பம். நல்லதுக்கும் கெட்டதுக்குமான பொது நிலை. எனவே, அவரவர் பார்வை அவரவர்க்குரித்து என்பதால் எதற்காகக் கூறப்பட்டது என ஆராய ஆராயத்தான் தெளிவு கொடுக்கும்.

– **தெ. முருகசாமி**, புதுச்சேரி.

கருத்துச் செறிந்த நூல் கந்தர் சஷ்டிக் கவசம். பன்னெடுங்காலமாகப் போற்றப்பட்டு வரும் சாத்திரமும், தோத்திரமும் அடங்கிய ஓர் அற்புத தெய்வீக நூல். இதைத் தூற்றியும், தரக்குறைவாகவும் பேசிவருபவர்களின் அறியாமையை வேலவன்தான் விடுவிக்க வேண்டும். நூலாசிரியர் உயர்திரு பாலன் தேவராயன் பகர்ந்தபடி, ஒருநாள் முப்பத்தாறுருக் கொண்டு ஓதியே ஜெபித்தால் அவருக்கு நன்மை உண்டு என்பது காலத்தின் கணக்கு. சஷ்டி விரதத்தால் பலன் பெற்றவர்கள் கணக்கில் அடங்கா. என் பெற்றோருக்குத் திருமணம் ஆகி 13 ஆண்டுகள் குழந்தை இல்லாமல் இருந்து, சஷ்டி விரதத்தைக் கடைப்பிடித்ததால் நான் பிறந்தேன் என்று என்

பெற்றோர் கூறக் கேட்டுள்ளேன். சந்திரனைப் பார்த்து ஏதோ குரைக்கட்டும். நமக்குக் குறையொன்றும் இல்லை.

– தி. இராதாகிருஷ்ணன், அரூர்.

கந்தர் சஷ்டிக் கவசத்தினையும், சிவபுராணத் தையும் தினமும் பாராமல் படிப்பவர்களை இன்றும் செட்டிநாட்டுப் பகுதிகளில் அதிகம் காணலாம். இந்தப் பழக்கம் இன்றைய இளைய தலை முறைகளிடையே மறைந்து வருகிறது. இதனை மாற்ற நினைத்த கந்தன், கருப்பர் கூட்டத்தின் மூலம் விமர்சனம் செய்ய வைத்து, பல ஆயிரக் கணக்கான உலக மக்களைக் கந்தர் சஷ்டிக் கவசத்தைப் படிக்க வைத்து, அதன் அருமை, பெருமைகளை உணரவைத்து நமது இறை யுணர்வை அதிகரிக்கச் செய்துள்ளார். பிறர் மனம் புண்படாமல் பேசியிருந்தால் இந்தக் கவசத்தின் பெருமையைப் பலர் அறிந்திருக்க முடியாது. இது வும் இறைவனின் திருவிளையாடல்களில் ஒன்றே என்றும் நாம் கருதவேண்டும்.

– **ராம. பழனியப்பன்**, கோவை.

பெரியார் அவர்கள், தமிழ்த்தந்தை திரு.வி.க. அவர்களுக்குத் திருநீறு கொடுத்தார் என்பது நடந்த நிகழ்ச்சி. அடுத்தவர் மனதை மதித்தவர் வழித்தோன்றல்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் சரியான நபர்கள் அல்ல. இவர் களுக்குக் கருப்புக் கட்டம் போட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

– **சீத்தலைச்சாத்தன்**, திருப்பத்தூர்.

ஒவ்வொருவருக்கும் ஒருவித நம்பிக்கை. இந்தச் சுதந்திர இந்தியாவில் நாம் மற்றவர்களின் நம்பிக்கையைக் கேலி செய்வது கூடாது. ஓர் ஆத்திகனும், நாத்திகனும் விவாதம் செய்தனர். ஆத்திகன் கடவுள் இருக்கிறார் என்றும், நாத்தி கன் கடவுள் இல்லை என்றும் விவாதம் செய்தனர். முடிவில் ஆத்திகன் நாத்திகனாகவும், நாத்திகன் ஆத்திகனாகவும் மாறிவிட்டதாக ஓர் ஆன்மிகச் சொற்பொழிவில் கேட்டது நினைவிற்கு வருகிறது. இன்று தேவைப்படும் நல்லிணக்கம் எல்லோரிட மும் குறைந்து வருவதால் இந்த நம்பிக்கைகள் கேலியாகப் பேசப்படுகின்றன. ஒருவருடைய பக்தியை மற்றவர் குறை சொல்லாமல், பிடிக்க வில்லையென்றால் ஒதுங்கி, அவர்களை அவர் வழியில் செல்ல விடுவதுதான் இதற்கு ஒரே தீர்வு.

– **உஷா முத்துராமன்**, மதுரை.

கடவுள் அருளில் நம்பிக்கை ஏன் வேண்டும் என்பதற்குப் பாரதியாரும், அறிஞர்களும் எழுதி யிருக்கிறார்கள். கடவுள் இருக்கிறாரா? இல் லையா? என்பதல்ல. கடவுள் நமக்குத் தேவை. நாம் சுவாசிக்கும் காற்றைப் போல நமக்குத் தேவை. ஆண்டவன் நாம் வாழுகின்ற உலகத்தில் தவிர்க்க முடியாதவர். துளிகூட சமூகப் பாதுகாப்பிற்கே இடமில்லாத சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டவனுக்கும், நசுக்கப்பட்டவனுக்கும் இருக்கிற ஒரே பாதுகாப்பு கடவுள்தான். கடல் நடுவே விழுந்து விட்டவனுக்குப் பற்றிக் கொள் வதற்கு முருங்கைக் கொம்பு போல. மனிதனின் ஒரே நம்பிக்கை கடவுள்தான். அந்த நம்பிக்கையும் இல்லாவிடில் துயருண்ட காலத்தில் மனவலிமை யும் உடல் வலிமையும் நசுங்கி அவன் சீரழிவான் அல்லது இறப்பான். ஒருவருக்கு நம்பிக்கை இல்லையெனில், மற்றவர் மனம் புண்ணாகும்படிப் பேசாமல் இருப்பது அறிவுடைமை. தான் விரும்பா விடில், கடவுள் நம்பிக்கை உள்ளவர்களைப் பற்றிப் பேசுவது அநாகரிகம். கண்டிக்கத்தக்கது.

– **டாக்டர் ஜே.ஜி. சண்முகநாதன்**, கோவை.

இந்து மதத்தில் இறைவனைத் துதித்து, ஆன்மிகக் கருத்துக்களைப் புகுத்தி நல்ல ஒழுக் கங்களை வளரச் செய்தார்கள். கந்தர் சஷ்டியில் அனைத்தும் மந்திரச் சொற்களே ஆகும். 10 பேர்கள் சேர்ந்து இந்து மதத்தினரைப் புண்படுத் துவது வேதனைப்பட வேண்டிய விஷயம் ஆகும். ஜீவ அறிவிலிகள் திருந்தாத வரையில் நாட்டில் குழப்பங்களைத்தான் உருவாக்குவார்கள். இக்கலி யுகக் காலத்தில் விளம்பரத்தைத் தேடிக்கொண்டு, அறிவிலிகள் சுயநலம் வேண்டிக் காசுக்காகப் பிழைப்பு நடத்தி வருவது ஒடுக்கப்பட வேண்டும். நமக்கு மேற்பட்ட ஒரு சக்தி பிரபஞ்சத்தில் இயங்கி வருவது தற்குறிகளான முட்டாள் களுக்குத் தெரியவில்லை. இவர்கள் கொரோ னாவை ஒழிப்பதற்கு மக்களிடையே ஆலோசனை களைக் கூறி உயிரிழப்பிலிருந்து தப்பிக்க அறிவுப் பூர்வக் கருத்துக்களைக் கூறியிருந்தால் பாராட்டி யிருக்கலாம்.

– **லிங்கம் சின்னசாமி**, தாராபுரம்.

நம்பிக்கை என்பது அவரவர் மனத்தைப் பொறுத்தது. நம்பிக்கை இல்லையென்றால் வாழ்க் கை இல்லை. எத்தகைய துன்பம் வந்தாலும் எல் லாம் கடந்து போகும் என்ற நம்பிக்கை இருப்பதால்

தான் மனம் உடைந்து போகாமல் தைரியமாக இருக்கிறார்கள். அந்த நம்பிக்கை இல்லாமல் போனால், ஒரு நாளைக்கு எத்தனையோ தற்கொலைகளை நாம் காண வேண்டியிருக்கும். அந்த நம்பிக்கை மதத்தின் பேராலும், கடவுளின் பேராலும் இருக்கிறது. எந்தவொரு செயலைச் செய்யும்போதும் கடவுள்மீது பாரத்தைப் போட்டு விட்டுத் தொடங்கு. எல்லாம் நல்லபடியாய் நடக்கும் என்பதெல்லாம் கடவுள் நேரில் வந்து உதவுவார் என்றா? இல்லை. அந்த நம்பிக்கையே யானை பலத்தைத் தந்து அந்தச் செயலைச் செய்விக்கும். அதைப் போன்றதுதான் கந்த சஷ்டிக் கவசமும். ஒருவர் நம்பிக்கையில் மற்றொருவர் தலையிடுவதற்கு உரிமையில்லை. பிடிக்கவில்லை என்றால் ஒதுங்கிச் செல்வதுதான் பண்பாடு, நாகரிகம்.

– **புலவர் கருமலைத் தமிழாழன்**, ஒசூர்.

வேண்டுதல் – பிரார்த்தனை என்பது இறைவனோடு நேரடியாக நாம் மனம்விட்டுப் பேசுவதே யாகும். கந்தர் சஷ்டிக் கவசமென்பது மனிதனின் உடலுறுப்புக்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாகக் கூறி, முருகா! அவற்றையெல்லாம் காப்பாயாக! என்று வேண்டுதல் புரியும் பாராயணத்திற்குரிய நூலாகும். ‘முலை’ என்ற சொல்லும், ‘குதம்’ என்ற சொல்லும் வருவதனாலேயே அந்நூல் குறையுடைய, குற்றமுடைய, அழுக்கான நூலாகி விடாது.

வீடு என்றால் அதில் சமையலறையும், பூசையறையும் மட்டுமல்லாது, படுக்கையறையும், குளியலறையும், கழிவறையும் இடம்பெற்றே இருக்கும். முலை என்பது பாலூட்டவென்று தாய்மைக்குத் தனித்துவத்தோடு வழங்கப்பட்ட பரிசு எனலாம். அதை அசிங்கமாகவும், ஆபாசமாகவும் பார்ப்பது அவரவர் கண்ணோட்டம் சார்ந்ததாகும். இதைக் கேலி பேசுபவர்களைத் திருத்த முடியாது, திருந்தவும் மாட்டார்கள். இம்மாதிரியான கருத்துக்களையும், அவற்றைப் பொது வெளியில் பரப்புவோரையும் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுவோமேயானால், நாளடைவில் அவர்களாகவே ஒடுங்கிப் போய்விடுவார்கள்.

– **மேலை. தமிழ்க்குமரன்**, முத்தரசநல்லூர்.

‘**க**ந்த சஷ்டிக் கவசம்’ என்பது தமிழ் மக்களின் இல்லங்களில் அன்றாடம் ஒலிக்கும் பக்திப் பாடலாகும். உச்சிமுதல் பாதம் வரை ஒவ்வொன்றையும் கவசமாகக் காக்க வேண்டும் என மனம் உருக முருகப் பெருமானிடம் வேண்டிக் கொண்டு பாடும் விதமாக உள்ளது. இதைக் கொச்சைப் படுத்தித் தவறாக அர்த்தம் கற்பிக்கப்பட்டுள்ளது மிகவும் கண்டிக்கத்தக்கது. வேற்றுமையில் ஒற்றுமை காணும் பெருமை கொண்ட நமது பாரத நாட்டின் மிகப்பெரிய பலம் எல்லா மதங்களையும் அரவணைப்பதுதான். அப்படி இருக்கையில், சமூக வலைத்தளங்களில் எதை வேண்டுமானாலும் எழுதலாம் என்று ஒரு சிலர் பகுத்தறிவு, மூட நம்பிக்கை ஒழிப்பு என்ற பெயரில் பிறருடைய மத உணர்வுகளைப் புண்படுத்துகிறார்கள். இந்த நிலை மாற வேண்டும். மூட நம்பிக்கைகளை ஒழிக்க வேண்டுமே தவிர, கடவுள் நம்பிக்கையைத் தகர்க்கும் வகையில் கேலி செய்வது தவிர்க்கப்பட வேண்டும்.

– **வெ. ஜெயலட்சுமி**, கோவை.

அண்ணா அவர்கள் ‘கம்பரசம்’ என்ற புத்தகத்தில் கம்பராமாயணத்தில் சில விரசமான பாடல்களைப் பற்றி எழுதி உள்ளார். அந்தப் புத்தகம் வந்தபோதும் எதிர்ப்பு இருந்தது. சஷ்டிக் கவசம் நானூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கோவில்களிலும், வீடுகளிலும் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது. இந்தக் கருப்பர் கூட்டம் இதைத் தவறான முறையில் எடுத்துச் சொன்னதால் இப்படிச் சொல்லலாமா என எல்லோரும் கூறும் அளவுக்குப் போயுள்ளது. முருகன் எப்போதும் இருந்து கொண்டுதான் இருக்கிறார். ஆகையால், இதைப் பெரிதுபடுத்த வேண்டிய அவசியம் இல்லை. எல்லாம் தெரிந்தவன் இறைவன். நாம் அவனைக் காப்பாற்ற வேண்டியதில்லை. யார் யாருக்கு, என்ன, எப்பொழுது கொடுக்க வேண்டும் என்பது அவனுக்குத் தெரியும். ஆகையால், இதை அவன் வசம் விட்டுவிட வேண்டும் என்பது என் கருத்து.

– **தங்கவேல் பழனிச்சாமி**, பெரியகள்ளிவலசு.

கந்த சஷ்டிக் கவசம் என்பது முருக பக்தர்களை முறுக்கேற்றுவது. இரத்த ஓட்டத்தைப் போல, முருகனின் அருள் ஓட்டத்தை உடம்புக்குள் கலப்பது. ஓம் எனும் ஒரு சொல்லுக்குள் உலகே அடக்கம் என்று சொல்லும் இந்து மதத்தினர், இவ்வளவு நீண்ட கந்த சஷ்டிக் கவசத்தை எவ்வளவு நம்பி வழிபட்டிருப்பார்கள் என்பதையெல்லாம் எண்ணாமல், அதனைப் பற்றிய கருப்பர் கூட்டத்தினரின் அநாகரிக, ஆபாச விமர்சனம், சாத்தான்

ஓதும் வேதத்திற்கு ஒப்பானது. இப்போது கருப்பர் கூட்டத்தினர் கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறார் கள். இன்னும் எத்தனை கருப்பர் கூட்டங்கள் வந் தாலும், சிவனின் நெற்றியிலிருந்து வந்த திருமுரு கனின் நெருப்பர் கூட்டத்தை, யாராலும் கலைக்க முடியாது.

– **முத்தமிழருவி மாரிமுத்து**, அ. வாடிப்பட்டி.

கந்தர் சஷ்டிக் கவசத்தில் வரும் முலை, அல்குல் முதலிய வார்த்தைகள் உறுப்புக்கள்தானே தவிர, அவை கெட்ட வார்த்தைகள் இல்லை என்ற வாதத்தை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், ஆணாதிக்கச் சமுதாயத்தில், உடலின் சில உறுப்புகளைப் பாலுணர்வைத் தூண்டும் வகையில் குறிப்பிடுவதால் அவை ஆபாச வார்த்தைகளாயின. ஆதிசங்கரர் அம்பாளின் அங்கங்களைத் தலை நுனி முதல் திருவடி வரை ஒவ்வொன்றாக வர்ணித்திருப்பது பண்பாட்டுச் சீர்கேடு இல்லையா? ஒருவேளை அவர் பக்தி யோடு வர்ணித்தார் என விவாதத்திற்கு எடுத்துக் கொண்டாலும், படிப்பவன், கேட்பவன் இந்த மனநிலையில்தான் அந்த வர்ணனையை உணர்வானா? சம்ஹார யாகம், ருத்ர யாகம், சாமுண்டி யாகம், சுதர்சன யாகம், கால பைரவ யாகம் செய்தால் பாதுகாப்புக் கிடைக் கும், எதிரிகள் ஒழிவார்கள் என்றால், ஆலயத்திற்கும், உண்டியலுக்கும் பூட்டு எதற்கு?

சம்ஹார யாகத்திற்குப் பெயர் போன காஷ்மீர் பண்டிட்டுகள் 25 ஆண்டுகளுக்கும் மேலாகச் சொந்த மண்ணிலிருந்து விரட்டப்பட்டு தில்லி நடைபாதையில் குடும்பத்துடன் கூடாரம் அமைத்து வசித்தார்களே, அப்பொழுது அவர்களது கடவுளும், காப்பும், மந்திர மும், உச்சாடனமும், யாகமும் காப்பாற்ற வில்லையே, ஏன்?

'நாத்திகர்கள் கடவுள் நம்பிக் கையை மட்டுமே எதிர்க்கிறார்கள். ஆனால், இன்று ஆத்திகர்கள்தான் கடவுளையே அசிங்கப்படுத்துகிறார்கள்' என்று குன்றக்குடி முன்னாள் அடிகளார் மனமுடைந்து வேதனைப்பட்டதை மறந்துவிட வேண்டாம். யாருடைய மனதையும் புண்படுத்தக்கூடாது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். மக்களின் கவனத்தைத் திட்டமிட்டுத் திசைதிருப்பி, மதத்தின் பெயரால் பாமரர்களைக் கொந்தளிக்கச் செய்து, வாக்குப் பொறுக்க, மதவெறிக் கூட்டம் திட்டமிடும்பொழுது, கருப்பர் கூட்டம் கந்தசஷ்டிக் கவசத்தைக் கையி லெடுத்துத் தேவையின்றித் தேன்கூட்டில் கை வைத்திருக்கிறது. இது இப்போதைக்குத் தேவையு மில்லை, அவசியமுமில்லை, முக்கியமுமில்லை. பகுத் தறிவாளர்கள் மூடநம்பிக்கையை மட்டுமே எதிர்க் கிறார்களே தவிர, பாமரப் பக்தர்களை அல்ல.

– **எஸ். பேச்சியப்பன் பாரதி**, கோவை.

குறுங்கதைகள்

கவலை...



எப்போதும் குருவி ஒன்று வீட் டின் முன் அறையின் சன்ன லைத் தன் அலகால் கொத்திச் செல்ல, நான் சன்னல் உடைந்து விடுமோ எனக் கவலைப்பட, பேரனோ குருவியின் மூக்கு உடையுமே எனக் கவலைப்பட்டான்.

புலம்பெயர்தல்...

தெருவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரின் அடியில் குட்டிப் போட்டிருந்த நாயை விரட்டினார், அடுத்த வீட்டு வாட்ச்மேன்; தான் புலம்பெயர்ந்து வந்ததை மறந்து!

தாய்மை...


கேபிள் ஒயர் சரி செய்வதற்காக மொட்டை மாடிக்குச் சென்றபோது, படர்ந்திருந்த கொடி களின் ஊடே இருந்து பூனை ஒன்று சத்தம் கேட்டுத் தன் குட்டி ஒன்றைக் கவ்வியபடி வெளியே வந்தது... அங்குத் தெரிந்தது தாய்மை!


சித்திரம்....

பசுமை பூசிய மரங்கள்... பறக்கத் தொடங்கிய காகங்கள்... சேற்றில் மலர்ந்த தாமரை... கீற்றில் ஆடும் குருவி... வண்ணங் களில் பூத்த வானவில்... வளைந்து செல்லும் பாதை... இவை யாவும் இருந்தன, மகள் வரைந்த சித்திரத்தில்!

– **வெ. ஜெயலட்சுமி**

புத்தக மதிப்பீடு





ஞான கானம்

திருவருட்பாப் பாடல்களை ஒரே இரவில் எழுதிய வள்ளலாரைப்போல், பத்து நாட்களில் ஒரே மூச்சில் ஆயிரம் கண்ணிகளை எழுதி முடித்துள்ளார் கவிஞர் சென்னிமலை தண்டபாணி. அதுவே 'ஞான கானம்' எனும் இந்நூல். உலகியல் வாழ்வை முன்னிறுத்திப் 'பராபரமே, பராபரமே!' என்று முடிவிலா அந்த மூலத்தை – ஆதிமூலத்தை நோக்கிப் பயணித்த போது, கவிஞரின் சிந்தனையில் கண்ணிகளாக வந்துதித்த அருள் விளக்கமே இந்த ஆயிரம் கண்ணிகள் அடங்கிய ஞான கானம். இந்நூலின் சிறப்பிற்கு, 'ஞான கானம் சென்னிமலைக்கு மகுட நிலாவாகிறது' என்று கவிஞர் சிற்பியும், 'தமிழிலக்கியத்தில் இக்கவிதைக்கு முன்னுதாரணமில்லை' என்று சமீபத்தில் மறைந்த கோவை ஞானியும், 'தமிழுக்கு இந்த நூற்றாண்டின் அருட்கொடை இந்நூல்' என்று கவிஞர் புவியரசுவும் சான்று பகர்கிறார்கள். இதைவிட வேறென்ன சொல்ல, இந்நூலின் சிறப்பிற்கு! பக் : 208 விலை, ரூ. 200/–

கிண்ணத்தில் நிலாச்சோறு

தமிழ்க்கவிதை உலகில் தனக்கென்று தனித்தன்மையோடு விளங்கி வருபவர் கவிஞர் சென்னிமலை தண்டபாணி. மரபு, புதுக்கவிதை, ஹைக்கூ, சென்ரியூ, கஜல் முதலிய கவிதைப் படைப்புகளில் தனி ஆளுமையும் செலுத்தி வருபவர். இந்நூலில் உள்ள இருநூறுக்கும் மேற்பட்ட ஹைக்கூ கவிதைகளில் இயற்கை, உலகியல், சமூகச் சிந்தனைகள், உயிரினங்கள் என மையப்படுத்திப் பலவாறு நம்மைச் சிந்திக்க வைக்கிறார் கவிஞர். அன்பு, ஆன்மிகம், ஆக்ரோஷம், அரவணைப்பு எல்லாம் இந்த ஹைக்கூக்களில் காணலாம். கருத்துச் செறிவும், கச்சித வடிவமைப்பும் கொண்ட இந்த ஹைக்கூக்களுக்கு இணையாக ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள படங்களும் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன. பக் : 128, விலை ரூ. 120/–

இரு நூல்களுக்கும் ஆசிரியர் : கவிஞர் சென்னி மலை தண்டபாணி, வெளியீடு : விஜயா பதிப்பகம், 20, ராஜவீதி, கோவை – 641 001. போன் : 0422 – 2382614.


அக்ரஹாரத்து ஹெர்குலிஸ்


ஆசிரியர் : எஸ். ஸ்ரீதுரை, வெளியீடு : அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம், 41, கல்யாணசுந்தரம் தெரு, பெரம்பூர், சென்னை– 11. பக் : 200, விலை ரூ. 190/– செல் : 94446 40986.

நூலாசிரியர் எஸ். ஸ்ரீதுரையின் முதல் சிறுகதைத் தொகுப்பு. இருபது சிறுகதைகள். இக்கதைகளில் சில சிறுகதைப் போட்டிகளில் பரிசு பெற்ற கதைகள். பல கதைகள் முன்னணி இதழ்களில் வெளியாகி வாசகர்களின் பாராட்டைப் பெற்ற கதைகள். முதல் கதை 'ஜீவ யாத்திரை' – நாய்தான் கதை நாயகன். மனத்தை வசீகரிக்கும் கதை. பேத்தியையும், பொம்மையையும் வைத்து உள்மன உணர்வை அலசும் கதை 'மாயா.' உடல் அமைப்பை மையப்படுத்தி, அப்பா – மகன் பற்றிய கதை – அக்ரஹாரத்து ஹெர்குலிஸ். பூனையைச் சுற்றி வட்டமிடும் கதை –

'விஷ்ணு.' பணம் கொடுக்கல் வாங்கல் பின்னணியில் பயணிக்கும் கதை, தற்கால நடை முறையில் காணக் கூடிய ஒன்று. கடைசிக் கதையான 'காத்திருந்து... காத்திருந்து...' கதை, திருமண நிகழ்வின் பின்னணியில் நடக்கும் சம்பவத்தைப் பேசுவது. இப்படி ஒவ்வொரு கதையும் ஒரு நிகழ்வை நம் மனத்தில் இருத்திச் செல்கிறது.







பாரதி – ஓர் ஆச்சரியம்

ஆசிரியர் : கவிஞர் ஜெ. கமலநாதன், வெளியீடு : குமரன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, தி. நகர், சென்னை – 17. பக். 96, விலை ரூ. 50/– போன் : 044 – 24353742.

தமிழ்க் கவிதை உலகில் மட்டுமல்ல, இந்திய அளவில் உணர்ச்சிமிகு கவிதைகளால் எல்லோரையும் ஆச்சரியப்படுத்திய கவிஞன் மகாகவி பாரதி. பாரதியின் கவித்துவ வெளிப்பாடு நாட்டு விடுதலைக்கு உரமூட்டிய தென்றால், அது மிகையல்ல. அப்படிப்பட்ட மகாகவியின் கவிதைகளில் தோய்ந்து, அவற்றிலுள்ள தீர்க்க தரிசனக் கருத்துக்களை ஆய்ந்து, புதிய கோணத்தில் தம் கருத்தோட்டங்களை இந்நூலில் பதிவு செய்துள்ளார் கவிஞர் ஜெ. கமலநாதன். ஏழு தலைப்புகளில் பாரதியின் பன்முகத் தரிசனங்கள் நம்மை ஆச்சரியப்பட வைக்கின்றன. நூலின் இறுதியில் ராஜாஜி, மு.வ., கி.வா.ஜ., வ.உ.சி., பாரதிதாசன் முதலியோர் பார்வையில் பாரதி பற்றிய நினைவலைகளை நூலாசிரியர் நன்கு விவரப்படுத்தியுள்ளார். பாரதியை வித்தியாசமான கோணத்தில் சிந்திக்க வைக்கும் நூல்.

பசி வயிற்றுப் பாச்சோறு

ஆசிரியர் : பாவலர் கருமலைத் தமிழாழன், வெளியீடு : வசந்தா பதிப்பகம், 2 – 16, ஆர்.கே. இல்லம், முதல் தெரு, வசந்தா நகர், ஒசூர் – 635 105. பக் : 160, விலை ரூ. 150, செல் : 94434 58550.

மரபுக் கவிதைகள் யாத்து வரும் கவிஞர்கள் மரபில் பாவலர் கருமலைத் தமிழாழன் முக்கியமானவர். தமிழ்ப்பற்றும், மொழிப்பற்றும், சமூகப் பற்றும் அவருடைய கவிதைகளில் கொப்பளிக்கும். இந்நூலில் பழஞ்சோறு, கூட்டாஞ்சோறு, பால்சோறு, வெண்சோறு என்று நான்கு பகுதிகளாக மரபுக் கவிதைகள் யாத்துள்ளார். பழஞ்சோறு பகுதியில் தமிழ்மொழியின் மேன்மை, இன்றைய நிலை குறித்தும், கூட்டாஞ்சோறு பகுதியில் சமூக அவலங்கள், வாழ்க்கை நிலை குறித்தும், பால்சோறு பகுதியில் பெண்களின் நிலை, அவர்களின் குமுறல்கள், பாலியல் வன்முறைகள் குறித்தும், வெண்சோறு பகுதியில் இயற்கையை எவ்வாறு சிதைக்கிறார்கள், இயற்கையை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பது குறித்தும் கவிதைகளால் பாச்சோறு படைத்து வாசகர்களுக்குத் தமிழ் விருந்து படைத்துள்ளது பாராட்டுக்குரிய ஒன்று.

– எம். எஸ்.

வாசகர் கடிதங்கள்

'ஓம் சக்தி' ஆகஸ்டு – 2020 இதழ் 'சுரங்கம்' பகுதியில் வெளியாகியிருந்த 'மாநிலங்கள் சபை நிபுணர் சபையாக வேண்டும்' என்ற கட்டுரையில், அருட்செல்வர் கூறியிருந்த கருத்துக்கள் அற்புதமானவை. அரசியல்வாதிகள் இதைப் புறக்கணிக்காமல் செயல்படுத்த வேண்டும்.

– **லிங்கம் சின்னசாமி,** தாராபுரம்.

பேரா. இராம. இருசுப்பிள்ளை எழுதிய 'திருவடிப் பெருமை' அருமை. 'திரு' என்பதற்கு இத்தனை விரிவான விளக்கங்களா என வியந்தேன்!

– **தங்கவேல் பழனிச்சாமி,**
பெரியகள்ளி வலசு.

'பழகிப் பார்த்ததில் இவர்கள்' கட்டுரையில் 'நெய்யூறும் கானகத்தே...' என்ற சொற்றொடருக்கு மரபின் மைந்தனின் விந்தைமிகு விளக்கத்தைக் கேட்டு மெய் சிலிர்த்தேன்.

– **எல். சூரியக்கண்ணு,** மதுரை.

'தீவினை மாற்றும் திருமந்திரம், கோயில்கள் – பிரச்சனைகள் – தீர்வுகள், நிலத்தடி நீர் காணல்' முதலிய அருளியல், அறிவியல் கட்டுரைகள் அரிய விடயங்களைப் பலரும் தெரிந்துகொள்ளும்படி அமைந்துள்ளன.

– **குருபக்கிரிசாமி,** வடலூர்.

'ஓம் சக்தி' ஆகஸ்டு இதழில் வெளியாகியிருந்த டாக்டர் வி.ஜி.மோகன் பிரசாத் அவர்களின் 'உணவுக் கட்டுப்பாட்டில் எடையைக் குறைப்பது எப்படி?' என்ற கட்டுரை மிகவும் பயனுள்ள செய்திகளைத் தந்தது எனலாம்.

– **உஷா முத்துராமன்,** மதுரை.

'மாமியார் குளித்தால் மருமகள் பார்க்க முடியாது, மருமகள் குளித்தால் மாமியார் பார்க்க முடியாது' எனும்படியான ஸ்வஸ்திக் குளத்தைக் கண்டுபிடித்து அரசுடைமை ஆக்கியது பற்றிய வி.வி. சுவாமிநாதன் அவர்களின் கட்டுரை மிகவும் பயனுள்ளது. படிப்பதற்கு ஆச்சரியமாகவும் இருந்தது.

– **சுப்பிரமணிய வெங்கடாசலம்,**
திருப்பத்தூர்.

பா. மீனாட்சி சுந்தரத்தின் 'ஜூலியன் ஆஃப் நார்விச்' கட்டுரையை வாசிக்கும்போது, காரைக்கால் அம்மையார், ஆண்டாள் தாயார், பக்தை மீராபாய் ஆகியோரின் முகங்கள் நம் நினைவில் காட்சியளிக்கின்றன.

– **அழ. ரவீந்திரன்,** பொள்ளாச்சி.

'ஓம் சக்தி' ஆகஸ்டு இதழில் வெளியாகியிருந்த ஈரோடு ஜீவாவின் கட்டுரையை மிகவும் விரும்பிப் படித்தேன். அவர் சுட்டிக் காட்டுவதுபோல், காந்தியிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய செய்திகள் பல உள்ளன.

– **பாவண்ணன்,** பெங்களூர்.

'படைக்கப்படாத பாத்திரம்' எனப் பத்திரமாக ஊழைப் பாத்திறத்தோடு காட்டிய இளங்கோவடிகளின் சொற்சிலம்பை நாவரசி சரசுவதி இராமநாதன் ஒலிக்கச் செய்தது சிறப்பாக இருந்தது.

– **தெ. முருகசாமி,** புதுச்சேரி.

ஆகஸ்டு – 2020 இதழில் வெளிவந்த 'கோயில்கள், பிரச்சனைகள், தீர்வுகள்' கட்டுரையில் கம்பருக்கும், திருப்பாணாழ்வாருக்கும் நடந்த வரலாற்று நிகழ்வுகளை மேனாள் அமைச்சர் வி.வி.எஸ். அவர்கள் கல்வெட்டில் பதித்து வைத்த செய்தி அறிந்து மகிழ்ந்தேன்.

– **பா. அசோக்குமார்,**
திருப்பாதிரிப்புலியூர்.

நோயில்லாச் சமுதாயத்தை உருவாக்க, சக்தி குழுமத்தின் தலைவர் ம. மாணிக்கம் அவர்களின் அயராத முயற்சியால் உருவாகியுள்ள 'மிராக்கிள்' பானத்தின் வருகை வரவேற்கப்பட வேண்டிய ஒன்று.

– **முத்தமிழருவி மாரிமுத்து,**
அ. வாடிப்பட்டி.

கட்டுரை

எஸ். கோவிந்தராஜன்


அள்ளி முடித்த அழகுக் கூந்தல்



அக்காலம் முதல் இக்காலம் வரை பெண்களின் கூந்தலைப் பற்றிப் பாடாத கவிஞர்களே இல்லை எனலாம். அடர்ந்த கருநிறக் கூந்தலைக் "கார்குழல்" என்றும், அக்கூந்தலை உடைய பெண்ணைக் "கார்குழலி" என்றும் அழைப்பது வழக்கில் உள்ளது. இனிக் கூந்தலைப் பற்றிய பலவித வர்ணனைகளைப் பார்ப்போம்.

சௌந்தர்ய லஹரி : ஆதி சங்கரர் தனது "சௌந்தர்ய லஹரி" என்ற சுலோகத்தில், அம்பாளின் கூந்தலின் அழகை வர்ணிக்கிறார் : "பரம சிவன் பத்தினியே! மலர்ந்த கருநெய்தல் காடு போலப் பிரகாசிப்பதும், அடர்ந்தும், வழவழப்பாகவும், மெதுவாகவும் உள்ளதுமாகிய உன்னுடைய கேச பாரம் எங்களுடைய அக இருளைப் போக்கட்டும்" என்கிறார்.

திருவிளையாடல் : கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டா? என்ற ஆராய்ச்சி எல்லாம் நடந்தன. செண்பகப் பாண்டியன் அவையில் சிவபெருமானுக்கும், நக்கீரருக்கும் நடந்த வாக்குவாதம், நினைவுக்கு வருகிறது. பெண்களின் கூந்தலுக்கு இயற்கையிலேயே மணம் உண்டு என்பதை, "கொங்குதேர் வாழ்க்கை" என்ற பாடல் மூலம் சிவபெருமான் வலியுறுத்திக் கூறுகிறார்.



லலிதா சகஸ்ரநாமத்திலும், "மலர்களின் வாசனையை விடத் தேவியின் கூந்தலுக்கு இயற்கையாகவே வாசனை உள்ளதால், அம்மலர்கள் அலங்காரத்திற்கு மட்டுமே சூட்டப்பட்டுள்ளன" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"பவானி புஜங்கத்தில்" அம்பாளின் கூந்தல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அம்பாளின் அடர்த்தியான கூந்தலில் நறுமணம் வீசுகிறது. அதனால் அக்கூந்தலை வண்டுகள் சுற்றி வருகின்றனவாம்.

கலித்தொகை : இந்நூலில் கூந்தல் "ஐம்பால்" என்ற சொல்லால் அழைக்கப்படுகிறது. "மணங் கமழ் ஐம்பால்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கூந்தலை முடியும் முறை ஐந்து வகைப்படும். இவற்றை "ஐம்பால் முடி" என்று கூறுவர்.

முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை என்று ஐந்து வகைப்படும். இவையே ஐம்பால் முடியாகும்.

முடி : கூந்தலை உச்சியில் கூட்டி முடிந்தால் அதற்கு "முடி" என்று பெயர்.

கொண்டை : கூந்தலைப் பக்கவாட்டில் முடிந்தால் அதற்குக் “கொண்டை” என்று பெயர்.

சுருள் : கூந்தலைப் பின்னிச் செருகினால் அதற்குச் “சுருள்” என்று பெயர்.

குழல் : கூந்தலைச் சுருட்டி முடிந்தால் “குழல்” என்று பெயர்.

பனிச்சை : கூந்தலைச் சடையாகப் பின்னிவிட்டால் அதற்குப் “பனிச்சை” என்று பெயர்.

பின்னலின் தத்துவம் : நேர்வகிடு எடுத்துத் தலைமுடியைச் சீவி மூன்று பகுதிகளாகப் பிரித்து, பின்பு மூன்றையும் சேர்த்துப் பின்னி நுனியில் ரிப்பனை வைத்து முடிவார்கள். இந்த மூன்று பகுதிகளில் நடுப்பகுதி பெண் பாகம், வலப்பக்கம் இருக்கும் பகுதி புகுந்த வீடு. இடப்பக்கம் இருக்கும் பகுதி பிறந்த வீடாகும். பிறந்த வீட்டையும், புகுந்த வீட்டையும் சமமாகப் பார்க்க வேண்டும் என்ற தத்துவம் இந்தத் தலைமுடிப் பின்னல் மூலம் உணர்த்தப்படுகிறது.

கூந்தலின் நிறம் : மேலைநாடுகளில் தங்கநிறக் கூந்தலை அதிகம் விரும்புகிறார்கள். நம் நாட்டில் முடி கருப்பாக இருப்பதையே விரும்புகிறார்கள். தலைமுடி வெள்ளையாக மாறத் தொடங்கினால், அதாவது நரை விழுந்தால், பெண்களுக்குக் கவலை வந்துவிடுகிறது. “டை” அடித்துக் கொள்கிறார்கள். கூந்தலின் நீளம் குறைந்துவிட்டால் சௌரி வைத்து முடிந்து கொள்கிறார்கள்.

மங்கல மங்கையர் : “சுமங்கலிப் பெண்கள்” என்று அழைக்கப்படும் “மங்கல மங்கையர்” கூந்தலை அழகுப்படுத்திக் கொள்ள அதிக நேரம் செலவழிக்கிறார்கள். இவர்களின் வாழ்க்கையில் கூந்தல் முக்கியப் பங்கு வகிக்கிறது. அக்காலத்தில் சில பிரிவுகளில், குடும்பத்தில் கணவன் இறந்துவிட்டால், மனைவி மொட்டை போட்டுக் கொள்ள வேண்டிய கட்டாயம் இருந்தது. இக்காலத்தில் அப்பழக்கம் நடைமுறையில் இல்லை.

அழகுப்படுத்துதல் : முன்பெல்லாம் கூந்தலை அழகுப்படுத்திக் கொள்ளப் பெண்கள் அதிக நேரம் எடுத்துக் கொள்வார்கள். பலவிதக் கொண்டைகளைப் போட்டு அழகு பார்ப்பவர்களும் உண்டு. “முடியுள்ள சீமாட்டி வலக்கொண்டையும் போடுவாள், இடக்கொண்டையும் போடுவாள்” என்பது பழமொழி.

பெண்களுக்கு ஆண்டவன் அளித்த வரம் நீண்ட கூந்தல். ஆறடி நீளமுள்ள கூந்தல் அமைவது சிறப்பானது. பெண்களுக்கு முழு அழகை அளிப்பது, அடர்ந்த கூந்தலும், அழகிய பின்னலும்தான்.





திரைப்படங்களில் கூந்தல் : திரைபடப் பாடல்களில் கூந்தலைப் பற்றிப் பலவிதமாக வர்ணனைகள் செய்யப்பட்டுள்ளன.

“ஆறடிக் கூந்தலை அள்ளி முடித்து
ஓரடி, ஈரடி முன்னே எடுத்து
பாரடி வந்து பக்கத்திலே”

என்ற பாடல் ஒன்று உண்டு.

இன்னொரு பாடலில் கூந்தலில் மேகம் வந்து குடிபுகுந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

“கூந்தலிலே மேகம் வந்து
குடிபுகுந்தாளோ கவி எழுத”

என்று வருகிறது.

அடுத்து "கல்யாண ஊர்வலம்" படத்தில் ஒரு பாடல்

"கூந்தலிலே நெய் தடவி

குளிர் விழியில் மை தடவி

காத்திருப்பேன் கன்னி மகள்

காதல் மனம், ஒரு தேனருவி"

"அலைபாயும் மனம்" என்று கேள்விப்பட்டிருக்கிறோம். இங்கே கூந்தல் அலைபாய்வதாகக் கூறப்பட்டுள்ளது.

"நீ வருகின்ற வழி மீது யார்

உன்னைக் கண்டார்?

உன் வளை கொஞ்சும் கைமீது

பரிசென்ன தந்தார்?

உன் மலர்க் கூந்தல் அலைபாய

அவர் என்ன சொன்னார்?"

லூஸ் கேர் : இக்காலத்தில் ஆறு முதல் அறுபது வயது வரை உள்ளவர்களுக்கு, கூந்தலைப் பின்ன நேரமில்லை. ஒரு கிளிப்பைத் தலைமுடியில் மாட்டி, லூஸ் கேர்" ஆகி இருந்தால் போதும் என்ற நிலை உள்ளது. சிலர் தலைவிரிக் கோலமாக வலம் வருகிறார்கள். நல்ல புடவை, நகை அணிபவர்கள் கூந்தலை மட்டும் பராமரிக்காமல் விடுவது ஏனோ?

விளக்கேற்றும் போது, கோவிலுக்குச் செல்லும்போது, சமைக்கும் போது, சாப்பிடும்போது தலைமுடி பின்னப்பட்டிருப்பது அவசியம். இதனால் தரையில் முடி விழுதல், உணவில் முடி உதிர்தல் தவிர்க்கப்படும்.

முடியைப் பிடித்து இழுத்தால் : ஒரு உத்தமப் பெண்ணின், முடியைப் பிடித்து இழுத்துத் துன்பப்படுத்துபவன் தெய்வத்தால் தண்டிக்கப்படுவான் என்று ஸ்மிருதியில் கூறப்பட்டுள்ளது. இதற்கு உதாரணமாக ராவணன், கீசகன், கம்சன் முதலியோரைக் கூறலாம்.

தலையைப் பின்னுவது ஏன்? : பெண்கள் உடலில் உள்ள நல்ல சக்தியானது தலைமுடி நுனி வழியாக வெளியேறுவதாகக் கூறுவார்கள். எனவே நுனிவரை பின்னல்போட்டு ரிப்பன் அல்லது குஞ்சரம் வைத்துக் கட்டி அழகாக வைத்திருப்பார்கள். அதிலும் நேர்வகிடு எடுத்துப் பின்னினால் "பாசிடிவ்" எனர்ஜி அதிகரிக்கும். நேர்வகிடு எடுத்து முடியை இரு சம பாகங்களாகப் பிரிப்பதால் மூளை சீராகச் செயல்படும் என்று அறிவியல் கூறுகிறது. கோணல் வகிடு எடுத்தால், வாழ்க்கை கோணலாகுமாம்.

கூந்தலில் ஏற்படும் பிரச்சினைகள் : கூந்தலில் முடி உதிர்தல், பொடுகு முதலியவை உண்டாகப் பல காரணங்



கள் உண்டு. மனஅழுத்தம், படபடப்பு, கோபப்படுதல், டை அடித்தல், ஷாம்புகளைத் தேய்த்தல் முதலியவை முக்கியக் காரணங்களாகும். இரும்புச் சத்துக் குறைவும் ஒரு காரணமாகும்.

தலையில் எண்ணெய்ப் பிசுக்கு இருந்தால், கொழுப்புச் சத்தை உணவில் குறைக்க வேண்டும். வறண்ட கூந்தல் இருந்தால், உணவில் எண்ணெயைக் கூடுதலாகச் சேர்க்க வேண்டும்.

எனவே, பெண்களின் அழகு பல விதங்களில் இருந்தாலும் கூந்தல்தான் அழகில் முதலிடம் வகிக்கிறது. உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொண்டால், கூந்தலும் அடர்த்தியாக வளரும்.

‘Pachyderm Tales’ நிறுவனர் லட்சுமிப்பிரியாவின் தாயார் திருமதி. உமா கோவையில் 15 ஆண்டுகளுக்கு முன்பு ‘ஓம் சக்தி’யோடு தற்செயலாகத் தொடர்பில் இருந்தவர். சுறுசுறுப்புமிக்க இளம் பெண்ணாக இவர் இருந்த காலம் அது. அவருக்கு மகளும், மகனும் இருவர். மகள் லட்சுமிப்பிரியாதான் ஒரு வித்தியாசமான நிறுவனத்தை இப்போது உருவாக்கியுள்ளவர்.

திருமதி. உமா பெங்களூர் சென்று ஆசிரியப் பணியேற்றுள்ளார். நீண்ட காலத்திற்குப் பிறகு தொலைபேசி அழைப்பால் மகளைப் பற்றிய இத்தகவல்கள் வந்து சேர்ந்தன. இவை ஊக்கப்படுத்தத் தகுந்தவை. கடுமையான உழைப்பால் தனது மகளையும் ஆடிட்டர் பயிற்சி பெறும் தனது மகனையும் சிறப்பாக உருவாக்கியுள்ள திருமதி உமா நமது பாராட்டுக்குரியவர்.

இவருடைய மகளின் நிறுவனம் என்ன செய்து வருகிறது என்பதைப் படித்து அறிந்து கொள்ளுங்கள்.

– இ.ஆர்.

பெண் உருவாக்கிய படைப்பு நிறுவனம்

“உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும், ஓது பற்பல நூல்வகை கற்கவும், இலகு சீருடை நாற்றிசை நாடுகள் யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே, திலக வாணுதலார் நங்கள் பாரத தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம்; விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பாராம்” என்ற பாரதியின் கனவு இங்கே நனவாகிக் கொண்டிருக்கிறது...


லட்சுமிப்பிரியா

நம்மைச் சுற்றித் திறமையோடும், கற்பனைத் திறத்தோடும் இளம் பெண்களும், நடுத்தர வயதுப் பெண்களும், மாற்றுத்திறனாளிகளும், நம் இனிய சகோதரிகளான திருநங்கைகளும் உள்ளனர்.

ஒவ்வொருவரின் வாழ்விலும் பல கதைகள் உள்ளன. இவர்களுக்குச் சமுதாயத்தைப் பார்த்து உரத்த குரலில் கேள்வி கேட்கும் ஆசையும் இருக்கிறது.

இதற்கு ஒரே வழி பேனா முனைதான். எழுத்துச் சுதந்திரம் உள்ள நம் நாட்டில், தான் நினைப்பதை எங்கே எழுதுவது? யாரை அணுகுவது? பணம் எவ்வளவு செலவாகும்? பேரறிஞர்கள் மத்தியில் எழுதுவது எப்படி? என்ற வினாக்களுக்கெல்லாம் பதிலாக, லட்சுமிப்பிரியாவின் எண்ணத்தில் உருவானது Pachyderm Tales நிறுவனம்.

குழந்தைகளுக்கு இப்போது கதை சொல்லப் பாட்டிகள், தாத்தாக்கள் அருகில் இல்லை. அவர்களுக்கு எளிமையாக, இனிமையாகக் கூறத்தான் வேண்டும்.

இதை யார் கூறுவது? கதை சொல்லத் தெரிந்தவர்கள் இந்நிறுவனத்தின் சின்னமான ‘ஜம்பூ’ மூலம் சொல்ல முடியும். யானை, குழந்தைகளுக்குப் பிடித்தமான ஒன்று. எனவே தான் இந்நிறுவனம் Pachyderm Tales என ‘யானைக்கதைகள்’ என்ற பெயர் கொண்டுள்ளது.

எழுத்துத் திறமையிருந்தும் எழுத வாய்ப்பில்லாதவர்களுக்கும் அவர்



Pachyderm Tales நிறுவனத்தில் பணியாற்றி வருபவர்கள்

களின் படைப்புகளை வெளியுலகிற்குக் கொண்டு வருவதற்காக இந்நிறுவனம் அண்மையில் தொடங்கப்பட்டது.

இதில் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இளம் பெண்களுக்கு ஆக்கப்பூர்வமாக எழுதுவது (Creative writing) பற்றி இங்கு சொல்லித் தருகிறார்கள்.

இளம் பெண்கள் இந்த நிறுவனத்தில் பயிற்சி பெற்று எழுதுவதில் மட்டும் அல்ல, இணையதளங்களிலும் தங்கள் திறமையை வெளிப்படுத்துகின்றனர்.

Pachyderm Tales ஒரு குடும்பம். இதில் இலக்கியம், கலை, மொழிப்பற்று உள்ள பெண்கள் இணைந்து பணிபுரிகின்றனர். இங்கு இணைந்து பணிபுரிவோர் அனைவருமே கிராமத்து எளிய பெண்கள். பெரிய பின்புலம் இல்லாதவர்கள். கிராமத்து எளிய பெண்கள் முதல், நகரத்துப் பெண்கள், கடல் கடந்தும் மொழியை நேசிக்கும் பெண்கள் இதில் தங்கள் பங்களிப்பை அளிக்கின்றனர். இவர்கள் திறமையை நாள்தோறும் மெருகேற்றிக்கொள்ளக் கடுமையாக உழைக்கின்றனர்.

பெண்கள் பொதுவாகவே வாழ்க்கையின் வலிகளை உணர்ந்தவர்கள். வீட்டில் அச்சாணியாய் இருக்கும் பெண்கூட, வீட்டில் சும்மாதான் இருக்கிறேன் எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறாள். இன்றுகூட, பல இடங்களில் 'பொட்டப்புள்ள என்ன செய்ய முடியும்?' என்ற பேச்சு வழக்கு உள்ளது.

ஏதோ சிலர் செய்யும் தவறுகளால், கிராமங்களில் படித்து முடிக்கும் முன்னே பெண்களுக்குத் திருமணம் நடைபெற்றுவிடுகிறது. கணவனை இழந்த பெண்களின் மேல் முட்கள் வீசப்படுகின்றன. கணவனால் புறக்கணிக்கப்பட்ட பெண், மற்ற பெண்களால் புறம் பேசப்படுகிறாள். இளம் குழந்தைகள் காமுகர்களால் சீரழிக்கப்படுகிறார்கள். இதுபோன்ற பல பிரச்சனைகளுக்கு இந்த நிறுவனத்தின் கதாசிரியர்களால் தீர்வு சொல்ல முடிகிறது.



திருமதி உமா

பெண்கள் தங்கள் வலிமையை அதிகரித்துக் கொள்ளவும், தாங்கள் ஒரு போகப்பொருள் அல்ல, தங்களுக்கும் திறமை உண்டு என்பதை எந்த வயதிலும் நிரூபிக்கவும் ஒரு பாதையை Pachyderm Tales காட்டுகிறது. சக பெண்களிடையே இருக்கும் திறமையைக் கண்டறிந்து, அவர்களை எழுத்தாளர்கள் ஆக்கி, அவர்களின் நூல்களைப் பிரசுரித்து மக்களின் கைகளை அடையச் செய்கிறது.

ஓவியப் படைப்பாற்றல் உள்ளவர்களுக்குத் தகுந்த பயிற்சி கொடுத்து, அவர்களின் திறன்களை மேம்படுத்தி,

அவர்களின் படைப்புகளை வெளியுலகிற்குக் கொண்டு வரவும் செயல்பட்டு வருகிறது.

இந்நிறுவனத்துடன் நெதர்லாந்து நாட்டிலிருந்து வெளியாகும் ‘ஆதி உலகம்’ என்னும் தமிழ்ப் பத்திரிகை இணைந்து செயல்படுகிறது. ஒரு தொலைக்காட்சி நிறுவனமும் இதனுடன் இணைந்துள்ளது. மேலும் Storyscreen எனும் தளத்துடன் இணைந்து பல போட்டிளை நடத்தி வருகிறது.

இங்கு பெண்கள் முழுச் சுதந்திரத்துடன் வேலை செய்கிறார்கள். இவர்களின் படைப்புகள் பாதுகாப்பாக உள்ளன. அவர்களின் படைப்பிற்கு ஏற்ற மரியாதைகள் கிடைக்கின்றன. பெண்களைப் பொருளாதாரச் சுதந்திரம் உடையவர்களாக உருவாக்குவது இதன் நோக்கம்.

இதன் முக்கியச் சிறப்பு, நாட்டின் பல பகுதிகளில் உள்ளவர்கள் தங்கள் வீட்டிற்குள் இருந்துகொண்டே இணையதளத்தின் வழியாகத் தங்கள் வேலைகளைச் செய்கிறார்கள். எனவே, படிப்பு, குழந்தைகள் வளர்ப்பு முதலிய பணிகள் பாதிக்கப்படுவதில்லை.

ரங்கமன்னாரின் அபூர்வத் திருக்கோலம்

ஆடி மாதத்தில் வரும் பூரம் ஆண்டாளின் ஜன்ம நட்சத்திரம். இதைக் கொண்டாடும் பொருட்டு ஸ்ரீ வில்லிபுத்தூரில் நடைபெறும் திருவிழாவில் 7-ஆம் நாள் அன்று ஆண்டாள் ஒரு காலைக் கிடத்தி மறு காலை மடக்கி இருக்க, அவளது மடியில் தலை சாய்த்துப் படுத்திருக்கும் ரங்கமன்னாராக நமக்குத் திருக்காட்சி அளித்து, அருள்புரிகிறார் திருமால். இது அபூர்வத் திருக்கோலம் ஆகும்.

– உ. இராமநாதன்

இங்கு வரும் நல்ல கதைகளை யூடியூப் மூலம் வெளியிடவும், திரைப்படமாக்கவும் முயல்கிறது Pachyderm tales.

ஆங்கிலக் கதைகளுக்கு ஆவா, பெண்களின் பிரச்சனைகளைப் பேசத் தமிழில் – ஆம்பல், தெலுங்கில் – ஆவிஷ்கா, கன்னடத்தில் – ஆமேயா, மலையாளத்தில் – ஆவாரிகா, இந்தியில் – ஆக்ரிதா, குழந்தைகளுக்காக – மாயா. இதில் மாற்றுத் திறனாளிகளே சூப்பர் ஹீரோ.

இதன் நிறுவனர் செல்வி. லட்சுமிப்பிரியா, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியத்தில் துப்பறியும் நாவல்களைப் பற்றி ஆய்வு செய்துள்ளவர். மிகச் சிறந்த எழுத்தாளர். இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, பூடான், நேபாளம் முதலிய நாடுகளில் தனது ஆய்வுக் கட்டுரைகளைப்பற்றிப் பேசியுள்ளார்.

பல நாடுகளில் கல்லூரி விரிவுரையாளராக வாய்ப்புக் கிடைத்தும், பெண்களுக்கு ஏதேனும் செய்ய வேண்டும் என இவர் Pachyderm tale நிறுவனத்தைத் தொடங்கியுள்ளார். இதன் நோக்கம், வலிமை வாய்ந்த பெண் சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதுதான். இந்த நிறுவனம் இதுவரை 7 ஆங்கில நாவல்களையும், தமிழில் 3, இந்தியில் 1, மலையாளத்தில் 1 புத்தகங்கள் வெளியிட்டுள்ளது.

சாமான்யப் பெண்களையும் சாதனைப் பெண்களாக்கும் முயற்சியில் லட்சுமிப்பிரியாவும், இவரது நிறுவனத்தில் அயராது உழைக்கும் இளம் பெண்களும் ஈடுபட்டுள்ளனர்.

திருச்சி மாநகரிலிருந்து செயல்படும் இந்நிறுவனத்தின் Website : www.pachydermtales.com, email : pachydermtales@gmail.com

– ந.நி.

மாற்றம் என்ற தேற்றம்

தோழர் விஜய் சண்முகம்

விவாதத்திற்குரிய பொருளாகக் கந்த சஷ்டிக் கவசத்தைக் குறிக்கும் பொழுது, 'ஓம் சக்தி' ஆசிரியர் மூன்று முக்கியக் குறிப்புகளைக் கூடவே கொடுத்திருக்கிறார்.

1. கவசம் என்றால் காப்பு – பாதுகாப்பது. 2. செலவில்லாத கடவுள் – அதுதான் நம்பிக்கை. 3. மார்க்சியத்தின் ''மதம் அபின்'' என்பது.

சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு பாடிய இப்பாடலை உடல் உறுப்புகளைப் பாதுகாக்கவும் மனனம் செய்யச் சுலபமானதாகவும், இனிமையான இராகத்தோடும் பாடியுள்ளனர்.

இப்பாடல் பாடிய காலகட்டத்தில் கூர்மையான வேல் துல்லியத் தாக்குதலுக்கு வல்லிய ஆயுதமாக இருந்துள்ளது. கல்வியறிவு குறைவு. பில்லி சூனியம், பேய், பிசாசு முதலிய மனப்பிரமை பிடித்தும் இருந்துள்ளனர். இரவுகளில் போதிய வெளிச்சமில்லாத, போக்குவரத்து வசதியில்லாத, வனாந்திரக்காடு, மலை, மண்குடிசைவாழ் மக்களின் வாழ்க்கைத்தரமும் தாழ்வாகவே இருந்துள்ளது.

உணவுத் தேடலில் மற்ற மனிதர்களோடும், கரடி, புலி, மற்ற விலங்குகளோடும் போரிட வேண்டிய சூழ்நிலை. அப்போதுதான் ''ரத்ன வேல் காக்க – காக்க'' என்றும், ''தாக்க – தாக்க தடையறத் தாக்க'' என்றும் இப்பாடலை உயர்த்திப் பாடியிருக்கிறார்கள்.

இரண்டாவது கருத்து : செலவில்லாத கடவுள் நம்பிக்கை. ஒவ்வொரு மனிதனும் அச்சத்திலிருந்து விடுபட ஏதேதோ எண்ணுகிறான். எண்ணத்திற்கேற்பச் செயல்படுகிறான். ஏதோ ஒரு நம்பிக்கையில் செயல்பட்டுக் கொண்டே வளர்ந்து வந்த மானுடம் நிராதரவான நிலையில் செலவில்லாத நம்பிக்கையாகக் ''கடவுளை நம்பினோர் கைவிடப்படார்'' எனக் கருதினான்.

மூன்றாவதாக, ''மதம் அபினைப் போன்றது'' என்ற மார்க்சின் கருத்து.

அபினைச் சுவைத்தபின் தன் சுய உணர்வையும், சுற்றுச் சூழலையும் பற்றிய நினைவு இழந்து அரை மயக்கத்தில் அதனையே ஆனந்தமயமென நம்பிவிடுகிறார்கள். சமூகத்தின் சங்கமத்திலிருந்து விலகி, விழித்துப் பார்க்கும்போது விரக்தியாகிறார்கள். இதனை விதியென எண்ணி மன நோயாளியாகி, மேலும் அபினைத் தேடுவது கூடாது.

கந்த சஷ்டிக் கவசப் பாடலை வாய்விட்டுப் பாடும்பொழுது, ஒவ்வொரு உறுப்பினைப் பற்றி அவ்வரி குறிக்கும்போது, அந்த உறுப்பினை நினைத்து ''... ... காக்க காக்க'' என்று பாடுகிறார்.

ஒலி அலைக்கு ஒரு சக்தி உண்டு. நம்மையறியாமலேயே அவ்வலை அந்த உறுப்பின் இரத்த ஓட்டத்தைச் சீராக்கும்.


யோகாசனம் செய்கின்றவர்களும் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை, ஒவ்வொரு உடல் உறுப்பையும் தன் உணர்வுகளின் மூலமாகவும், பிராணவாயுவுடன் ஒருங்கிணைந்த அழுத்தத்தாலும், குறிப்பிட்ட உறுப்புகளைச் சரிப்படுத்தப் பழக்கப்படுத்துகிறார்கள்.

இந்த இரண்டும் ஒன்றை நோக்கியே இருக்கின்றது. இன்றைய விஞ்ஞான வளர்ச்சியில் ஒலி நாடாவில் கந்த சஷ்டிப் பாடலை ஒலிக்க விட்டு யோகாசனம் செய்து அப்பாடலின் வரிகளுக்கு ஏற்ப மனதினை ஒருமுகப்படுத்த முயலுங்கள். அம்மாற்றத்தை ஆண் – பெண் அனைவரும் உணரலாம். கால மாற்றத்திற்கேற்பக் கருப்பர் கூட்டமும் மாறட்டும், மறுப்பர் கூட்டமும் மதச்சாபமிடாமல் தேறட்டும்.

மார்க்சின் ''மாற்றம் ஒன்றே மாறாதது'' என்பதனை ''மாற்றமே இன்றைய தேவையான தேற்றம்'' என ஏற்போம். ●




அமிர்த வாக்குடைய கவி ஆளுமை



தொட்ட இடந்தோறும் வரலாறு துலக்கமாகும் வாழ்வு பாரதியினுடையது. அது தன் வரலாறாக மட்டும் ஆகியது அன்று. தமிழ் வரலாறு, இந்திய வரலாறு, உலக வரலாறு என நீளப் பரந்து பிரபஞ்ச எல்லைகளைத் தொட்டுத் தொடர்ந்து முடிவற்று விரிவது. இப்படிச் சொல்வது மிகை போலத் தெரியலாம். ஆனால், அப்படி ஒரு தோற்றம் அவரால் தமிழுக்கு நிகழ்ந்தது.

விசுவரூப தரிசனம் என்பது வெளியில் தெரிவதல்ல. உள்ளுக்குள் ஓங்கி எழுந்து பிரபஞ்சவெளியில் நின்று நிலைப்பது. தன் அளவு இன்னதென்று தக்கமுறையில் தரிசனம் செய்துகொள்ள மின்னல்போல் தோன்றி ஒளிரும் ஒரு புலப்பாடு. ஒருமுறை அந்தத் தரிசனம் கிட்டிவிட்டால், சுருக்கம் இருக்காது. அதைத் தொட்டுத் துலக்கிக் காட்ட ஒரு குரு வேண்டும். அவ்வளவுதான். வித்துக்குள் உறைந்திருக்கும் விருட்சத்திற்கான பேராற்றலை, பார்த்த மாத்திரத்தில் அறிந்துகொள்வதோடு, அந்தத் தன்மையை வித்து ஒத்த அவருக்கே உணர்த்திக்காட்டிச் செழுமைப்படுத்துவதுதான் குருவின் கடப்பாடு.



கிருங்கை சேதுபதி

அதை, சகோதரி நிவேதிதாவைக் கொண்டு, பாரதிக்கு நிகழ்த்திக் காட்டியது வரலாறு. விளையும் பயிரை இளமையிலே கண்டு உணர்த்திக் காட்டியவர்களுள் அவர் உன்னதமானவர்.

அதனை முளையிலேயே கண்டு, அருகில் இருந்து அனுபவித்தவர் இன்னொருவர். அவர் பாரதியின் இளம்பருவத் தோழர், ச.சோமசுந்தர பாரதியார்.

“பாரதியார் தமது ஏழாவது பிராய முதலே அருமையான தமிழ்க் கவிதைகளை விளையாட்டாக விரைந்து கவனஞ் செய்வதைக் கண்ட வித்வான்கள், நமது கவியின் தந்தையாரைப் புகழ்ந்திருப்பதை நான் நேரில் அறிவேன். எட்டு ஒன்பதாவது ஆண்டுகளில் சர்வ சாதாரணமாய், கொடுத்த சமஸ்த்துக்களை வைத்து அற்புதமான கவிகளைப் பூர்த்தி செய்து, பெரிய புலவர் கூட்டங்களைப் பிரமிக்கச் செய்த பல காலங்களிலும் நான் கூட இருந்திருக்கிறேன்.

“காளிதாசன், கம்பன் முதலிய வர கவிகளுக்குக் காளி வாக்கில் எழுதிய காலம் முதல், அநாயாசமாகக் கவி சொல்ல வாய்த்தது என்று நாம் கேட்கும்

கதைகளையும், குமரகுருபரர் ஐந்தாவது ஆண்டில் அரும்பாக்களை இயற்றினர் என்ற கதையினையும் அபூர்வக் கற்பனைகள் என்று புறக்கணித்த நான், பாரதியார் ஏழாவது வயதுமுதல் எளிதில் பாடல் இயற்றித் தமிழ்வாணர்கள் மெச்சும்படி காட்டிய திறமையை நேரில் கண்ட பொழுதுதான் கேவலம் படிப்பினால் பாவன்மை வராது. கவிகள் பிறப்பிலேயே அமையவேண்டுமென்று அறிந்தேன்" என்று எழுதுகிறார். (சுதேச கீதங்கள், முதற்பாகம், 1922)

"பாரதியின் பதினோராவது ஆண்டில், (1893) புலவர்கள் கூடியதோர் பெருஞ்சபையில், புதிதுபுதிதாகக் கொடுத்த அடிகளைக் கொண்டே பூர்ண கவிகளை விரைந்து இயற்றிச் சபையோரை வியப்பித்தபோது, அவருடைய கவித் திறமையையும், அமிர்த வாக்கையும் கண்டு சந்தோஷப்பட்ட புலவர்களால் முதல்முதல் பாரதியார் என்ற பட்டமும் கொடுக்கப் பெற்றார். அன்றுமுதல் இவரை யாவரும் பாரதியார் என்றே அழைக்க ஆரம்பித்தார்கள்" என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

வைத்த பெயர் சுப்பிரமணியன், அழைத்த பெயர் சுப்பையா, பட்டப் பெயராய் வந்து வாய்த்த பாரதி என்பதே நின்று நிலைத்தது. அதைத் தந்து பெருமை கொண்டது அவரை ஈன்று புறந்தந்த இளசைநகர். அங்கு, பாரதியின் கவித்திறமையைக் கண்டு வியந்தவர்களுக்கு மத்தியில், அவர்தம் வாக்கை, 'அமிர்தவாக்கு' என்று மிகச் சரியாக அடையாளம் கண்டு தரிசனப் படுத்திய பெருமையைப் பெற்றுவிடுகிறார், ச.சோமசுந்தரபாரதியார்.

பாரதியின் தந்தைக்கோ, அதிலெல்லாம் பெரிய நிறைவு இல்லை. ஆங்கிலம் பயிலுதற்காகத் திருநெல்வேலி இந்து கலாசாலையில் பாரதியைக் கொண்டு போய்ச் சேர்த்துவிடுகிறார்.

ஆனாலும், சென்ற இடத்தில் தன் தமிழாற்றல் வெளிப்பட நின்றவர் பாரதி. "அக்காலத்தில் கலாசாலைத் தமிழாசிரியருடனும், காலஞ்சென்ற ஸ்ரீ நெல்லையப்பன் கவிராயர்அவர்கள் வீட்டில் ஓயாது கூடும் வித்வான்களுடனும் இவர் இட்ட தமிழ்ப் போர்களின் தொகைக்கு அளவில்லை. இவர் சல்லாபத்தை மிகவும் விரும்பிய கவிராயர் அவர்கள் இவரை மிகவும் பரிவாக ஆதரித்து வந்தார்கள். அந்தக் காலத்தில் இவருடைய அருமையான கவிதா சக்தியையும், பேச்சு வன்மையையும் காட்டக் கூடிய கதைகள் பல உண்டு" என்று எழுதிக் காட்டுகிற ச.சோ. பாரதியார், அவற்றையெல்லாம் விரிக்கில் பெருகும் என்று அஞ்சி விடுத்ததனால், பல பாடல்களும் வரலாற்றுப் பதிவுகளும் கிடைக்காது போயின. ஆனாலும், அவர் குறிப்பாகச் சுட்டிக்காட்டிய, 'தமிழ்ப்போர்' என்ற சொல்லாடல், முந்தைய 'அமிர்தவாக்கு' என்பதுபோல், பொருட்செறிவுடையது.


தமிழாசிரியருடனும், வித்வான்களுடனும் பாரதி இட்ட தமிழ்ப்போர், தனிப்போராக இருந்திருக்காது. தமிழின் அறம் காக்க எழுந்த திறப்போராகத் தான் இருந்திருக்க வேண்டும் என்பதை உணர்ந்துகொள்ள, விரிவஞ்சி ச.சோ. பாரதியார் விடுத்த நிகழ்வுகளுக்கு இடையில் அவர் எழுதிய இரு பதிவுகள் இங்கு நினைவுகூரத்தக்கன.

ஒன்று, அவர் தமது கலாசாலைத் தமிழாசிரியருக்குப் பதில் கொடுத்த நிகழ்வு. மற்றொன்று, தன்னிலும் மூத்த மாணவருக்காகக் கவி வடித்த நிகழ்வு. இரண்டு நிகழ்வுகளுக்கும் அடிநாதமாக இருந்தது அழுக்காறு. ஆற்றலை விடவும் அக்காலத் தமிழ்ப் பண்டிதர்களிடம் மிகுந்திருந்த பெருநோய் அழுக்காறு. பாரதிக்கு அது முற்றிலும் ஆகாது.

தன்னைவிடவும் தன்னிடம் பயில வந்த மாணவன் ஒருவனின் திறம் கண்டு மனம் வெதும்பிய தமிழ்ப் பண்டிதர், பாரதியை மட்டம்தட்ட வேண்டும் என்று நினைத்து வகுப்பறையில் ஏதோ

வினாத் தொடுத்திருக்கிறார். பாரதி, அதற்குரிய பதிலைச் சொல்லவில்லை.

அந்த வகுப்பறை, காலரி அமைப்பிலானது. அதில், ஆசிரியரினும் உயர்வான இடத்தில் அமர்ந்திருந்த பாரதியிடம் இளக்காரமாக, “மேகம்போல் கவிகள் பொழிவதாக ஊரிலே புகழப்படுகிறீர், நேரான இடத்திலும் இருக்கின்றீர், காளமேகம் போல் பொழியாமல் சும்மா இருப்பதேன்?” என்று சீண்டியிருக்கிறார், ஆசிரியர்.



உட்கார்ந்திருந்தபடியே பாரதி அவருக்கு உரைத்த பதில் “பண்டிதர் அவர்களுக்கு, மேகத்தின் சாமான்ய குணம்கூடத் தெரியாமல் இருக்கிறதே? காளமேகம் தனக்குத் தோன்றிய பொழுதுதான் மழை பொழிவதன்றி, பண்டிதர் உத்தரவுக்குப் பயந்து பெய்வதில்லையே?”

சிறுமை கண்டு சீறிய போதிலும் அறம் பிறழாமல், ஆசிரியர் சொன்ன உவமையைக் கொண்டே உண்மையை உணர்த்திக் காட்டிய பாரதி, கவிஞனின் இயல்பையும் தன்மானத்தையும் எந்த இடத்திலும் விட்டுக் கொடுத்துவிட முடியாது என்பதைப் பிஞ்சு வயதிலேயே நெஞ்சில் நிறைத்திருந்திருக்கிறார் என்பதற்கு இந்நிகழ்வு முதற்சான்று.

அடுத்தது, அதே பள்ளியில் பயின்ற, தன்னிலும் வயதில் மூத்த மாணவர் ஒருவர் ஈற்றடி கொடுத்துப் பாடச் சொன்னபோது பதிலடி கொடுத்தது.

எஃப்.ஏ. என்னும் பிரதம (சீனியர்) வகுப்பில் பயின்று கொண்டிருந்தவர், காந்திமதிநாதன். தமிழ்ப்பழக்கம் உள்ள சோணாசலம்பிள்ளையின் புதல்வரான அவர், முருகதாச சுவாமிகளுடன் நட்புப் பூண்டவர், விசேஷமான தமிழ்ப் பயிற்சியுள்ளவர் என்ற காரணங்களால், ஒரு சாலை மாணாக்கரான, சி.சுப்பிரமணிய பாரதியாரும், ச.சோமசுந்தர பாரதியாரும் அவரது இல்லத்திற்கு அடிக்கடி செல்வதுண்டு.

“ஒரு சமயம், பலர் கூடி இருக்கும் பொழுது, கூடியவர்கள் எல்லாருள்ளும் இளைஞரான பாரதியாரை, அடக்க நினைத்த காந்திமதிநாதபிள்ளை அவர்கள், ‘பாரதி சின்னப்பயல்’ என்ற கடையடி (ஈற்றடி) கொடுத்து, அதை வைத்து ஒரு வெண்பாவைப் பூர்த்தி செய்யும்படி நமது புலவரைக் கேட்டார். அவர் சொல்லி வாய்மூடுமுன், கேட்டவர் வியக்க, காந்திமதிநாத பிள்ளை தலைகுனிய, அங்குள்ள யாவரும் இவர் என்ன சொல்லப் போகிறார் என்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே தனக்குக் கொடுத்த அடியைக் கடையடியாக வைத்து வெண்பாவைப் பூர்த்தி பண்ணினார்... அனைவரும் அதிக ஆச்சர்யம் அடைந்தார்கள்” என்று அந்த நிகழ்வைக் கால்நூற்றாண்டு (25 ஆண்டுகள்) கழித்து, 1922ல் நினைவுகூர்ந்து எழுதுகிறார் ச.சோ.பாரதியார்.

‘பாரதி சின்னப் பயல்’ என்று கொடுக்கப்பட்ட ஈற்றடியைக் கொண்டு பாடி முடித்தாலும் அவமானம், பாடாது விட்டாலும் அவமானம். தன் மானத்தோடு, தமிழ் மானமும் காக்க வேண்டும் என்கிற அறச்சீற்றத்தில், உடனே பாரதி பாடிய வெண்பா, ஒன்றல்ல, இரண்டு. காந்திமதிநாதரின் பொறாமை காணப் பெறாது பாரதியின் உள்ளிருந்து கனன்று எழுந்த முதல் வெண்பாவில், பாரதியின் தன்மானம் சுடர்கிறது.

“ஆண்டில் இளையவ(ன்)என்(று) அந்தோ,
அகந்தையினால்
ஈண்(டு)இங்(கு) இகழ்ந்(து)என்னை, ஏளனம்செய் –
மாண்பற்ற
காரிருள்போல் உள்ளத்தான் காந்திமதி நாதனைப்
பாரதி சின்னப் பயல்”

இதன் ஈற்றடி ‘பாரதி சின்னப் பயல்’ என்று முடிந்தாலும், பாரதி கவிபாடி முடித்த பாங்கில், சின்னத்தனம் செய்த சின்னப்பயலாகக் காந்திமதிநாதர்

தோற்றம் கண்டுவிடுகிறார். மாணாக்கர் என்ற சொல்லே மாண்பை முன் வைத்துத் தோன்றியதுதான். ஆனால், ஆண்டில் இளையவன் என்ற ஒரே காரணத்தால், மூத்தவன் என்ற ஆணவத்தால், ஏளனம் செய்வதற்காக, மாண்பற்றவனாகக் காந்திமதிநாதர் மாறிப் போகிறார். காரணம், அழுக்காறு என்னும் காரிருள் அவர்தம் தமிழ் உள்ளத்தைச் சூழ்ந்து சிறுமைப்படுத்தியிருக்கிறது. அதனால் சிறுமைப்பட்டுப் போயிருக்கும், இந்தக் காந்திமதி நாதனைப் 'பார் அதி சின்னப்பயல்' என்று பாரதி, பாடி முடித்துவிட்டார்.

இதில் தன்மானம் சிறந்திருந்தாலும், தன்னிலும் மூத்த வயதினராகிய காந்திமதிநாதர் எனும் தமிழர்மானம் பலர்முன்னிலையில் போய்விட்டதனால், ஏற்பட்ட அவமானத்தால் அவர் தலைகுனிந்திருக்கும் நிலை கண்ட பாரதியின் கவிதை உள்ளத்தில் கருணை மேகம் சூழ்ந்துவிட்டது. அடுத்த கணமே, அதே ஈற்றடியைக் கொண்டு, பாரதியிடம் இருந்து இன்னொரு வெண்பாவும் புறப்பட்டுவிடுகிறது.

"ஆண்டில் இளையவ(ன்)என்று, ஐய,
அருமையினால்
ஈண்(டு)இன்று என்றன்னை ஏந்தினையால் –
மாண்புற்ற
காரதுபோல் உள்ளத்தான் காந்திமதி நாதற்குப்
பாரதி சின்னப் பயல்"

என்பது பாரதியின் 2–வது பாடல்.

அழுக்காறு தந்த வெகுமானமாகிய அவமானத்தால் அனைவரது முன்னிலையிலும் தாழ்ந்த காந்திமதிநாதரின் தலையை, எவ்வளவு கம்பீரமாய், பாரதி உயர்த்திவிட்டார் பாருங்கள். அந்தக் கணத்தில், காந்திமதிநாதரின் கண்களில் உறுதியாய்க் கண்ணீர்த்துளிகள் திரண்டிருக்கும்.

தன் வெண்பாவின் மூலமாக, காந்திமதிநாதரின் உள்ளத்தில் காரிருள் போல் சூழ்ந்திருந்த அகந்தைக் கிழங்கை முற்றிலும் அகழ்ந்து எடுத்து, மாண்பற்ற அவரின் நிலைமாற்றி, மாண்புற்ற வராக்கிவிட்டார் பாரதி.

மேலும், ஏளனம் செய்தவரையே ஏளனம் செய்துவிட்ட தன்னிலைக்கு எதிராக, காந்திமதிநாதர் சினம் கொள்ளாமல், வசைமொழி பேசாமல், வருந்திய மாண்பு கண்டு பாரதி, நெகிழ்ந்திருப்பார் போலும், தன்னிலும் இளையவனிடம் தான் நடந்து கொண்டது தகாது என்று திருந்தி, அந்தக் கணமே, அவர் தன்னிலும் பெரியராகக் கனிந்து கொண்ட கருணையைக் கண்கூடாகக் கண்டு அனுபவித்த காரணத்தால், 'ஐய' என்று மரியாதையோடு விளிக்கிறார். அடுத்து, அவர்தம் பெருமையின் அருமை கருதி, 'அருமையினால், ஈண்டு இன்று என்றன்னை ஏந்தினையால்' என்று நெகிழ்ந்து பாடுகிறார்.

முதற்பாடலின், இங்கு என்பது, நிறைவுப்பாடலில், 'இன்று' ஆனதில் எவ்வளவு நுட்பமாய்க் காலம் பதிவு கொள்கிறது.

அதாவது, 'இங்கு' என்பதில், அந்தக் கணநேரக் காழ்ப்பு மிக்கிருந்தது தெரிகிறது. பட்டென்று பாரதியிடமிருந்து வெடித்துக் கிளம்பிய வெண்பாவினால், அது தூளாக்கப்பட்டுவிட்டது. அதன் பின்னர், அது, இன்று என்று நிகழ்ந்த நாளைக் குறித்து நிலை கொண்டு விடுகிறது.

அன்று நடந்த அந்த நிகழ்வை, அப்படியே ச.சோ.பாரதியார் வருணித்து எழுதுகிறபோது, அந்த அன்று, 'இன்று' போல் தோற்றம் கொண்டு விடுகிறதல்லவா? அதுதானே என்றென்றும் நின்று சுடர்கிற வரலாறு. இங்கே, தன்மானம் மிக்க பாரதியின் பெருந்தன்மை, தமிழ் மானம் காக்கும் விதமாகவும் ஒளிர்கிறது.

அதுபோல், பாரதி, தன் முதற்பாடலில், காரிருள்போல் தெரிந்த காந்திமதி நாதரின் உள்ளத்திற்கான உவமையின் தன்மையைக் கருணைஉடைய மேகமாய் மாற்றி, அடுத்த பாடலில், காரது போல் உள்ளத்தான் என்று காட்டுவதும் 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்பதை உணர்த்திக் காட்டிய, அதே வேளையில் தானும் கடைப்பிடித்து ஒழுகியதும் கவனத்திற்குரியன. பாரதி தானும் வாழ்ந்து, தன்னொத்தவர்களையும் வாழ்விக்கும் வரலாற்றின் நுண்ணிய பதிவு இது.

இம்மாத ராசி பலன்

**"என்ன நடக்கலாம் என்பதை அனுமானிப்பவன் சோதிடன்
என்ன நடக்கும் என்பதைத் தீர்மானிப்பவன் இறைவன்!"**

'ஜோதிடத் திலகம்'
க. தில்லையம்பலம்

1.09.2020 அன்று கோள்கள் நிலை

	செவ்வாய்		ராகு
சந்திரன்	01.9.2020 புதன் – கன்னி 16.9.2020 சூரி. – கன்னி 22.9.2020 புதன் – துலாம் 23.9.2020 ராகு – ரிஷபம் 23.9.2020 கேது–விருச்சிகம் 27.9.2020 சுக். – சிம்மம்		சுக்கிரன்
சனி			புதன் சூரியன்
கேது குரு			

மேஷம்



மாதத்தின் முற்பாதியில் தடுமாற்றங்கள் காணப்படும். மிகவும் யோசித்து எக்காரியத்திலும் இறங்க வேண்டும். மாதத்தின் பிற்பாதி அனுகூலமானது. தொழில் உத்யோகத் துறைகளில் மாற்றங்கள் ஏற்படலாம். புது முயற்சிகளில் இறங்கலாம். புதன் 22–ஆம் தேதிவரை கல்வி கேள்விகளில் நன்மையை ஏற்படுத்தும். புதிய தொழில் வாய்ப்புகளைச் சிலர் அடைவர். ராகு 23–ஆம் தேதிவரை உங்களின் துணிவான முயற்சிகளில் வெற்றியை ஏற்படுத்தும். பின்னர் ராகு பெயர்ச்சியாகி 2–ஆம் வீட்டில் அடுத்த 1 1/2 ஆண்டுகள் சஞ்சரிக்க இருப்பதால், குடும்பத்தில் குதர்க்கம் ஏற்படலாம். அகலக் கால் வைத்து நட்டமடையலாம். திடீர்ப் பணவரவும் அதேபோல் திடீர்ச் செலவும் ஏற்படலாம்.

கேது 8–ஆம் வீட்டில் சஞ்சரிக்க இருப்பதால் ஜனனேந்தியரிங்களில் கட்டி போன்றவை ஏற்பட்டு வைத்தியச் செலவு ஏற்படக் கூடும். மின்சாரச் சாதனங்கள், மருந்து உட்கொள்வது போன்றவற்றில் கவனம் வேண்டும். ராசி மீது செவ்வாய் சஞ்சரிப்பதால் சிரசு ரோகம் ஏற்படக் கூடும். முன்கோபத்தால் பிரச்னைகள் ஏற்படலாம். திருமணக் காரியங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு. புதிய முயற்சிகளைப் புரட்டாசி மாதம் தொடங்க வெற்றி ஏற்படும்.

ரிஷபம்



இம்மாதம் சூரியன் 4, 5–மிடங்களில் சஞ்சரிப்பதால் வீண் அலைச்சல், உடல்நலிவு, விரயம், தடுமாற்றம் உண்டாகும். குரு 8–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் காரியத் தடைகள் ஏற்படும். பொருள் முடக்கம் தொழில் முடக்கம் ஏற்படும். அக்டோபர் மாதம் வரை இவ்வாறான பலன்களை அடைய நேரிடும். அரசாங்கக் காரியங்களில் குறுக்கு வழிகள் வேண்டாம். செவ்வாய் 12–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் பொருளை வைத்த இடம் தெரியாமல் மறந்து போகும். 2 1/2 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்குக் காய்ச்சல் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

23–ஆம் தேதி முதல் ராகு ராசி மீது சஞ்சரிக்க இருப்பதால், எதிர்வரும் 1 1/2 ஆண்டுக் காலம் உடல் நலனில் போதிய எச்சரிக்கையுடன் இருந்து வர வேண்டும். ஒருசிலர் அறுவைச் சிகிச்சை, வயிற்று உபாதை, அஜீரணக்கோளாறுகளால் அவதிப்படலாம். கேது 7–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், குடும்பத்தில் சிலருக்குப் பற்றற்றுப் போகலாம். சுக்கிரன் 3–ஆம் வீட்டில்

சஞ்சரிப்பதால், இம்மாதம் சுகபோக இச்சைகளைக் கட்டுப்படுத்திக் கொள்வது நல்லது. சனி 9–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் ஆன்மீகச் சுற்றுலா, வெளி தேச யாத்திரை வரும் 2 1/2 ஆண்டுகளில் கிடைக்கும்.



மிதுன ராசி அன்பர்களுக்கு மாதத்தின் முற்பாதி சாதகமாக உள்ளதால் தொழில், உத் யோகம், பொருளாதாரம் முத லிய விஷயங்களில் அனுகூலங் கள் உண்டு. மாதத்தின் பிற் பாதியில் சூரியன் 4–ஆம் வீட் டில் சஞ்சரிப்பதால் வீண்விரயம், அலைச்சல், பயணம் உண்டாகும். செவ்வாய் லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் சகோதர வர்க்கத்தார் உறவு பலப்படும். சிலர் புதிய கடன்கள் கிடைக்கப் பெறுவர். சிலர் வழக்கு விவ கார வெற்றி அடைவர். 7–இல் குரு சஞ்சரிப்பது நல்லதல்ல. கணவன் – மனைவி கௌரவப் பிரச் னைகளால் பிரச்னைகளை உண்டாக்கிக் கொள்வர். சிலர் கோர்ட் கச்சேரி என்று அலைவர். ஒருசிலருக்குத் திருமணக் காரியம் கூடி வரும். சுக்கிரன், தனுசு, மிதுனம், சிம்மம் ஆகிய ராசி களில் ஜனன ஜாதகத்தில் அமையப் பெற்றவர் களே திருமண யோகத்தை அடைவர்.

8–இல் சனி சஞ்சரிப்பதால், ஏற்கனவே சிலர் வேலையை இழந்திருப்பர். அடுத்த 2 1/2 ஆண்டு கள் கவனம். ராகு 23–ஆம் தேதி முதல் உங்கள் ராசியைவிட்டு விலகுவதால் கடந்த 1 1/2 ஆண்டுக் கால கஷ்ட, நஷ்டம் நீங்கும். 6–இல் கேது சஞ்சரிக்க இருப்பதால் உங்களது வசதிவாய்ப்புக் கூடும். சுக்கிரன் இம்மாதம் 2–இல் சஞ்சரிப்பதால் இனிய வார்த்தை மூலம் காரிய சாதனை உண்டு.



சூரியன் இம்மாதம் முற்பாதி யில் 2–ஆம் வீட்டில் சஞ்சரிப்ப தால் பணத் தேவை தொடர்ந்து இருந்துவரும். குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கும். தொழில் உத்யோகத் துறை களில் பெரிய முன்னேற்றங் களை அடைய இயலாது. மாதத்தின் பிற்பாதியில் சூரியன் 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், தொழில் உத்யோகத் துறைகளில் நன்மை ஏற்படும். புது முயற்சிகள் வெற்றியளிக்கும். செவ்வாய் 10–இல் சஞ்சரிப்பதால் தொழில் உத்யோக ஸ்தலங்களில் கூடுதல் சுமையும், கலக்கமும் இருந்து வரும். உங்களின் அதிகார எல்லையை மீறிச் செயல்படக் கூடாது. சுக்கிரன் ராசி மீது சஞ்சரிப்பதால் இள மையுணர்வுடன் காட்சியளிப்பீர்கள்.

குரு 6–இல் சஞ்சரிப்பதால் கடன் படுவதோ, வியாதி ஏற்படுவதோ தவிர்க்க இயலாது. சனி 7–இல் சஞ்சரிப்பதால் உடல்சோர்வும், மனச் சோர் வும் இருந்து வரும். ஆரோக்கியம் நிலையாக இருக்காது. 23–ஆம் தேதி முதல் ராகு 11–இல் சஞ்சரிக்க இருப்பதால், அடுத்த 1 1/2 ஆண்டுகள் பற்பல நன்மைகள் காலப் போக்கில் ஏற்படும். உதவிகளும் கிடைக்கும். கேது 5–இல் சஞ்சரிப்ப தால் சுதந்திர மனப்பான்மையுடன் செயல்படுவீர் கள். புதன் 3–இல் சஞ்சரிப்பதால் கல்வி, கேள்வி உயர்வு ஏற்படும். வாக்கு வித்தையால் லாப முண்டு. திருமணம் போன்ற காரியங்கள் 2, 3 மாதங்கள் கழித்து நடைபெற வாய்ப்புண்டு.



இம்மாதம் முற்பாதியில் பற் பல சிந்தனைகள் சஞ்சலம், சல னம் காரணமாக மன அமைதி குறையலாம். மாதத்தின் பிற் பாதியில் சூரியன் 2–ஆம் வீட் டில் சஞ்சரிப்பதால் பணத் தேவை கூடும். ஒரு சிலருக்குக் கண்களில் உபாதை தோன்றலாம். செவ்வாய் 9–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் மனக்கலக்கம், வீண் பயம் ஏற்படும். தொழில் உத்யோகம் குறித்த சிந்தனைகள், தாய், தந்தையரைப் பற்றிய கவலை சிலருக்கு ஏற்படும். குரு 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்ப தால் சில நல்ல வாய்ப்புகள் தேடி வரலாம். 23–ஆம் தேதி முதல் ராகு 10–ஆம் வீட்டில் சஞ்சரிக்க இருப்பதால் இடமாற்றம், தொழில் மாற்றம் குறித்து அதிகம் சிந்திக்க நேரிடும். தொழில் நுறையில் புதிய விஞ்ஞான யுக்திகளை அடுத்த 1 1/2 ஆண்டு களில் புகுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

4–இல் கேது அடுத்த 1 1/2 ஆண்டுக் காலம் சஞ்சரிக்க இருப்பதால் குடும்பத்தில் குழப்பம் ஏற்படலாம். வயது முதிர்ந்த பெரியோர்களுக்குப் பாதிப்பு ஏற்படும். 6–இல் சனி சஞ்சரிப்பதால் உங்களது வசதி வாய்ப்புகள் கூடும். சுக்கிரன் 12–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் சயன சுகம் உண்டு. ஒருசிலர் தங்களது வேலையைத் தற் காலிகமாக விட்டுவிடலாம். 2–இல் புதன் சஞ் சரிப்பதால் திருமணம் முதலிய சுப காரியங்கள் அக்டோபர் மாத இறுதியில் ஈடேற வாய்ப்புண்டு. இம்மாதம் புது முயற்சிகள் வேண்டாம்.

கன்னி



இம்மாதம் சூரியனின் சஞ்சாரம் திருப்திகரமாக இல்லை. மாதத்தின் முற்பாதியில் வீண் விரயம், செலவு, அரசாங்க நிந்தனை, நினைவு தடுமாற்றம் முதலிய பலன்கள் ஏற்படும். மாதத்தின் பிற்பாதியில் உங்களுக்காகச் செலவினங்கள் செய்ய வேண்டியது இருக்கும். செவ்வாய் 8–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் சிலருக்கு வீண்வம்பு தேடி வரும். பொறுமை அவசியம். 23–ஆம் தேதி முதல் 10–ஆம் வீட்டிலிருக்கும் ராகு 9–ஆம் வீட்டிற்குப் பெயர்ச்சி ஆவதால், இவ்வளவு நாள்கள் தொழில் சம்பந்தமாக நிலவி வந்த குழப்பம் அகன்றுவிடும். 3–ஆம் வீட்டிற்குப் பெயர்ச்சியாகும் கேது அடுத்த 1 1/2 வருடங்களில் உங்களின் வசதி வாய்ப்பை அதிகரிக்க வாய்ப்புண்டு.

4–இல் குரு சஞ்சரிப்பதால், தொழில் அபிவிருத்தி செய்யலாம். இருப்பிடம் மாறிச் செல்லலாம். வீட்டைத் திருத்தி அமைக்கலாம். சனி 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் 2022 வரை குழந்தைகளைப் பற்றிய கவலை இருந்து வரும். சுக்கிரன் இம்மாதம் 11–இல் சஞ்சரிப்பதால், ஆடம்பரப் பொருள்கள் வாங்கும் யோகம் உண்டு. தனலாபம் உண்டு. புதன் 22–ஆம் தேதி வரை உங்கள் ராசி மீது சஞ்சரிப்பதால் ஒரு சிலருக்குத் திருமண வாய்ப்புக் கிடைக்கும். தனுசு ராசியில் ஜனன ஜாதகத்தில் சுக்கிரன் அமைந்தவர்களுக்கு வாய்ப்புண்டு.


துலாம்



இந்த ராசி அன்பர்களுக்கு மாதத்தின் முற்பாதி தொழில் உத்யோகத் துறைகளில் நன்மைகள், நண்பர்கள் வகையில் உதவி, அரசாங்க நன்மை முதலிய பலன்கள் அடையும் விதமாக அமையக் கூடும். மாதத்தின் பிற்பாதியில் செலவு, விரயம், தண்டம் கட்டுதல் முதலிய பலன்களை அடையச் செய்யலாம். செவ்வாய் 7–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் குடும்பத்தில் குதர்க்கம் ஏற்படுவது உங்களின் அணுகுமுறையைப் பொறுத்து அமையும். 3–இல் குரு இருப்பதால், திடீரென முடிவெடுத்து எதையும் செய்து விடாதீர்கள். எல்லாம் தோல்வியில் முடிந்துவிடும். ஆத்திரம் அறிவுக்குச் சத்ரு என்று கூறுவார்கள். அதை நினைவில் வைத்துக் கொண்டு இம்மாதம் செயல்பட வேண்டும்.

23–ஆம் தேதி முதல் கேது 2–இல் சஞ்சரிக்க இருப்பதால், செலவினங்களில் கட்டுப்பாடு தேவை. பேச்சிலும் கட்டுப்பாடு தேவை. ராகு 8–இல் சஞ்சரிக்க இருப்பதால் அடுத்த 1 1/2 ஆண்டுகள் சோதனையாக இருக்கும். மனோவலிமையால் மீண்டு விடலாம். சனி 4–இல் சஞ்சரிப்பதால், கூட்டுப் குடும்பமாக இருப்பவர்களுக்குப் பிரச்னைகள் தோன்றலாம். சுக்கிரன் 10–இல் இம்மாதம் சஞ்சரிப்பதால் தொழில் உத்யோகத் துறைகளில் பெண்களால் பிரச்னைகள் வரக் கூடும். 12–இல் புதன் சஞ்சரிப்பதால் வேலையாட்களிடமும் கணக்கு வழக்குகளைக் கையாள்வதிலும் கவனம் தேவை.

விருச்சிகம்



இம்மாதம் சூரியன் அனுகூலமாகச் சஞ்சரிப்பதால், தொழில் துறையில் எதிர்பார்ப்புகள் ஈடேறும். மாதத்தின் பிற்பாதியில் லாபஸ்தானத்தில் சூரியன் சஞ்சரிப்பதால் நண்பர்கள், தொழில் வழிப் பிரமுகர்கள் மூலம் உதவிகள் கிடைக்க வாய்ப்புண்டு. புதன் – சூரியன் சேர்க்கை காரணமாகக் கலை, இலக்கியத் துறையில் இருப்பவர்களுக்கு மேன்மையுண்டு. ஒரு நண்பரின் பகைமை ஏற்படவும் வாய்ப்புண்டு. 23–ஆம் தேதி முதல் ராகு 7–ஆம் வீட்டில் சஞ்சரிக்க இருப்பதால், மாற்று மதக்காரர்களின் குறுக்கீடுகள் அடுத்த 1 1/2 ஆண்டுக் காலம் இருந்து வரும். புதிய தொழில் கூட்டு ஏற்படும்.

ராசி மீது கேது சஞ்சரிக்க இருப்பதால் புரியாத விஷயங்களுக்கும் தீர்வைக் காணும் உள்ளுணர்வு ஆற்றல் ஏற்படும். செவ்வாய் 6–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் வயிற்றில் சிலர் உபாதைகளை அடைவர். தலையில் எரிச்சல் ஏற்படலாம். விவகாரங்களில் வெற்றி கிடைக்கும். 2–இல் குரு சஞ்சரிப்பதால் தற்சமயம் பொருளாதார விஷயங்களைச் சமாளித்து விடுவீர்கள். 3–இல் சனி சஞ்சரிப்பதால் பெரிய அளவில் உடனடி நன்மையில்லை. போகப் போக மாற்றங்கள் ஏற்படும். திருமணம் முதலிய சுபகாரியங்கள் இரண்டு மாதத்திற்குள் நடக்கலாம்.

தனுசு



தனுசு ராசி அன்பர்கள் மாதத்தின் முற்பாதியில் சன்மார்க்க நெறிமுறைகளாலும் ஒன்றுக்கு மேற்பட்ட முயற்சிகளாலும் தங்களது காரியங்களில் வெற்றி பெறலாம். பிற்பாதியில் நீண்ட நாள் திட்டம் அல்லது எண்ணம் ஒன்று நிறைவேறும் வாய்ப்புண்டு. இம்மாதம் புது முயற்சிகளில் இறங்கவும் நன்மை

ஏற்படும். புரட்டாசி மாதம் சிறப்பானது. தொழில் உத்யோகத் துறைகளில் ஏற்றம் உண்டாகும். செவ்வாய் 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், முடிவெடுப்பதில் தீர்க்கமாக இருக்க வேண்டும். அடிக்கடி எண்ணங்களை மாற்றிக்கொள்ளக் கூடாது. 7–ஆம் வீட்டில் சஞ்சரித்த ராகு 6–ஆம் வீட்டில் 23–ஆம் தேதி முதல் சஞ்சரிக்க இருப்பது யோகமாகும். இருப்பினும் உடல் உபாதைகள் ஒரு சிலருக்கு ஏற்படும்.

12–இல் கேது சஞ்சரிப்பதால் ஒருசிலர் எதிர்பாராத ஐஸ்வர்யம் அடைவர். கனவுகள் அடிக்கடி தொந்தரவு கொடுக்கும். சுக்கிரன் 8–இல் சஞ்சரிப்பதால் கடனுக்காகவோ, வியாதிக்காகவோ சிலர் தங்கள் உடமைகளை அடமானம் வைக்கக் கூடும். 10–இல் புதன் சஞ்சரிப்பதால் சுயதொழில் செய்வோர் ஆறுதல் அடைவர். ஜன்மத்தில் குரு சஞ்சரிப்பதால் ஜெயில் வாசம் போன்ற ஒரு சூழ்நிலையில் சில நாள்கள் கழிக்க வேண்டும். 2–இல் சனி சஞ்சரிப்பதால் வரவும் செலவும் சமமாக இருக்கும்.

மகரம்



மகர ராசி நேயர்களுக்கு இம்மாதம் எதிர்பாராத சங்கடங்கள் மாதத்தின் முற்பாதியில் தோன்றும். செலவும் உண்டு. மாதத்தின் பிற்பாதியில் காரியத் தடைகள் ஏற்படும். மீண்டும் மீண்டும் முயற்சி செய்து காரியங்களை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும். செவ்வாய் 4–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் பெற்றோர்கள் பேச்சைத் தட்ட வேண்டாம். சுக்கிரன் 7–இல் சஞ்சரிப்பதால், இளவயதினர் வரம்பு மீறி நடந்துகொள்ள வேண்டாம். மற்றவர்கள் இம்மாதம் பெண்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டி வரலாம்.

9–இல் புதன் சஞ்சரிப்பதால் கலை, இலக்கிய ஈடுபாடு உள்ளவர்கள் போதனை செய்வோர், கைவினைஞர்கள் உற்சாகம் அடைவர். தொழில் வளர்ச்சி ஏற்படும். குரு 12–இல் சஞ்சரிப்பதால் தான, தர்மம் செய்யுங்கள். சனி ராசி மீது சஞ்சரிப்பதால் உடல்நலம் பாதிக்கலாம். ராகு 23–ஆம் தேதி முதல் 5–இல் சஞ்சரிப்பதால் உயிரியல், ஆராய்ச்சித் துறை சார்ந்த மாணவர்கள் போட்டித் தேர்வு எழுதுபவர்கள் மேன்மை அடைவர். கேது 11–இல் சஞ்சரிக்க இருப்பதால், அடுத்த 1 1/2 வருடம் சாதுக்கள் தொடர்பு, நல்லோர் நட்பால் நன்மை அடைவீர்கள். திருமண காரியங்கள் ஈடேற வாய்ப்புக் குறைவு.

கும்பம்



சூரியன் இம்மாதம் முற்பாதியில் சில மனக் கசப்புகளைக் குடும்பத்தில் ஏற்படுத்தக் கூடும். மாதத்தின் பிற்பாதியில் எதிர்பாராத செலவுகள், உடல் நலிவுகள் உங்களைத் துன்புறுத்தலாம். எனவே உடல் நலனில் அதிகக் கவனம் செலுத்தி வரவேண்டும். செவ்வாய் 3–ஆம் வீட்டில் வக்ர கதியில் சஞ்சரிப்பதால் தைரியத்திற்குப் பதில் மனதில் அதைரியம் நிலவக்கூடும். சுக்கிரன் 6–இல் சஞ்சரிப்பதால் முதியோர்கள் சர்க்கரை நோய் முதலியவற்றால் உடல்நலிவை அடையக் கூடும். புதன் – சூரியன் 8–இல் சஞ்சரிப்பதால் ஒரு சிலருக்கு ஒப்பந்தங்கள் மூலம் தனப் பிராப்தி ஏற்படும். மற்றபடி இம்மாதம் தொழில் உத்யோகத் துறைகளில் திருப்தியான பலன்களை அடைய இயலாது.

குரு லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் சகலத் துன்பங்களிலிருந்தும் தக்க உதவிகள் மூலம் விடுபட்டுவிடுவீர்கள். தனவந்தர் பெரியோர் நட்பும், உதவியும் கிடைக்கும். சனி 12–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் சுபவிரயம், சுபசெலவு செய்யலாம். புதிய தொழில் முதலீடுகள் செய்யலாம். உடனடி லாபம் கிடைக்காது. ராகு 4–ஆம் வீட்டில் 23–ஆம் தேதி முதல் சஞ்சரிக்க இருப்பதால், வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். கேது 10–இல் சஞ்சரிப்பதால் தொழில் கவலை ஏற்படும்.

மீனம்



மீன ராசி அன்பர்களுக்கு மாதத்தின் முற்பாதி அனுகூலம் உண்டு. தொழில், உத்யோகம், பொருளாதாரம் மற்றும் குடும்பச் சூழ்நிலைகளில் திருப்தி நிலவும். மாதத்தின் பிற்பாதியில் குடும்பத்தில் வீண் விரோதம் ஏற்படலாம். தம்பதியினர் கருத்து வேற்றுமை கொள்ளாமல் இருப்பது நல்லது. செவ்வாய் 2–இல் சஞ்சரிப்பதால், கோபத்தைத் தவிர்ப்பது நல்லது. தண்டச் செலவுகள் செய்வதையும் குறைத்துக் கொள்ள வேண்டும். ராகு – கேதுக்கள் 23–ஆம் தேதி முதல் உங்கள் வாழ்வில் வசந்த காலத்தை ஏற்படுத்தக் கூடும். துணிவுடன் காரியங்களில் இறங்கினால், எதிர்வரும் 1 1/2 ஆண்டுகளில் சாதனை செய்யலாம். நல்ல வசதி வாய்ப்புகளை அடையலாம்.

குரு 10–இல் சஞ்சரிப்பதால் புதிய தொழிலில் ஈடுபட வாய்ப்புண்டு. ஏற்கனவே செய்துவரும் தொழில் நல்ல நிலையில் தற்சமயம் இருக்காது. சனி 11–இல் சஞ்சரிப்பதால் வரும் நவம்பர் முதல் மேன்மை அடைவீர்கள். திருமணம் முதலிய சுப காரியங்கள் இன்னும் 3 மாதங்கள் கழித்து ஈடேறலாம். சுக்கிரன் 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் உங்களது ஆடம்பரப் பொருள் பிறரால் அபகரிக்கப்படலாம். போக்குவரத்துகளில் இழப்பு வரலாம். புதன் 7–இல் சஞ்சரிப்பதால் கல்வி கேள்விகளில் நன்மை உண்டு. ●

கட்டுரை

கே.ஜி.ராஜேந்திர பாபு



செந்தமிழ்க் கவிஞர்களும் ஷேக்ஸ்பியரும்

சிலப்பதிகாரம் மங்கல வாழ்த்துப் பாடலில் திங்களைப் போற்றி, ஞாயிற்றைப் போற்றிப் பின் மழையைப் போற்றுகிறார் இளங்கோ அடிகள்.

"மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாம நீர் வேலி உலகிற்கு
அவன் அளிபோல்
மேல்நின்று தான் சுரத்தலான்"

(சிலப்பதிகாரம் – மங்கல வாழ்த்துப் பாடல்)





கடல் சூழ்ந்த உலகைக் காக்க அவன் (இங்கு சோழன்) கருணை போல் மேலிருந்து பொழிவதால் 'மாமழை போற்றுவோம்! மாமழை போற்றுவோம்!' என்று வாழ்த்துகின்றார் இளங்கோ அடிகள்.

வில்லியம் ஷேக்ஸ்பியரின் 'வெனிஸ் நகரத்து வியாபாரி' 'Merchant of Venice' என்ற நாடகத்தில் ஒரு காட்சி : ஷைலாக் வட்டிக்குப் பணம் தருபவன். பிழிந்து திருப்பி வாங்குபவன். ஆண்டேனியோ செல்வந்தன்தான். ஆனால் வரவேண்டிய அவன் கப்பல் மூன்று மாதங்கள் பொறுத்து வரும் என்பதால், அவனது நண்பன் பஸானியோ (Bassanio) திருமணத்திற்காக ஷைலாக்கிடம் *3000* முத்திரை (Ducats) கடன் கேட்கிறான்.

ஷைலாக் நிபந்தனை என்னவெனில், மூன்று மாதத்திற்குள் தர வில்லையெனில், ஆண்டேனியோவின் உடம்பில் இருந்து சதையை அறுத்துக் கொள்வேன் என்பது. ஒப்புக் கொண்டான் ஆண்டேனியோ.

கப்பல் புயலில் சிக்கிக் கொண்டது. பணம் தர முடியவில்லை. வழக்கு மன்றத்திற்குச் சென்றது. ஆண்டேனியோவின் வழக்கறிஞராக போர்ஷியா (பஸானியோவின் மனைவி) வக்கீல் வேடத்தில் வருகின்றாள். மூன்று மடங்கு பணத்தைத் திருப்பித் தர ஒப்புக் கொண்டுள்ளதால், சதை அறுப்பதை வற்புறுத்த வேண்டாமென வேண்டுகிறாள். அப்போது ஷைலாக்கிடம் போர்ஷியா சொல்வதாய் ஷேக்ஸ்பியர் எழுதிய

வரிகள் :

The quality of mercy is not strain'd if droppeth as the gentle rain from heavens : upon the place beneath it is twice blest. It blesseth him that gives and him that takes.

'கருணை என்பது வற்புறுத்தி வருவதல்ல. அது மென்மையான மழை மேலிருந்து (வானிலிருந்து) பெய்வது போன்றது. கருணையைப் பொழிபவர் இரு வகையாலும் ஆசிர்வதிக்கப் படுகின்றார். ஒன்று மென்மையான இதயத்தைப் பெறுகின்றார். கருணையைப் பெற்றவரின் நன்றியைப் பெறுகின்றார்.'



இளங்கோ அடிகளும், ஷேக்ஸ்பியரும் கருணையை மழையோடு ஒப்பிடுகின்றனர்.



"மேல் நின்று தான் சுரத்தலான்" என்று இளங்கோ அடிகள் சொல்கிறார். அதே கருத்தை "Droppeth as the gentle rain from heavens" என்ற வரியில் ஷேக்ஸ்பியர் சொல்கின்றார்.

சிலப்பதிகாரம் 2–ஆம் நூற்றாண்டு. ஷேக்ஸ்பியர் 16–ஆம் நூற்றாண்டு. ஒருவரை ஒருவர் படித்திருக்க வாய்ப்பில்லை. உலகக் கவிஞர்கள் ஒரே மாதிரி சிந்திக்கிறார்கள் என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு.

செயங்கொண்டாரும் – ஷேக்ஸ்பியரும் : முதல் குலோத்துங்கச் சோழனின் அவைக்களப் புலவராகப் புகழ்பெற்றவர் செயங்கொண்டார். கருணாகரத் தொண்டைமான், முதல் குலோத்துங்கச் சோழனுடைய படைத் தலைவனாக விளங்கியவர்.

வட கலிங்கத்தின் மேல் படையெடுத்து அனந்த வன்மன் என்ற மன்னவனை வென்று, அவ்வெற்றியை முதல் குலோத்துங்கச் சோழனிடம் ஒப்படைத்த கருணாகரத் தொண்டைமானின் களவீரத்தைப் பாடியவர் செயங்கொண்டார்.

செயங்கொண்டார் எழுதிய நூல் கலிங்கத்துப் பரணி. கடைத்திறப்புக் காதையால் புகழ்பெற்ற கலிங்கத்துப் பரணியில் 'களம்பாடியது' என்ற பகுதியில் ஒருபாடல்.

களத்துக்கு வருகின்றாள் கணவனைத் தேடி –

மண்ணில் கிடந்த மணாளனை மார்போடு வாரி அணைத்துக் கொள்கிறாள். உற்ற கணவனை அணைத்தவள் சற்று நாழிகையில் உயிரை விடுகின்றாள். ஏன்?

தன் கணவனைத் தரைமகள் தழுவுவதைத் தாளாமல், தான் ஏந்திக் கொண்டாள். உயிர் துறந்தவனை விண்மகளிர் அணைப்பதற்கு முன்னே வானுலகம் சென்று அணைத்துக் கொள்ள வேண்டுமென உயிர் துறந்தாள். என்னே உரிமை உணர்ச்சி!

> "தரைமகளும் தன்கொழுநன் உடலம் தன்னைத்
> தாங்காமல் தன் கரத்தால் தாங்கி, விண்ணாட்டு
> அரமகளிர் அவ் வுயிரைப் புணரா முன்னம்
> ஆவிஒக்க விடுவாளைக் காண்மின், காண்மின்" (484)

ஷேக்ஸ்பியரின் ஆண்டனி – கிளியோபாட்ரா என்ற நாடகத்தில் கடைசிக் காட்சி.

ஆண்டனி இறந்துவிட்டான் என்றதும், வாழ்வை முடித்துக்கொள்ள முடிவு எடுத்துவிட்டாள் கிளியோபாட்ரா. விரியன் பாம்பைக் கொண்டு வந்து தருகின்றான் பணியாளன்.

பணிப்பெண்களான சார்மியா, ஈராஸ் இருவரும் வருகின்றார்கள். முத்தமிடுகின்றாள் கிளியோபாட்ரா. ஈராஸ் இறந்து கீழே விழுகின்றாள்.

"என் உதடுகளே விரியன் பாம்புகளாகிவிட்டனவா?" என்று சொன்னவள், அவசரமாகச் சொல்கிறாள் :

"இவள் எனக்கு முன்போய் அந்தச் சுருட்டை முடி ஆண்டனியைப் பார்த்தால் என்னைப் பற்றிக் கேட்பார். செய்தி சொன்னதற்கு இவளுக்கு முத்தம் கொடுப்பார். அவருடைய முத்தம் எனக்கேயான சொர்க்கமல்லவா. வா வா கொலைகாரப் பிராணியே, விரைந்து வா" (ஒரு விரியன் பாம்பை எடுத்துத் தன் மார்பகம் மேல் விட்டுக் கொள்கிறாள்.)

(If she first meet the curled Antony, He will demand of her, and spend that kiss which is my heaven to have. Come, thou mortal wretch, (to the asp, which she applies to her breast).

அமரமகளிர் தழுவுவதற்கு முன் வானுலகம் செல்ல ஆவி துறந்தவள் கலிங்கத்துப் பரணியில்.

பணிப்பெண் ஈராஸ் இறந்து முன்னே சென்றால் என்னைப் பற்றி விசாரிப்பான் ஆண்டனி. அதற்காக ஒரு முத்தம் பரிசாகத் தருவான். அது என் சொர்க்க முத்தமாயிற்றே என்கிறாள் கிளியோபாட்ரா.

தமிழ்ப் பண்பாட்டின்படி ஒரே கணவருடன் வாழ்பவள் "உரிமை உணர்வை" வெளிப்படுத்துகிறார் கலிங்கத்துப் பரணியில்.

பாம்பே, சீசருடன் வாழ்ந்தபோதிலும் ஆண்டனியை ஆழமாகக் காதலித்த கிளியோபாட்ராவின் உரிமை உணர்வைக் காட்டுகிறார் ஷேக்ஸ்பியரின் நாடகத்தில். கலிங்கத்துப் பரணி 12-ஆம் நூற்றாண்டு - ஷேக்ஸ்பியர் 16-ஆம் நூற்றாண்டு.

செயங்கொண்டாரும் ஷேக்ஸ்பியரும் பெண்ணின் "உரிமை உணர்வு" குறித்து ஒரே மாதிரி சிந்தித்திருக்கிறார்கள்.

●

கட்டுரை

கவசத் திருநீறு



தொல்காப்பியக் காலம் தொட்டு 'மெய்ம்மறை' என்றும், 'கவசம்' என்றும் குறிப் பிடப்படும் பாதுகாப்பான மேலுறை வழக்கில் உள்ளது.

தொல்காப்பிய உரைகளில் மிகச்சிறந்த உரை சேனாவரையர் உரை ஆகும். சொல்லதிகாரத்தில் வினை வேறுபடும் சொல் இனத்தினாலும் சார்பி னாலும் பொருள் விளங்கும் என்பதனை விளக்க வந்த சேனாவரையர், "கவசம் புக்கு நின்று மாக் கொணாவென்ற வழிக் குதிரை என்பது சார்பி னால் விளங்கிற்று" என்று சான்றும் விளக்கமும் தந்துள்ளார். அக்காலத்தில் கவசம் என்ற ஒன்று வழக்கில் இருந்ததை இதனால் அறிய முடிகிறது.

சங்க இலக்கியங்களில் மெய்ம்மறை என்றும், கவசம் என்றும் கூறப்படுகின்றது. புறநானூற்றில், "புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய" என்று வருகின்றது. இதற்கு, "புலியினது தோலால் செய் யப்பட்ட மெய்புகு கருவி" என்று பழைய உரை கூறுகின்றது.

பதிற்றுப்பத்தில் 'மெய்ம்மறை' என்று வரு கிறது. பக்தி இலக்கியங்களில் சமயச் சின்னங்கள் கவசமாக நாயன்மார்களால் பாடப்பட்டுள்ளன. திருமூலர் திருமந்திரத்தில்,

"கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே"

கங்காளனாகிய இறைவன் அணியும் திரு நீற்றை நாம் கவசமாக அணிந்து கொண்டால் வினைகள் வாரா. சிவகதி அடையலாம். இறை வன் திருவடி சென்று சேரலாம் என்பது பாடல் கருத்து. எனவே, திருநீற்றைக் கவசமாகப் பூசிக் கொள்ளும் முறை உண்டென்பது புலனாகிறது.

மாணிக்கவாசகராலும், நம்பியாண்டார் நம்பியாலும், பட்டினத்தாராலும் பாராட்டப்பெற்றவர் வரகுணபாண்டியன் ஆவான். வரகுணபாண்டியன் பக்தியில் சிறந்தவன். இவனது பக்தி மிகுதி விளங்குதற் பொருட்டு, அச்செய்திகளை இவ்வாசிரியர் தம் பாடலில் பொறித்தார். அவை வருமாறு...

1. உண்மையாகவே களவு செய்த ஒருவனைக் காவலர் கண்டுபிடித்துக் கையில் விலங்கு பூட்டிக் கொணர்ந்த பொழுது அரசனது பக்தி யை அறிந்த அவன், வழியில் இருந்த ஒரு சுடு காட்டில் கீழே விழுந்து புரண்டு உடம்பெங்கும் சாம்பலைப் பூசிக் கொண்டவனாய்ச் சிரித்து, 'அரஹர' என்று சொல்லிச் செல்ல, அதனைக் கண்டு இவ்வரசர், "இவ்வடியவரைக் 'கள்வன்' என்றல் தகாது" என்று சொல்லி விடுவித்துவிட்டான்.

2. எப்பொழுதும் 'சம்போ, சங்கர, மகாதேவ' என்று சொல்கின்ற இவன் காதில் ஒரு நாள் நள்ளிரவில் காட்டில் குறுநரிகள் ஊளையிட்ட சத்தம் கேட்க, 'சம்பு' என்றும், 'சம்புகம்' என் றும் பெயர் பெற்றுள்ள அவை சம்புவைப் பாடித் தோத்திரிக்கின்றன எனக் கருதி, அவை பனி யின் குளிரால் வருந்தாதபடி ஏவலரை ஏவிப் போர்வைகள் போர்க்கக் கட்டளையிட்டான்.

3. ஒரு சமயம் பெருமழை பெய்து ஓய்ந்தபின் தவளைகள் பல ஒருங்கே கத்த, அந்த ஓசையை அவை 'அரஹர! அரஹர!' எனச் சிவபெருமானைத் துதிப்பதாகக் கருதி அவற் றிற்குப் பரிசாக இரத்தினங்களையும், பொன் னையும் நீர் நிலைகளில் சென்று இறைக்கும் படி ஏவலர்களைக் கொண்டு செய்வித்தான்.

4. ஒரு சமயம் சிவாலயத்தில் உள்ள சிவ பெருமானது திருமஞ்சனத்திற்கு வேண்டிய எண்ணெயின் பொருட்டு அர்ச்சகன் ஒருவ னிடம் செக்கில் இடும்படி அரசன் பண்ட சாலையிலிருந்து கொடுத்தனுப்பிய எள்ளில், அவ்வர்ச்சகன் சிறிது எடுத்துத் தின்னுவதைக்



கண்டு சிலர் அவனைப் பிடித்துக் கொண்டுபோய் அரசனிடம் காட்டினர்.



அரசன் அவனை விசாரித்தபொழுது அவன், 'திருமஞ்சன எண்ணெய்க்கு வைத்த எள்ளைத் தின்றவர் அடுத்த பிறப்பில் திருமஞ்சன எண்ணெய் ஆட்டும் செக்கினை இழுக்கும் எருதுகளாகப் பிறப்பர்' என்பது சாத்திரம். அப்பிறப்பை நான் அடைய விரும்பி இந்த எள்ளைத் தின்றேன் என்று சொல்ல, இவன் 'நானும் அப்பிறப்பை அடைய வேண்டும்' என்று சொல்லி அவன் வாயிலிருந்து சிறிது எள்ளை எடுத்துத் தின்றான்.

5. திருவிடை மருதூர் வீதியில் கிடந்த ஒரு தலையோட்டினை இவன் கண்டு, 'இஃது இங்ஙனம் இங்குக் கிடத்தலால் இத்தலையைப் பெற்றிருந்தவர் சிவலோகத்தை அடைந்திருத்தல் திண்ணம் என்று கருதி, அத்தலையோட்டினிடம் சென்று, 'எனது தலையோடும் இவ்வாறு கிடக்க அருள் செய்வீர்' எனக் குறையிரந்தான்.



6. சிவாலயத்தின் முன் ஓரிடத்தில் நாயின் மலம் இருக்கக் கண்டு, அதனைத் தானே சென்று எடுத்து அப்புறப் படுத்தி ஆலயத்தைத் தூய்மை செய்தான்.

7. வேப்ப மரம் ஒன்றின்கீழ் அதன் கனிகள் உதிர்ந்து கிடக்க அவை சிவலிங்கம் போலக் காணப்படுதலைக் கண்டு, 'இனி வேப்ப மரங்களில் எதுவும் வெயிலில் உலர்தலும், மழையில் நனைதலும் கூடா' என்று அவைகட்கெல்லாம் நல்ல பந்தல்களை இடச் செய்தான்.

இவ்வாறு பட்டினத்தார் 'திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில்' வரகுண பாண்டியனுடைய பக்திச் சிறப்பைப் பாராட்டியுள்ளார்.

அத்தகைய வரகுண பாண்டியன் பகைவரோடு போருக்குச் சென்றான். வேறு கவசம் அணிந்து கொள்ளாமல், திருநீற்றையே கவசமாக அணிந்து கொண்டு போருக்குச் சென்றான்.

போரில் பகைவர் எய்த போர்க் கருவிகள் வரகுண பாண்டியனை எதுவும் செய்யவில்லை. உள்ளங் காலில் மட்டும் அம்பு ஒன்று தைத்தது. 'திருநீறு அணியாத அடியாகிய (பாதமாகிய) உனக்கு இவ்வாறு அம்பு தைத்தது ஏற்றதே' என்று வரகுணன் கருதினான் என்ற செய்தியை நம்பியாண்டார்நம்பி 'கோயில் திருப்பண்ணியர் விருத்தத்தில்' பாடியுள்ளார்.

முனைவர் ந. இரா. சென்னியப்பனார்



சமய நம்பிக்கை உடையவர்களுக்குச் சமயச் சின்னங்கள், இறைவனுடைய கருவிகள் ஆகியவற்றைக் கவசப் பொருள்களாக மேற்கொள்வது மரபாகும்.

முருக பக்தர்களில் படித்தவர்கள் திருமுருகாற்றுப் படை, கந்தர் அனுபூதி, கந்தர் கலி வெண்பா முதலியவற்றை மரபாகப் பாராயணம் செய்து வருகின்றனர். இன்னும் சிலர் கந்தர் சஷ்டி கவசம், சண்முகக் கவசம் முதலியவற்றைப் பாராயணம் செய்து வருகின்றனர்.

என்னுடைய தந்தையார் எழுதப் படிக்கத் தெரியாதவர். ஆனால், சஷ்டி திதி தோறும் கந்தர் சஷ்டி கவசம் பாராயணம் செய்வார். படித்த ஆசாரி ஒருவர் ஊரில் இருந்த அனைவருக்கும் சஷ்டி கவசம் முதலியவற்றைச் சொல்லித் தந்துள்ளார். அவற்றைச் செவிவழியாகக் கேட்டுப் பாராயணம் செய்து வந்துள்ளார்.


மக்களிடத்தில் கந்தர் சஷ்டி கவசம் பாராயணம் செல்வாக்குப் பெற்றுள்ளது. அதனால் தொடர்ந்து பலரும் பாராயணம் செய்து வருகின்றனர். ●

கட்டுரை

தொழிலும் வேலைவாய்ப்பும்!

நம் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள், கோவலன் வேறு நகருக்குப் பொருள் ஈட்டச் செல்வதையும், அதனால் மற்றொரு உறவு உருவாவதையும் எடுத்துச் சொல்லி இருப்பார். அது போலப் பண்டைக் காலம்தொட்டுத் தொழிலோ அல்லது வேலையோ செய்து பொருள் ஈட்ட வேண்டும் என்றால் பெரும்பாலும் வேறு இடத்திற்குச் செல்வது வாடிக்கையாகிவிட்டது.

இன்றைய நிலையில் விவசாயம் தவிர்த்துப் பிற வேலைகள் மற்றும் தொழில்கள் அனைத்தும் அவரவர் ஊரில் மேற்கொள்ள யாரும் முன்வருவதில்லை. தினக்கூலி வேலை செய்வோரே மாநிலம்விட்டு வேறு மாநிலத்திற்குச் செல்லும் நிலைமை இருந்து வருகிறது. அதற்கான காரணம் அங்கு வேலைவாய்ப்பு அமையாததே. ஏன் அமையவில்லை என்றால், தொழில் செய்ய ஏற்றதொரு சூழல் அமைந்திருக்காது. மேலும் சூழல் என்பது அரசியல், முதலீடு, தொழிற்சாலை இடம் தேர்வு செய்தல் முதலியவற்றின் காரணிகளைக் கொண்டே பெரும்பாலும் சூழ்ந்துள்ளது.



உதாரணத்திற்கு ஒரு மிகப்பெரிய நிறுவனத்தில் நடந்த சம்பவம் ஒன்றை இங்கு விளக்கினால் தகும். அந்த மிகப்பெரிய நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி பிரபலமான நகரத்தில் ஹோட்டல் அதுவும் ஐந்து நட்சத்திரத் தரத்தில் அமைக்க எண்ணினார். எனவே தன் நிறுவனத்தின் ஊழியர்களை அழைத்து, ஹோட்டல் இந்த நகரத்தில் எந்த இடத்தில் அமைக்கலாம் என்பதை ஆராய்ந்து அறிந்து வருமாறு கூறி அதற்கு ஒரு வார காலம் அவகாசமும் கொடுத்தார்.

பின்பு ஒரு வாரம் கழித்து ஊழியர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் தேர்வு செய்திருந்த இடத்தையும், அதற்கான காரணத்தையும் விளக்கினர்.

அனைத்தையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த தலைமைச் செயல் அதிகாரி "உங்களின் முயற்சியைப் பாராட்டுகிறேன். அதே சமயத்தில் பலரும் குதிரைக்குக் கடிவாளம் இட்டதுபோல் ஒரே நேர்கோட்டில் அல்லவா யோசித்து உள்ளீர்கள். அதனைத் தாண்டி ஒருவருமே யோசிக்கவில்லை" என்றார்.

உடனே அந்தக் கூட்டத்தில் ஓர் ஊழியர் எழுந்து, "நாங்கள் தேர்வு செய்த இடத்தில் எந்த வொரு குறையும் இருப்பதாகத் தெரியவில்லை" என்றார்.

அதற்கு அந்தத் தலைமைச் செயல் அதிகாரி, "நீங்கள் தேர்வு செய்த இடத்தின் மூலம் அங்குள்ள எத்தனைப் பேருக்கு மறைமுக வேலை வாய்ப்பு அமையும், மேலும் நாம் அங்கு ஹோட்டல்

தொடங்குவதால் பொருளாதாரம் அங்குள்ள மக்களை எவ்வகையில் உயர்த்தும்'' எனக் கேட்டார். ஒருவரிடமும் பதில் இல்லை.

''நானும் ஒரு வார காலமாக எந்த இடத்தில் ஹோட்டல் தொடங்கலாம் என ஆய்வு செய்தேன். ஆய்வின் பலனாய் நாம் ஹோட்டல் அமைக்கப் போகும் இடம், நகருக்கு வெளியே அமைந்துள்ள ஒரு சிற்றூரில்தான். உங்களுக்குப் போயும்போயும் அந்தச் சிற்றூரில் ஹோட்டல் அமைப்பதா எனக் கேள்வி எழலாம். ஆயினும் நாம் அங்கு ஹோட்டல் அமைத்தால், நிச்சயம் அங்குள்ள மக்களுக்கு நேர்முகமாக வேலை கிடைப்பதுடன் மறைமுகமாக வேலைவாய்ப்பும் அமையும்.

''மக்களின் வரவு அதிகரிக்கும்போது, அங்குள்ள ஊரவரும் தங்களுக்கு ஏற்ற சிறுதொழிலை ஆரம்பிக்க முற்படுவார்கள். அதன்மூலம் வேலை வாய்ப்புப் பெருகுவதுடன் அந்த ஊரின் பொருளாதாரமும் மேம்படும். இறுதியாக அங்கு ஏற்படும் வளர்ச்சியின் குறியீட்டில் தன்னைத் தானே புதுப்பித்துக்கொள்ள இளைஞர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்புவர்'' என்றதும் அனைத்து ஊழியர்களும் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

மேலும் தலைமைச் செயல் அதிகாரி எண்ணியது போலவே, இன்று அந்த ஊர் பன்மடங்கு வளர்ச்சியில் நாளும் வளர்ந்து வருகிறது. எனவே வேலைக்காக இடம்பெயர்வது என்பதை இது போன்ற செயல்களின் மூலம் குறைக்கலாம்.

எனினும் நம் நாட்டைப் பொறுத்தவரையில் இன்னமும் வேலை வேண்டும் என்றால், நகரத்திற்குப் படையெடுப்பது என்பது வாடிக்கையாகி வருகிறது. அதுவும் நகரத்திற்குச் சென்று வேலை செய்து பணம் சம்பாதிப்பதைவிட, அவரவர் ஊரிலேயே பணம் சம்பாதிக்க வழிகள் இருந்தாலும் பலரும் முன்வருவதில்லை. அதற்கு அத்தகையோர் முன்வைக்கும் காரணம், உள்ளூரிலேயே வேலைக்குச் சென்றால் யாரும் மதிக்க மாட்டார்கள் என்பதாகும்.

மதிக்கமாட்டார்கள் என்பதுடன் திருமணம் செய்யப் பெண் கொடுப்பதற்குப் பெண் வீட்டார்கள் பலரும் முன்வருவதில்லை என்னும் குற்றச் சாட்டினை யாரும் இங்கு மறுப்பதற்கில்லை. மாப்பிள்ளை வெளியூரில் பணியில் உள்ளார் என்று கூறுவதையே கௌரவமாக எண்ணுகின்றனர்.

எனவே கௌரவம் என்பது அயலூர்ப் பணியில் மட்டும்தான் உள்ளது என்பதைக் கைவிட வேண்டும். மேலும் முடிந்தவரையில் தொழில்

செ.சரத்



தொடங்கச் சாத்தியக் கூறுகள் கிராமம் சார்ந்த பகுதிகளில் இருக்குமேயானால் அதற்கு முக்கியத்துவம் தரவேண்டும்.

இவற்றையெல்லாம் கடந்து இன்று சொந்த பந்தம் என்னும் உறவுகள் அறுபட்டுப் போவதற்குக் காரணகர்த்தாவாய்ச் சில சமயங்களில் வெளியூரில் பணி செய்பவர்களுக்கு நிகழ்வுகள் அமைந்துவிடுகின்றன. அதிலும் பெற்றோருக்கு உடல்நிலை சரியில்லாத தருணத்தில் கூட அவர்களின் அருகில் இருந்து கவனிக்கும் வாய்ப்பு சில பிள்ளைகளுக்குக் கிட்டாமல் போய் விடுகிறது.

மேலும் இன்றைய நிலையில் கரோனா வைரஸின் தாக்கத்தை உணர்ந்து தன் சொந்த ஊருக்குப் பலரும் படையெடுத்து வருகின்றனர். அதனை மெய்ப்பிக்கும் பொருட்டுக் கீழ்க்காணும் வரிகள்:

"பேரப் பிள்ளைகளைப் பார்க்க ஆசையுள்ளதாகக்
கிழவி அழைத்தபோதும்;
ஊர்கூடித் திருவிழாக் கொண்டாட ராக்காயி அம்மா
அழைத்தபோதும்;
அத்தை மகள் வள்ளி பெரிய மனுசி
ஆகிவிட்டாளென்று அழைத்தபோதும்;
சிறுவூர்க் கிழவன் படுத்த படுக்கையாகிட்டார் என்று
அழைத்தபோதும்;
வள்ளியூர் மாமன் கிடா வெட்டுக்கு
அழைத்தபோதும் – வாராத
சிவக்கொழுந்து ஏதோ வெளியூரில் இருந்து
நோய்க்கிருமிக்குப் (கரோனா)– பயந்து
வாரானாமென்று குழாயடியில் பேசிக்கொண்டாள்
சின்னக்கருப்பி."

இவை அனைத்தும் ஓர் எதார்த்தமான வார்த்தைகள் என்றாலும் தொலைந்துபோன உறவுகளின் வலியை நமக்குக் காட்டுகின்றன.

ஆகவே, இங்கு யாரையும் குற்றமென்றும், குறையென்றும் கூறிவிட முடியாது. எனினும் நமக்காக அமைந்த வாழ்க்கை ஒன்றுதான். எனவே, முடிந்தவரையில் நாம் வாழும் வாழ்க்கையை நமக்காகச் சுற்றத்துடனும், நட்புடனும் வாழ்வதே சிறப்பினும் சிறப்பு. ●





மறைந்த கோவை ஞானி நினைவாக...

கலையும் சித்தாந்தமும்

கோவை ஞானி

22.7.2020 அன்று மரணமடைந்த சிந்தனையாளர் கோவை ஞானி, கோவையின் அடையாளங்களில் குறிப்பிடத்தக்கவர். 'ஓம் சக்தி' பத்திரிகையில் 1997 முதல் 2002 வரை அவர் 7 கட்டுரைகள் எழுதியுள்ளார். அவற்றில் 'கலையும் சித்தாந்தமும்' என்ற அவருடைய கட்டுரை அசலானது.

ஏனெனில், அக்கட்டுரையில் மார்க்சியச் சித்தாந்தத்தின் அழகுணர்ச்சி பற்றி உரிய மேற்கோள்களோடு எழுதியிருந்தார். அதனை மறுத்து மார்க்சியச் சித்தாந்தவாதிகளான பேராசிரியர் எஸ். தோத்தாத்ரி அவர்களும், சதயகுமாரன் என்பவரும் ஞானியே ஆச்சரியப்படும்படி எழுதினார்கள்.

ஞானியின் 'கலையும் சித்தாந்தமும்' என்ற அக்கட்டுரையை, அவருடைய மறைவின் நினைவாக 'ஓம் சக்தி' வாசகர்களுக்கு மறு பிரசுரம் செய்துள்ளோம்.

– இ.ஆர்.

மார்க்சிய நோக்கில் கலை குறித்து சரியாகப் புரிந்து கொள்ளும் முறையில் சில கருத்துக்களை இங்கு விளக்க வேண்டி இருக்கிறது. சித்தாந்தம் என்பதன் வரையறையைக் கடந்து செல்லவல்லது கலை என்பதை உறுதிப்படுத்துவதற்காக இந்த விளக்கங்கள் இங்குத் தேவைப் படுகின்றன.

1. "சமுதாயத்தில் சில சந்தர்ப்பங்களில் கலை அடைந்திருக்கிற உன்னதத்தை அந்தச் சமுதாயத்தின் பொருளியல் அடிப்படை கொண்டு விளக்க முடியாது." கருத்து முதல்வாதம் என்று கட்சிக்காரர்கள் கூறிவிடக்கூடிய இந்தக் கருத்துக்கு உரியவர் காரல் மார்க்ஸ். "அரசியல் பொருளாதாரம் குறித்த திறனாய்வு" என்ற நூலின் முன்னுரையில் மார்க்ஸ் இப்படி எழுதியுள்ளார். அடித்தளம், மேற்கட்டு குறித்த வரையறையை இந்த முன்னுரையில்தான் மார்க்ஸ் முன்வைத்தார்.

மார்க்ஸின் இந்தக் கூற்றை எப்படிப் புரிந்து கொள்வது என்று கட்சிக்காரர்கள் சிந்திக்க வேண்டும். கலை முதலியவை ஒரு சமுதாயத்தில் தோன்றிய பிறகு, அதன் சுய விதிகளைக் கொண்டு இயங்குகின்றன என்ற ஏங்கெல்சின் கூற்றை இங்குப் பொருத்திப் பார்க்க முடியும்.

2. இதே முன்னுரையில் தொடர்ந்து மார்க்ஸ் எழுதுகிறார், கிரேக்கக் கலைகள் தோன்றி, அது தோன்றிய சமூகச் சூழலைக் கடந்து இன்றுவரை நம்மைக் கவர்கின்றன. இதன் காரணம் என்னவென்று நமக்குத் தெரியவில்லை. இப்படி எழுதிய மார்க்ஸ், இதற்கான காரணம் குறித்து 'கிரன்ரிசே' என்ற நூலில் கூறுகிறார். மூலதனம் என்ற நூலை எழுதுவதற்கு முன்னர் தனது ஆய்வைத் தனக்குத்தானே தெளிவுபடுத்திக் கொள்ளும் முறையில் மார்க்ஸ் எழுதிய கையெழுத்துப்படிகளின் தொகுப்பு இந்த நூல்.



மில்+டன்

3. 'சுவர்க்க நீக்கம்' என்ற காவியத்தை மில்டன் இயற்றினார். பட்டுப்புழு, பட்டு இழைகளைப் படைப்பதற்கான காரணம் எதுவோ, அதே காரணத்திற்காகத்தான் மில்டன் இந்தக் காவியத்தைப் படைத்தார். பட்டு இழைகளைப் படைப்பது பட்டுப்புழுவிற்கு இயல்பாகிவிட்டது. இதுவும் மார்க்ஸின் கூற்றுதான். இந்தக் கூற்றில் இடம் பெறும் 'இயல்பு' என்ற சொல்லைச் சாய்வெழுத்துக்களில் தந்திருக்கிறார் மார்க்ஸ்.

கொஞ்சம் இதை விளக்க வேண்டி இருக்கிறது. பட்டு இழைகளை உற்பத்தி செய்வது பட்டுப்புழுவின் வாழ்வுச் செயல். இந்தப் படைப்பில் தான் அதன் வாழ்வு நிறைவுறுகிறது. இந்தப் படைப்பில் ஈடுபடாமல் பட்டுப்புழுவால் உயிர் வாழ முடியாது. யாராவது இடையில் சென்று 'பட்டு உற்பத்தி செய்யாதே... இப்படிச் செய்தால் வெந்நீரில் உன்னைப் போட்டுச் சாகடித்துப் பட்டு இழைகளை எடுத்துக் கொள்வார்கள்' என்று சொன்னால் பட்டுப்புழு அதைக் கேட்காது. தன் வாழ்வுச் செயலை எந்தக் காரணத்திற்காகவும் அதனால் நிறுத்திக் கொள்ள இயலாது. இது பட்டுப்புழுவின் இயல்பு.

மில்டன் மாபெரும் கவிஞர். எழுதி எழுதித் தன்னைப் படைத்துக் கொண்ட கவிஞர். எழுதாமல் அவரால் இருக்க இயலாது. எழுதுவதன் மூலம்தான் தன் வாழ்வை நிறைவு செய்து கொள்கிறார். தொடர்ந்து எழுதுவதனால் கண் பார்வை முற்றாக அழிந்துவிடும் என்றோ, அவர் வாழ்நாள் குறைந்துவிடும் என்றோ யாரேனும் சொன்னால், அவரால் ஏற்க முடியாது. தனக்குள், ஊற்று எனத் தொடர்ந்து பெருகும் கவிதைகளை அவர் எழுதித்தான் ஆக வேண்டும். எழுதும் போதுதான் தன்னையும் அவர் படைத்துக் கொள்கிறார்.

உபரி மதிப்புக் கோட்பாடு குறித்த ''மூலதனம்'' நான்காவது தொகுதியில் இடம் பெறுகிறது இந்தக் கூற்று. தொழிலாளி ஒரு பொருளை உற்பத்தி செய்கிறார் என்றால், அதற்கான விலை மதிப்பை நிர்ணயிக்கும் விதிமுறைகளைச் சொல்லிவரும் பகுதியில், மில்டன் போன்ற பெருங்கவிஞர்களின் படைப்புகளின் மதிப்பை இப்படி நிர்ணயிக்க முடியாதென்று மார்க்ஸ் சொல்கிறார்.

உயிரைக் கொடுத்து ஒருவர் காவியம் படைக்கிறார். உயிருக்கு என்ன விலை தரமுடியும்? ஓய்வு இருந்ததால், கம்பன் தன் காவியத்தை இயற்றினார் என்று கூறுவதன் அபத்தம் குறித்தும் இங்குச் சிந்திக்கலாம்.

4. இன்னும் சில கூற்று. இதற்கும் உரியவர் மார்க்ஸ்தான். 'பயர்பாக்' குறித்த ஆய்வுரைகளில் இந்தக் கூற்று இடம் பெறுகிறது. ''சூழல்தான் மனிதனை உருவாக்குகிறது என்பது உண்மையில் ஒரு பாதி மட்டுமே. இதன் மறுபாதி, சூழலை மனிதன்தான் படைக்கிறான் என்பதாகும்.'' வரலாற்று வழியே வந்து மனிதனுக்குள் தங்கி இருக்கிற சக்திகள் குறித்து இங்குச் சிந்திக்க வேண்டும்.

சூழலுக்கே அழுத்தம் தருவது கட்சி மார்க்சியம். சூழலை மாற்றும்போதுதான் மனிதன் தன்னையும் படைத்துக் கொள்கிறான் என்பது அசலான மார்க்சியம். ஒரு சிற்பத்தைப் படைக்கும் போதே தன்னையும் படைத்துக் கொள்கிறான் சிற்பி என்று கூறியவர் மார்க்ஸ். கருவி முதலியவற்றைப் படைக்கும்பொழுதே தன்னையும் படைத்துக் கொள்கிறான் மனிதன். கருவிகள் என்பதனுள் கலைகளும் கருத்துக்களும் அடங்கும். அகமும் புறமும் ஒன்றுக்கு மற்றது எதிரானவை அல்ல. ஒன்றினுள் மற்றது ஊடுருவாமல் இரண்டும் இல்லை.

கருத்து என்றும், பொருள் என்றும் தனித் தனியே இல்லை. கருத்துமுதல் என்பதையும், பொருள்முதல் என்பதையும் முற்றாக எதிர் நிறுத்துவதும் சாத்தியமில்லை. தத்துவங்களைக் கருத்துமுதல் வாதமென்றும், பொருள்முதல் வாதம் எனவும் முற்றாகப் பிரித்துப் போட்டுவிடவும் முடியாது. ஒரு வகையில் புரிதலுக்காக வகுத்துக் கொண்ட இந்தப் பிரிவை, இறுதிவரை கொண்டு செலுத்த முடியாது. ஏங்கெல்ஸ் இப்படிச் செய்ய வில்லை. அரிச்சுவடியிலேயே எல்லாம் அடங்கி விடுவது இல்லை.

5. மார்க்சியத்தைச் சித்தாந்தம் என்ற அளவுக்கே கட்சி மார்க்சியர் குறைத்துவிட்டனர். மார்க்சியத்திற்கு மெய்யியல் என ஒன்று

இல்லையென்பது இவர்கள் கருத்து. தத்துவ வாதிகள் இதுவரை "உலகத்திற்கு விளக்கம் சொன்னார்கள். இனி, உலகத்தை மாற்றுவதுதான் நாம் செய்ய வேண்டிய பணி" என்பது மார்க்சின் புகழ்பெற்ற கருத்துரை. இனித் தத்துவங்கள் தேவையில்லை என்பதற்கு இவர்களுக்கு இந்தக் கூற்று ஆதாரம். இயற்கை அறிவியல்கள் முழு வளர்ச்சியடைந்த நிலையில், தத்துவத்திற்கு வேலையில்லை என்று ஏங்கெல்ஸ் எழுதி இருக் கிறார். இந்த மேற்கோளும் இவர்களுக்கு ஆதாரம்.

சித்தாந்தம் வரையறைகளோடு / வரையறை களுக்குள் செயற்படுவது. வரையறைகளைக் கடந்து செயற்படுவது மெய்யியல். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற வரையறையை முன்வைப்பது சித்தாந்தம். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பதும் ஓர் அரசுதான். அரசு என்ற அமைப்பு இருக்கும்வரை அந்நியமாதலும் இருக்கும்; மதமும் இருக்கும். ஆகவே, அரசு என்பது உதிரத்தான் வேண்டும். நிர்வாகம் மக்கள்மயமாக வேண்டும். இப்படிச் சொல்வது மெய்யியல் / மார்க்சிய மெய்யியல்.

எந்தப் படைப்பிற்கும் விலை மதிப்பிட முடியும் என்பது சித்தாந்தம். சாதாரணப் படைப்புகளுக்கு இந்த விதி பொருந்தும் என்பதில் ஐயமில்லை. உயிரைக் கொடுத்துப் படைக்கும் உன்னதப் படைப்புகளுக்கு விலை மதிப்பிட முடியாது என்று சொல்லுவது மெய்யியல்.


முதலாளிகளின் தலைமையிலுள்ள அரசதிகாரத்தைப் பாட்டாளி வர்க்கம் கைப்பற்ற வேண்டும்; முதலாளிகளை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பது சித்தாந்தம். அந்நியமாதல் என்ற நிகழ்வுப் போக்கு, உழைக்கும் மக்களைப் பாதிப்பது போன்றே முதலாளிகளையும் பாதித் திருக்கிறது. சமுதாயத்தின் பொருளியல் அமைப் பிற்குள் முதலாளியும்தான் மாட்டிக் கொண்டிருக்கிறான். பொருளியல் அமைப்பை மாற்றுவதன் மூலமே முதலாளிகளையும் விடுவிக்க வேண்டும்.

இப்படித்தான் முதலாளிகளை யும் மனிதராக்க முடியும். முதலாளி களையும் விடுவித்தாலொழியப் பாட்டாளி வர்க்கம் தன் விடுதலையைச் சாதிக்க முடியாது. இப்படிச் சொல்வது மெய்யியல் / மார்க்சிய மெய்யியல்.


சுதந்திரம் பிரிவு படாதது என்ற மார்க்சின் கூற்று சித்தாந்தத்திற்குள் சிறைப்படாது. இயற் கையைத் தனக்கு அடிமைப்படுத்தும் மனிதன் தன்னையே அடிமைப்படுத்திக் கொள்கிறான். ஆயுதங்களை நம்பி இருப்பவன் ஆயுதங்களுக்கு அடிமை ஆகிறான். அதிகாரத்தை நம்பி இருப் பவன் அதிகாரத்திற்கு அடிமை ஆகிறான். ஆண்டான் இருக்கும்வரை அடிமையும் இருப் பான். அடிமை இருக்கும்வரை ஆண்டானுக்கும் விடுலை இல்லை. இது மார்க்சிய மெய்யியல்.

கட்சிக்குள்ளும் அதிகாரம் செயற்படத்தான் செய்கிறது. அதிகாரத்தை உருவாக்கும் கட்சி அமைப்பைக் கடந்து செல்ல வேண்டும். கடந்து செல்லுதலில் கவனம் இல்லையென்றால், கட்சிக் குள் அதி காரம் இறுகி விடும். இந்த அதி காரிக்கும்தான் விடுதலை இல்லை.

பகை முரண்பாட்டி



காரல் மார்க்ஸ்



லேயே கவனம் வைப்பது ஒரு வகை மார்க்சியம். நட்பு முரண்பாட்டிலும் கவனம் கொள்வது மாவோவின் மார்க்சியம். முரண்பாடுகள் இல்லாமல் சமூக இயக்கம் இல்லையென்பது உண்மைதான். பகை முரண்பாடு ஒழிந்த பிறகும் நட்பு முரண்பாடு நீடிக்கும். பகை முரண்பாடு தீராதவரை நட்பு முரண்பாட்டில் கவனம் கொள்ள முடியாது என்பது மார்க்சிய நெறி ஆகாது. பகைவனை ஒழிக்கும்வரை எனக்கு நண்பர்கள் தேவையில்லை என்பதைப் போன்றது இக்கூற்று. அன்றியும் அவன் ஏன் பகைவனானான் என்பது குறித்த புரியாமையும் ஆகும் இது. பிறப்பில் வர்க்கமில்லை. இயற்கையிலும் வர்க்கம் இல்லை.

6. வரலாற்றுக்கு முற்பட்ட ஆதிப் பொதுமைச் சமூகத்தில் மனிதன் இயற்கையோடு இருந்தான். சமூகத்தோடு இருந்தான். அவனுக்குள் பிளவு இல்லை. எல்லாவற்றோடும் ஒன்றி இருந்தான். எல்லோரும் கூடி உழைத்தனர். பகிர்ந்து கொண்டனர்.

வர்க்க வேறுபாடுகளைத் தொடர்ந்து தனியுடைமை, அரசு முதலியவை ஏற்பட்ட காலத்தில், மனிதன் தனக்குள்ளும் பிளவுபட்டான். இயற்கையில் இருந்தும் சமுதாயத்திலிருந்தும் அந்நியமானான். தனக்குள் பிளவுபட்ட நிலை அவனுக்கு உடன்பாடு இல்லை. பிளவுக்குக் காரணமான தனியுடைமை முதலியவை ஒழிய வேண்டும் என்பது இவனது பெருவிருப்பம்.

பணத்திற்கும் அதிகாரத்திற்கும் அடிமைப்படாத அந்த ஆதிமனிதன், இவனுக்குள் இன்னும் இருக்கிறான். இவனுக்கு அன்புதான் முக்கியம். சமத்துவத்தைத்தான் இவன் எப்போதும் நாடுகிறான். உடைமை முதலியவற்றினுள் சிறைப்பட்டு இருந்தாலும் தனக்குள்ளிருக்கும் அந்த ஆதி மனிதனை இவன் இழக்க விரும்புவதில்லை.

கவிதைகளிலும் இலக்கியங்களிலும் இவன் வெளிப்படுகிறான். நண்பர்கள், உறவினர்களோடு தன்னைப் பகிர்ந்து கொள்ளும்போது, இவன் அடையும் பரவசத்தில் அந்த ஆதிமனிதன் வெளிப்படுகிறான். தாய்மை என்பதனுள் இந்த ஆதி மனிதன் தழைக்கிறான். பிறர் நலத்திற்காகத் தன் உயிரையும் கொடுப்பவன் இந்த ஆதி மனிதன்தான். இவனைத்தான் சித்தன் என்கிறோம்.

கலைஞன் தனக்குள் இந்த ஆதி மனிதனைத்தான் தேடுகிறான். பிளவுபட்ட சமூகம் இவனுக்கு உடன்பாடு இல்லை. எந்த வரையறைக் குள்ளும் இவன் முடங்க விரும்பவில்லை. வானத்தை இவன் நேசிக்கிறான். காற்றோடும் பறவைகளோடும் இவன் தன்னை இழக்கிறான் அல்லது கண்டுபிடிக்கிறான். இயற்கையில் இவன் தன்னை மறக்கிறான். தோழமையில் பொங்குகிறான். சாதியையோ, மதப்பிரிவினைகளையோ இவன் விரும்புவதில்லை.

இவன் தனக்குள் இன்னும் குழந்தை. பிரிவினைப் பார்வை இவனுக்கு உடன்பாடு இல்லை. பிரபஞ்சத்தோடும் இயற்கையோடும் இவன் இணைந்திருக்கிறான். ஏற்றத்தாழ்வுகள் முதலியவற்றை எதிர்த்து நிற்கும்பொழுதே, இவன் அவற்றைக் கடந்து செல்லுகிறான். சித்தாந்தங்களுக்குள் இவன் சிறுமைப்பட விரும்பவில்லை. சித்தாந்தங்களைக் கடந்து செல்லும் மெய்யியலாளன்தான் இவனுக்குள் இருக்கிறான். இயற்கையில் கலந்து இசையோடு ஊடாடி, அன்பில் தன்னை இழந்து – இப்படித்தான் இவன் தன்னைப் பெறுகிறான். இவனுக்குள் இருந்துதான் மில்டனும் மார்க்சும் தோன்றுகின்றனர்.

திரும்பவும் சொல்லலாம், சித்தாந்தங்களைக் கடந்து இயங்குவது மெய்யியல். வர்க்கப் போராட்டங்களின் வழியே வர்க்கங்களைக் கடந்து செல்வது மார்க்சியம். சித்தாந்தத்திற்குள் கலை / கலைஞன் முடங்குவதில்லை.

ஓம் சக்தி

ஆருயிர்களுக்கு எல்லாம் – நான்
அன்புசெயல் வேண்டும்.
– வள்ளலார்

மலர் : 38 செப்டம்பர் 2020 இதழ் : 8

நிறுவனர் : **நா. மகாலிங்கம்**

ஆசிரியர் & வெளியிடுபவர் : **ம. மாணிக்கம்**

Editor & Publisher : **M. MANICKAM**

அச்சிடுபவர் : **து. ராஜ்குமார்**

Printer : **T. RAJKUMAR,**

Rukmani Offset Press

ருக்மணி ஆப்செட் பிரஸ்,
E-32, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
கோவை – 641 021.

இணையாசிரியர் : **பெ. சிதம்பரநாதன்**

தனிப் பிரதி ரூ.15/-
ஆண்டு சந்தா ரூ. 265/-
(தீபாவளி மலர் உட்பட)
ஆயுள் சந்தா ரூ. 2000/-
(10 ஆண்டுகள்)

சந்தா தொகையை "SAKTHI SUGARS LTD. A/c OMSAKTHI" என்ற பெயரில் D.D.-யாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், ஓம் சக்தி
69–ஏ, ஆரோக்கியசாமி சாலை (மேற்கு),
ஆர்.எஸ்.புரம், கோவை – 641 002
போன் : 0422–4322471, 0422–4322423
வெளியிட்டோர் : **சக்தி சுகர்ஸ் லிமிடெட்.**

E-mail : omsakthieditorial@gmail.com

சமையல்



கடலை – தினை உருண்டை

***தே**வையான பொருள்கள் :* தினை : 1 கப், நிலக்கடலை : 1 கப், வெல்லம் : பாகு வைக்கத் தேவையான அளவு, ஏலக்காய்ப் பொடி : சிறிதளவு, நெய் : சிறிதளவு.

செய்முறை :

1. ஒரு வாணலியில் தினையைப் பச்சை வாசனை போக வறுக்கவும்.
2. வெல்லத்தினைப் பாகு வைக்கவும்.
3. ஒரு பிளேட்டில் வறுத்து வைத்துள்ள தினை, நிலக்கடலை, ஏலக்காய்ப் பொடி இவற்றைப் போட்டு, அதன்மீது வெல்லப் பாகினை ஊற்றி நன்றாகக் கலந்து, கையில் சிறிது நெய்யைத் தொட்டுக் கொண்டு சிறு சிறு உருண்டைகளாகப் பிடிக்கவும்.

இப்போது சுவையான "தினை சிக்கி பால்ஸ்" தயார்.

சிறு தானியமான தினையும், நிலக்கடலையும் இருப்பதால், மிக ஆரோக்கியமான உணவு இது.

– உஷா முத்துராமன்,
மதுரை.

நல்வாழ்த்துக்களுடன்!



ஜோதி ஜோதி ஜோதி சுயஞ் ஜோதி ஜோதி ஜோதி அருள்
ஜோதி ஜோதி ஜோதி பரஞ் ஜோதி ஜோதி ஜோதி சிவம்

ஏ.பி.டி. இண்டஸ்ட்ரீஸ் லிமிடட்

சக்தி பைனான்ஸ் பில்டிங், டாக்டர் நஞ்சப்பா ரோடு,
கோயமுத்தூர் - 641 018 போன் : 0422-2233982, 2233983



விமலா ரமணி

சிறுகதை

ஊமத்தம் பூ



ஊமத்தம் பூ...? என்ன பெயரிது...? பூக்களுக்கு மொழி உண்டா? உண்டு. தன் சிரிப்பின் மூலம்... இதழ் விரிப்பின் மூலம்... முகம் காட்டிக் கதிரவனை வரவேற்கும் சூர்ய காந்தி மலருக்கு வாய் இல்லாமல் இருக்கலாம். ஆனால் மலர்ச்சியும் மணமும் மலர்களுக்கு உண்டே... ஊமத்தம் பூவும் அப்படித்தான்.

உணர்வுகள்தான் மொழியின் முதல் பாடம். கண்கள்தான் அதன் அகராதி. ஆனந்தமோ, அழுகையோ கண்ணீர்தான் அதன் மொழிபெயர்ப்பு.

“ஊமை ஊரைக் கெடுக்கும். பெருச்சாளி வீட்டைக் கெடுக்கும்” என்பது தவறாகச் சொல்லப்பட்ட பழமொழி. இதற்கு வேறு அர்த்தம் இருக்க வேண்டும்.

“மௌனமே பாஷையாய் ஒரு பாட்டுப் பாடவா?” என்றொரு திரைப்படப் பாடல் உண்டு. சூல் கொண்ட அர்த்தங்களைச் சுமந்து வரும் பாடல். மௌன ராகம். இதன் அடிப்படையில்தான் அவளை அனைவரும் “உமைச்சி” என்றே அழைத்தார்கள். அவள் குறையே அவளை அழைக்கும் விளிச்சொல் ஆனது.

இவள் தாய் பார்வதி ஊமை இல்லை. ஆனால் ஏழை. நெருப்புப் பந்தலில் ஆடுகிற மெழுகுச் சிலை.

ஆனால் மகளின் எதிர்காலத்தை நிர்ணயிக்கத் தன் நிகழ்காலத்தைப் பள்ளியறையில் செலவிடுகிற சிலரைப் போல் இல்லை இவள். உண்மையாக உழைத்தாள். காதுகேளாதவர் பள்ளியில் மகளைச் சேர்த்தாள். ஓர் அபார்ட்மெண்டில் சில வீடுகளில் வேலை செய்தாள்.

சில நாட்கள் பள்ளி லீவு நாட்களில் தன் மகளையும் வேலைக்கு அழைத்து வருவாள். வீட்டில் தனியாக இருப்பதைவிட, தன்னுடன் அவள் இருந்தால் பாதுகாப்பு என்று நினைத்தாள். பருவக் காலம் தன் மகளின் உடலில் அழகுக் கோலமிட்டதைக் கவனித்துக் கவலைப்பட்டாள்.

> “இவள் மகள்தான் ஊமை. இவள் ஊமையில்லை. இவளைக் கைது செய்யக் காவல்துறை வரும்போது, வாய் திறந்து உண்மைகளைக் கூறிக் கதறுவாள் இவள்.”

அந்த அபார்ட்மெண்டின் அத்தனை பேரும் அவளை “ஊமைச்சி” என்று அழைத்தாலும் அன்பாகப் பழகினார்கள். ஓனர் சுப்பைய்யா தாவணி வாங்கித் தந்தார். பல பேர்கள் அவ்வப்போது வேலை வாங்கினாலும் சாப்பாடாக, பணமாகத் தந்து உதவினார்கள். வாழ்க்கை ஓடியது.

“பூ மலர்ந்து கெட்டது. வாய் விரிந்து கெட்டது” என்பார்கள். ஆனால், இவள் வாய் திறக்காமலே கெட்டுப் போனதுதான் அதிசயம், அக்கிரமம்.

அன்று ஊமைச்சியைக் காணவில்லை. பார்வதி பதறிப் போனாள். பள்ளி லீவு. அவள் போகும் இடமெல்லாம் தேடிப் பார்த்தாள் பார்வதி. சில சமயம் மூன்றாவது ப்ளோரில் ஒரு வயதான அம்மாவிற்கு உதவி செய்வாள். அப்படியே சில சமயம் டி.வி. நிகழ்ச்சியில் சில பாடல் காட்சிகள் பார்ப்பாள். ஆனால்...?

எங்கும் அவள் வந்த தகவல் இல்லை. பார்வதி தேடி அலைந்தாள். சுப்பையாவிடம் ஓடினாள்.

''ஐயா, போலீசுக்குச் சொல்லுங்க ஐயா... என் மகளைக் காணோம்... ஊமைச்சி அவளால பேச முடியாது... கத்த முடியாது... எங்கே இருக் காளோ...?''

''கவலைப்படாதே... என் பிரண்ட் ஒருத்தன் போலீஸுலே இருக்கான். அவன்கிட்டே சொல் றேன். கட்டாயம் கண்டுபிடிச்சுக் கொடுத்துடு வாங்க. இதைப் பெரிசு பண்ணினா... அபார்ட் மெண்ட் பேர் கெட்டுடும்.''

இவளால் அழத்தான் முடிந்தது. அங்கு வேலை செய்யும் வேலைக்காரர்கள், இஸ்திரி போடுபவர், வாட்ச்மேன் என்று அத்தனைப் பேரிடமும் விசாரித்துப் பார்த்துவிட்டார் சுப்பையா. யாருக்கும் எந்தத் தகவலும் தெரியவில்லை.

அன்று அழுதபடி மேல்மாடி டெரஸைக் கூட்டப் போனாள் பார்வதி...

லிப்ட் ரூமில் யாரோ முனகும் சப்தம்...

''ஐயா'' இரைந்து கத்த, அனைவருமே வந் தனர்... பூட்டப்பட்டிருந்த லிப்ட் ரூம் திறக்கப்பட... அங்கே...?

அலங்கோலமான நிலையில் ஊமைச்சி கிடக்க... புதுத் தாவணி மூலையில் கசங்கிக் கிடக்க, பிரமை பிடித்த நிலையில் ஊமைச்சி... அரை மயக்கத்தில் இருந்தவளை மடியில் போட்டபடி கதறினாள் பார்வதி...

''யார்... யார் இந்த அநியாயத்தைப் பண்ணி னது...? பேச முடியாத பொண்ணைக் கெடுத்த அவனுக நாசமாப் போக...'' சுப்பைய்யா சமாதானப் படுத்தினார்.

''இதோ பார், இந்தப் பாவத்தைப் பண்ணி னவன் நல்லா இருக்க மாட்டான். நான் ஒவ் வொருவரா விசாரிக்கறேன். வாட்ச்மேன், இஸ் திரிப் போடறவன் எல்லாரையும் வேலையை விட்டுத் தூக்கறேன். உன் மக சரியானதும் அடையாளம் காட்டச் சொல்லிக் கேட்கலாம். அதுவரை நீ வேலைக்கே வர வேண்டாம். நான் பணம் கொடுக்கறேன். மகளைக் கூட்டிட்டு ஊருக்குப் போ... ஆஸ்பத்திரியிலே காட்டு. நான் பணம் தரேன்... அனாவசியமா உன் மகளோட எதிர்காலத்தை வீணாக்காதே...''

அவருக்குத் தன் பில்டிங் பெயர் கெட்டுவிடக் கூடாது என்கிற கவலை. இவளுக்கோ, கெட்டுப் போன தன் மகளை எப்படிக் கரைசேர்ப்பது என்கிற கவலை.

இவள் அழுதபடி மகளுடன் வீடு திரும்பினாள். கையில் சுப்பையா கொடுத்த பணம் கனத்தது.

அன்று...? மயக்கத்திலிருந்து கண் விழித்துத் தன் நிலை புரிந்துகொண்ட ஊமைச்சி, அழுதபடி சைகையில் விபரம் சொல்ல... சுப்பையாவைத் தேடி ஓடியே வந்தாள் பார்வதி.... வாசலில் ஷோல் டர் பேக், புது ஷூ எல்லாம் கிடக்க, உள்ளே பேச்சுச் சப்தம்...

'ஓ... சின்ன ஐயா ஊரிலே இருந்து வந்துட் டாரா...?'

வாசல் கதவு சார்த்தாமல் இருக்க, இவள் உள்ளே நுழைந்தாள்.

சுப்பையா தன் மகனிடம் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்...

''டேய், உன்னை யார் இப்போ திரும்பி வரச் சொன்னா...? அந்த ஊமைச்சிப் பொண்ணை நீங்க நாலு பேராச் சேர்ந்து கற்பழிச்சிட்டு ஓடிப் போனவன். ஏண்டாத் திரும்பி வந்தே...? காவ லுக்கு இஸ்திரிக்காரனும் வாட்ச்மேனுமா? அவனுக வாயை அடைக்க நான் பட்டபாடு...? ரெண்டு பேரையும் துரத்தி விட்டேன்.

''ஓர் அம்மா இருந்திருந்தா நீ நல்லபடி வளர்ந் திருப்பே. அந்த ஊமைப் பெண் நிலைமை சரி யாகி, உன்னை அடையாளம் காட்டினா... உன் னோட என் பேரும் இல்லை சேர்ந்து கெட்டுப் போகும்...?''

கேட்டுக் கொண்டிருந்த பார்வதியின் ரத்தம் கொதித்தது. சுப்பையாவின் அதிகப்படி இரக்கத் தின் காரணம் புரிந்தது. பில்டிங் பெயரும் இவன் பெயரும்தான் கெடக் கூடாதாம். இவள் மகள் கெட்டே போகலாமாம். என்ன கொடுமை இது...?

தன் மகனைக் காப்பாற்ற இவன் ஆடும் கபட நாடகம்... இதுபோன்ற தகப்பன்களால்தான் ஓர் அயோக்கியப் பரம்பரையே உருவாகிறது... தான் காதலித்த பெண் மீது ஆசிட் ஊற்றுவது... சின் னஞ்சிறு குழந்தைகளைக் கற்பழிப்பது... இது போல் ஊனமுற்றவர்களை அவர்களின் இயலாமை யைப் பயன்படுத்திக் கூட்டுக் கற்பழிப்பது... இவர்கள் கொடூர மிருகங்கள்... இவர்கள் இந்த உலகில் வாழ அருகதையற்றவர்கள்...

வாசத் தோட்டத்தில் கிடந்த மண்வெட்டியை எடுத்தாள் இவள். வெறி பிடித்தவள் போல் கத்திக் கொண்டு உள்ளே ஓடினாள்.

''டேய் படுபாவி... நீ நல்லா இருப்பியா...? ஓர் ஊமைப் பெண்ணை எத்தனை பேர்டா சேர்ந்துக் கற்பழிப்பீங்க...? நீங்க எல்லாம் தெரு நாயைவிடக் கேவலமானவங்க...'' கத்தியபடி சுப்பையாவின் மகன் மீது பாய்கிறாள்.

இவள் மகள்தான் ஊமை. இவள் ஊமை யில்லை. இவளைக் கைது செய்யக் காவல்துறை



வரும்போது, வாய் திறந்து உண்மைகளைக் கூறிக் கதறுவாள் இவள்.

ரத்த வெள்ளத்தில் கிடக்கும் தன் மகளைப் பார்த்து சுப்பையா திகைக்கிறார்.

கீழே விழுந்த வேகத்தில் உயிர்பெற்ற அலை பேசி திடீரென்று நிசப்தம் கிழித்துப் பாடுகிறது...

“இந்த மண்ணுக்குள் உறங்கும் மல்லிகைத் தோட்டம்...”

இவள் பாய்ந்த வேகத்தில் இடையில் இருந்த டீப்பாயின் மீது வைக்கப்பட்டிருந்த கண்ணாடி ப்ளவர் வாஸ் கீழே விழுந்து உடைய... அதில் செருகப்பட்டிருந்த பூக்களின் தண்டுகள் சிதற... அதில் ஒரு தண்டு... ஊமத்தம் பூவின் தண்டு... ரத்தத்தில் நனைந்து சிவப்பாக நிறம் மாறிக் கொண்டிருக்கிறது...

யார் இந்த சாமியோ?

எழுத்தாளர் ராஜேஷ்குமார் கோவைக்குப் புகழ் சேர்த்த படைப்பாளிகளின் வரிசையில் மணப்பவர். அவருடைய படைப்பு களுக்கு இலக்கிய அங்கீகாரமில்லை என்று கோவை ஞானி கூற, அதை ராஜேஷ்குமார் மறுக்க, இருவருக்கும் நடந்த உரையாடல் சுவையானது.

கிரைம் நாவல் என்றால் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, சூது, வஞ்சகம் முதலிய மர்மக் குற்றங்கள் நிறைந்தது. அத னால் அது இலக்கியமாகாது என்றார் கோவை ஞானி.

அதற்குப் பதிலளித்த ராஜேஷ்குமார் “இந்திய இதிகாசமான மகாபாரதத்தில் கிரைம் நாவலில் உள்ள கொலை, கொள்ளை, கற் பழிப்பு முயற்சி, சூது, வஞ்சகம், ஏமாற்றுதல், போட்டி, பொறாமை முதலிய அனைத்துமே உள்ளனவே. அப்படியானால் மகாபாரதம் ஒரு கிரைம் நாவலா?” என்றார்.

ஞானி இதற்குப் பதில் சொன்னதாகவே தெரியவில்லை. முடிந்தால் வாசகர்கள் ராஜேஷ்குமாருக்குப் பதில் கூறலாம்.

அவர் எழுதிய ‘**என்னை நான் சந்தித் தேன்**’ என்ற அவருடைய சமீபத்திய நூலில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் பற்றிய முக்கியமான செய்தி ஒன்று சென்ற ஜூலை மாத ‘அமுதசுரபி’ இதழில் வெளியானது. இன்னொரு முக்கியச் செய்தியை ‘ஓம் சக்தி’ வாசகர்களுக்கு இந்த இதழில் வழங்குகிறோம்.

– இ.ஆர்.

நான் கிரைம் நாவல்களை எழுதினாலும் எனக்குள்ளே இருக்கும் ஆன்மிக உணர்வுகளின் சதவீதம் சற்று அதிகம்தான். இது என்னோடு நெருங்கிப் பழகியவர்க்கு மட்டுமே தெரியும்.

வாரத்தில் ஒவ்வொரு நாளும் கோவையில் உள்ள ஒவ்வொரு கோயிலுக்கும் முறை வைத்துக் கொண்டு வழிபட்ட நாட்களும் உண்டு. ஒரு கட்டத்தில் எழுத்துப் பணியில் கூடுதல் சுமையால் கோயில்களுக்குப் போகும் நாட்களைக் குறைத்துக் கொண்டேன். இறைசக்தி என்பது கோயில்களில் மட்டுமில்லை. ஒரு சில நல்ல மனிதர்களின் உள்ளங்களிலும் இருக்கிறது என்ற உண்மையும் அப்போது பிடிபட்டது.

ராமகிருஷ்ணர், விவேகானந்தர், அரவிந்த அன்னை முதலிய மகான்களின் பொன்மொழி களையெல்லாம் படிக்க நேர்ந்தபோது, அவர்கள் எல்லோரும் ஒரே ஓர் உண்மையைத் திரும்பத் திரும்பச் சொல்லியிருப்பதைக் கண்டுபிடித்தேன்.

எவர் மனதையும் புண்படுத்தாமல் தானும் சந்தோஷமாய் இருந்து, மற்றவர்களையும் சந்தோஷப்படுத்துகிறவர்களை, இறைவன் நெருங்கி வருவான். இப்படிப்பட்ட நபர்கள் ஒரு காலகட்டத்தில் மக்களால் தெய்வத்தின் அம்ச மாகவே பார்க்கப்படுவார்கள். அப்படிப்பட்ட நபர் களை மக்கள் மகான் என்ற பெயரில் அழைப் பார்கள். அவர்களின் ஆசிகள் யாருக்குக் கிடைக் கிறதோ, அவர்கள் பாக்கியசாலிகள்.

மக்கள் மத்தியில் மரியாதை பெற்றிருந்த பெரியோர்களைத் தூரத்திலிருந்து பார்க்கும்போது குறிஞ்சிப் பூக்களாய்த் தெரிந்தவர்கள், பக்கத்தில் போன பின்புதான் நெருஞ்சி முட்களாய்க் காட்சி யளித்தார்கள்.

சில வருடங்களுக்கு முன்பு, காலை பத்து மணியளவில் விலையுயர்ந்த கார் ஒன்று, என் வீட்டு முன்பாய் வந்து நிற்க, காவி அணிந்த நடுத்தர வயது நபர் ஒருவர் காரிலிருந்து இறங்கி உள்ளே வந்தார்.

வெளியே புறப்பட்டுப்போகத் தயாராக இருந்த நான், அவரைப் பார்த்ததும் அப்படியே நின்றேன். அவர் என்னைக் கனிவோடு பார்த்து "எழுத்தாளர் ராஜேஷ்குமார்தானே?" எனக் கேட்டார்.

"ஆமா..." என்றேன்.

"உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்."

"அப்படியா, நீங்க...?"

நான் இப்படிக் கேட்டதும் அன்றைக்கு மதிப்பும் மரியாதையும் பெற்றிருந்த ஓர் இளவயதுச் சாமியாரின் பெயரைச் சொல்லி, "நான் அவருடைய சீடன். கோவையில் அவருடைய அமைப்புக்கு நான்தான் தலைவர்" என்றார்.

என்னால் வியப்பைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

தமிழ்நாட்டில் இருந்த பெரிய பெரிய வி.ஐ.பி.க்கள் எல்லாம் அவரைச் சந்தித்து ஆசி பெறக் காத்திருந்த காலம் அது. ஆனால் அவருடைய சீடர் ஒருவர் என்னைப் பார்க்க வீட்டுக்கு வந்தது எனக்கு அதிர்ச்சி கலந்த மகிழ்ச்சி.

அவரை வரவேற்று உள்ளே அழைத்துப் போனேன். "என்ன விஷயமாய் வந்திருக்கீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா?" என்றேன்.

"தாராளமாய்..." என்று சொன்னவர், புன்னகை தவழும் முகத்தோடு, "சுவாமிகள் அடுத்த வாரம் கோவை வர்றார். கொடீசியா வளாகத்துல மாபெரும் 'தியான அரங்கம்' ஒண்ணை நடத்தப் போறார். அது சமயம் அவர் கோவையில் இருக்கிற 100 வி.ஐ.பி.க்களைத் தனித்தனியே சந்தித்து ஆசி வழங்க விருப்பம் தெரிவித்திருக்கிறார். அவர் தேர்வு செய்த வி.ஐ.பி.க்களில் நீங்களும் ஒருவர்."

நான் சிலிர்த்துப் போனேன். "நீங்க சொல்றது நிஜமா?" என்றேன். அவர் சிரித்தார்.

"இதுல பொய் சொல்ல என்ன இருக்கு...? வி.ஐ.பி. யார்னு பணத்தை வெச்சு சுவாமிகள் முடிவு பண்ணுவது கிடையாது. ஒரு துறையில் யார்க்குப் பேரும் புகழும் இருக்கோ, அவங்களைத்தான் செலக்ட் பண்ணுவார். நீங்க எழுதின கதைகளைக்கூட சுவாமிகள் படிச்சிருக்கார். அதனால் தான் உங்களைப் பார்த்துப் பேசணும்னு சொன்னார். இந்தாங்க வி.ஐ.பி. பாஸ். வர்ற ஞாயிற்றுக் கிழமை காலை பதினோரு மணிக்கு 'தியான அரங்கம்' ஆரம்பம். அந்த நிகழ்ச்சி ஆரம்பிக்கிறதுக்கு முன்னாடி நீங்க சுவாமிகளைப் பார்த்துடணும். அதாவது காலை 10 மணிக்கெல்லாம் நீங்க கொடீசியா வளாகத்துல இருக்கணும்."

"இருப்பேன்... இப்படியொரு வாய்ப்புக் கிடைக்க எனக்குக் கொடுத்து வெச்சிருக்கணுமே...!"



சுவாமிகளின் சீடர் என் வீட்டில் சுவாமிகளின் அருமை பெருமைகளையெல்லாம் நெஞ்சுருகப் பேசிவிட்டுப் போனார்.

அடுத்த வார ஞாயிற்றுக் கிழமை காலை ஒன்பது மணிக்கெல்லாம் கொடீசியா வளாகத்துக்குப் புறப்பட்டேன். நான் கிளம்பிய சிறிது நேரத்திற்கெல்லாம் எனக்கு போன். சுவாமிகளின் சீடர்தான் பேசினார்.

"என்ன, சுவாமிகளைப் பார்க்க ரெடியாயிட்டீங்களா?"

“புறப்பட்டாச்சு...! பத்து மணிக்கெல்லாம் அங்கே இருப்பேன்!”

“ரொம்ப நல்லது... வாங்க. உங்களுக்காக நான் அரங்க வாசலிலேயே வெயிட் பண்ணிக் கிட்டிருப்பேன். காரை நிறுத்திட்டு லெஃப்ட் சைடில் இருக்கிற வராந்தாப் பக்கம் வாங்க... நான் அங்கே இருப்பேன்!”

நான் சுவாமிகளின் சீடரைப் பார்த்தபோது பதற்றத்தோடு காணப்பட்டார்.

“சீக்கிரம் வாங்கோ... சுவாமிகள் உங்களுக் காகத்தான் வெயிட் பண்ணிக்கிட்டிருக்கார்.”

எனக்கு ஆச்சர்யமாய் இருந்தது. “சுவாமிகள் எனக்காகக் காத்துக்கிட்டிருக்காரா?”

சீடரோடு நடந்தேன். ஜன்னல் வழியே அரங்கம் தெரிய மக்கள் நிரம்பி வழிந்தார்கள். முன் வரிசையில் கோவையின் பிரபல தொழில் அதிபர்கள், புகழ் பெற்ற டாக்டர்கள், சமூக சேவை செய்து பத்மஸ்ரீ விருது பெற்ற ஆண், பெண் பிரபலங்கள் என்று என் பார்வைக்குத் தட்டுப் பட்டுக்கொண்டே வந்தார்கள்.

இவ்வளவு பேர்க்கும் கிடைக்காத ஒரு பேறு எனக்குக் கிடைக்கப் போவதை நினைத்துப் பெரு மிதப்பட்டுக்கொண்டே அந்தச் சீடரோடு நடந்தேன்.

முதல் மாடி ஏறினோம். ஏறும்போதே பூக் களின் வாசனை. கூடவே சாம்பிராணி மணந்தது. வராந்தாவில் முதல் அறை, கதவுக்கு முன்பாய் இரண்டு சீடர்கள் வழிவிட்டுநிற்க உள்ளே போனோம்.

அறை பிரகாசமான மின் விளக்குகளின் காரணமாய் அதிக வெளிச்சத்தோடு தெரிந்தது. அறையின் நடுவே உயர்த்திப் போடப்பட்ட மேடை யில் நடுநாயகமாய்ச் சம்மணம் போட்டு உட் கார்ந்திருந்தார் சுவாமிகள்.

முப்பது வயதைத் தாண்டாத உடம்பு, பிடரி வழிய வழிய அடர்த்தியான தலைமுடி, வசீகரச் சிரிப்போடு கூடிய முகம்.

“வாங்க... ராஜேஷ்குமார்...!” மேடையினின் றும் இறங்கி வந்த சுவாமிகளை நான் வணங்கி நின்றேன். அவர் என்னைத் தழுவிக் கொண்டு “ஆனந்தமாய் இருங்கள்!” என்று வாழ்த்தினார். ருத்ராட்ச மாலையொன்றை என் கழுத்தில் அணி வித்து, தான் எழுதிய நூல்களை எனக்குப் பரிசாய்க் கொடுத்தார். பிறகு தனக்குப் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு, நிறைய நாள் பழகிய ஒரு நபர் போலப் பேச ஆரம்பித்தார்.

“ஆயிரத்துக்கும் மேலே நாவல்கள் எழுதி யிருப்பதாய்க் கேள்விப்பட்டேன். ஒரு டி.வி. பேட்டி யிலயும்கூடச் சொல்லியிருக்கீங்க. இது எப்படிச் சாத்தியம்?”

“கடவுளின் கருணைதான் காரணம்!” என்றேன்.

“உங்க நாவல்களை எல்லாரும் விரும்பிப் படிக்கக் காரணம், உங்க எழுத்து நடைதான். நான் சில நாவல்களைப் படிச்சுப் பார்த்ததில் அந்த உண்மை எனக்குப் பிடிபட்டது!”

“உங்க பாராட்டுக்கு நன்றி!”

“நன்றி மட்டும் போதாது. நான் உங்க கிட்டேயிருந்து ஓர் உதவியை எதிர்பார்க்கிறேன். செய்வீங்களா?”

“என்னால முடிஞ்சா கண்டிப்பா செய்யறேன்...!”

“உங்களால கண்டிப்பா முடியும். நான் இப்போ ரெண்டு புக் இங்கிலீஷ்ல எழுதியிருக்கேன். நீங்க அதைத் தமிழ்ப்படுத்தி உங்க எழுத்து நடையில் எழுதித் தர முடியுமா?”

“மன்னிக்கணும், எனக்கு அதுக்கு நேரம் இல்லை. பத்திரிகைகளுக்கு எழுதவே நேரம் சரியா இருக்கு. அதுவுமில்லாம உங்களுடைய ஆன்மிகம் சம்பந்தப்பட்ட புத்தகங்கள், எனக்கு அது சரியாய் வருமான்னு தெரியலை.”

“கண்டிப்பாய் சரியாய் வரும்... அடுத்த வாரம் என்னோட சிஷ்யர் ஒருவர் நான் எழுதின புத்தகங் களோடு உங்களை வந்து சந்திப்பார். நீங்க எந்த மறுப்பும் சொல்லாமே இதை ஒரு இறைப்பணியாய் நினைச்சி செஞ்சு தரணும்...”

என்னால் மறுத்துப் பேச இயலவில்லை. தலையை ஆட்டிவிட்டு அவர் கொடுத்த ஆப்பி ளோடு அறையினின்றும் வெளிப்பட்டேன்.

அடுத்த வாரம் அந்தச் சீடருக்காக நான் வீட் டில் காத்துக் கொண்டிருந்தேன். அவர் வரவில்லை.

அவர் வராதது, எனக்குச் சந்தோஷத்தைக் கொடுத்தாலும், அவர் ஏன் வரவில்லை என்கிற கேள்வி மனதைக் குடைந்து கொண்டே இருந்தது.

அந்தக் கேள்விக்கான பதில் அன்று மாலை நான் ‘சன் டி.வி.’யைப் பார்த்துக் கொண்டிருந்த போது கிடைத்தது!”

பின்குறிப்பு : சன் டி.வி.யில் வெளியான அந்த சுவாமி பற்றிய செய்தி தொலைக்காட்சி நேயர்களை அதிர்ச்சி யடையச் செய்தது. காரணம், அந்தக் காட்சிகள் முழுவதும் அந்த சுவாமிகளின் அந்தரங்க லீலைகள். அவர் யாரோ? எந்த ஊரோ? என்ன பேரோ?

●



ஈரோடு தமிழன்பன்

கனவில்லாத தூக்கம் வேண்டும்!

சத்தமில்லாத
இசைவேண்டும் தாயே
சத்தமில்லாத
பூப்போல நான் பூக்க மாட்டேனா?
சத்தமில்லாத
பூப்போல நான் உதிரமாட்டேனா?

மரத்தை வளர்க்கும்
வேர்கள் குரல் கேட்கவில்லையே?

காயுள் முதிரும்
கனியின்
ஓசை கேட்கவில்லையே?

அர்த்தம் பிறக்கும்
ஓசை
வார்த்தை கேட்டதுண்டா?


நாள்கள் நகரும்
அதிர்வைக்
காலம் கேட்டதுண்டா?

பூமி சுழலும் போது
மவுனம்
என்ன பாடல் பாடும்?

இரவும் பகலும்
தினமும்
என்ன தாளம் போடும்?

கனவில்லாத
தூக்கம் வேண்டும் தாயே!
கனவில்லாத
ஓடையாக மாற மாட்டேனா?
கடல் தேடி
இளைக்காமல் வாழ மாட்டேனா?

கட்டுரை



சென்ற இதழ் தொடர்ச்சி...

கோயில்கள், பிரச்சனைகள், தீர்வுகள்



திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோவில்

நான் எந்தக் கோவிலுக்கு வந்தாலும், வருகிற ஒவ்வொரு தடவையும் பூரண கும்ப மரியாதை செய்ய வேண்டாம் என்று உத்தரவிட்டேன்.

“தென்காசி விசுவநாதர் கோவிலின் இடிந்த கோபுரத்தை யார் கட்டுகிறார்களோ, அவர்கள் பாதங்களை என் தலையில் வைத்து வணங்குவேன்” என்று விக்கிரம பாண்டிய மன்னன் கூறிய வாசகங்களை அந்தக் கோவில் கல்வெட்டில் செதுக்கியும், யாரும் கட்டாத அந்தக் கோபுரத்தை எம்.ஜி.ஆர். ஆட்சியில் கட்டியும் முடித்தோம்.

திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் கோவில் சன்னதி வரை காரில் திருப்பதிக்குப் போவது போல் தார்ச்சாலை போடப்பட்டதும் எம்.ஜி.ஆர். ஆட்சியில்தான்.

தலைநகர் சென்னையில் திருவல்லிக்கேணியில் பார்த்தசாரதி கோவில் எதிரில் உள்ள திருக்குளம் பொதுக்கழிப்பறையாக இருந்ததைப் பார்வையிட்ட முதலமைச்சர் எம்.ஜி.ஆர். உடனே புதுப்பிக்கச் சொல்ல, ராட்சதக் குழாய்களை இறக்கி, அடித்தளம் முதல் மேல் கரைகள் வரை புதுப்பித்து, தூய நீரால் நிரப்பிடச் செய்து, தாமரை மலர்கள் மலர, தெய்வ உற்சவமும், தேரோட்டமும் விமரிசையாக நடைபெற்றது.

அபூர்வ ஆன்மிக ஜோதி மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார், தாம் தனிப்பட்ட முறையில் உருவாக்கிய பெண்கள் போற்றி வழிபடும் புகழ்மிக்க ஆதிபராசக்தி திருக்கோவில், தியாகராயநகர் அருகில் மகாலிங்கபுரத்தில் எழுப்பப்பட்ட ஐயப்பன் கோவில் முதலிய தனியார் கோவில்களின் நிர்வாகத்தைத் தமிழ்நாடு அரசு எடுத்துக்கொள்ளும் அச்சத்தை நீக்கி, அவர்கள் தன்னிச்சையாக இயங்கிட விட்டுவிட்டோம்.

மறைந்த பெரிய சங்கராச்சாரியார் வேண்டுகோளின்படி, சென்னை கடற்கரையோரம் பெசன்ட் நகரில் ஒரே இடத்தில் அறுபடை முருகன் கோவில்களின் மாடலில் கருங்கல்லில் அறுபடை முருகன் கோவில்கள் கட்டப்பெற்றன.

மத்துவாச்சார்ய மகான் ராகவேந்திரர் அவதரித்த என்னுடைய தொகுதி புவனகிரியில் அவருக்கு அவதார நினைவாலயம் எழுப்பப்பட்டது.

வைதிக முறைப்படி அம்மை வார்த்தவர்களைச் சமயபுரம் மாரியம்மன்,



வி.வே. சுவாமிநாதன்

இந்து சமய அறநிலையத்துறை மேனாள் அமைச்சர்

திருச்செந்தூர் முருகன் கோவில்களில் நோய் தீர்க்கப் பிரார்த்தித்துக்கொண்டு அங்கு அவர்களைப் படுக்க வைத்திருந்தார்கள். இதனால், கோவில்கள் மருத்துவமனைகளாக மாறும் நிலையைத் தவிர்க்க, அந்தப் பழக்கத்தைத் தடை செய்து நிறுத்தினோம்.

தஞ்சை பெருவுடையார் கோவிலிலிருந்த, அதைக் கட்டிய மாமன்னன் முதலாம் இராசராசன், அவனுடைய பட்டத்துராணி உலகமாதேவி ஆகியோரின் உலோகத்திலான சிலைகள் திருடப்பட்டு, குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் உள்ள மிருணாளினி சாராபாய் அருங்காட்சியகத்தில் இருப்பதை அறிந்து, அவற்றை மீட்க என்னால் புகார் செய்யப்பட்டது. என் போலீஸ் புகாரின் பேரில் 2019–இல் அச்சிலைகள் மீட்கப்பட்டு, மீண்டும் கோவிலுக்குக் கொண்டுவரப்பட்டன.

தென்பாண்டி நாட்டில் தாமிரபரணி ஆற்றுக்கு இரு கரைகளிலும் ஒவ்வொரு தமிழரும் சைவர், வைணவர் பேதமின்றிப் பார்க்க வேண்டிய நவக்கிரகங்களைப் பிரதிபலிக்கும் நவதிருப்பதிக் கோவில்கள் கலையழகு மிக்க பொக்கிஷங்களாகப் போற்றிக் காப்பாற்றப்பட வேண்டியவை. அவை அழிந்துவிடாமல் காப்பாற்றும் பொருட்டு, திருச்செந்தூர் கோவில் உபரி வருமானத்தைக் கொண்டு இந்தக் கோவில்களை நிர்வகிக்க ஏற்பாடு செய்தேன். உண்மையில் இவை எல்லோரா, அஜந்தா குகை ஓவியங்களைவிடப் பிரம்மாண்டமானவை.

திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு, சந்தனக் காப்புக்குத் தமிழ்நாட்டில் விளையும் உலகப் புகழ் பெற்ற சந்தன மரக்கட்டைகளையும், சுதையில் ஆன பெருமாள்களுக்குத் தைலக்காப்புக்குத் துகில் மரக்கட்டைகளையும் தங்கு தடையின்றிப் பெறுவதற்கு உத்தரவிடப்பட்டது.

'இசையின் அரசி' என்று அன்றைய இந்தியப் பிரதமர் பண்டிட் ஜவகர்லால் நேரு அவர்களால் பெரிதும் புகழப்பட்டு, மதிக்கப்பட்டவர் தேனினும் இனிய குரல் வளம் கொண்ட திருமதி. எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள்.

தாத்தா நேருவைப் போன்றே பேரன் திரு. ராஜீவ்காந்தி அவர்கள் இந்தியப் பிரதமராக இருந்த காலத்தில், "திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் இந்திய நாட்டின் அரிய கலைப் பொக்கிஷம். அவரைக் கண் போல் பாதுகாக்க வேண்டும். அதனால் அவர்களது கௌரவத்திற்குத் தக்கவாறு ஓர் அழகிய இல்லத்தை திருமதி. எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களின் பெயருக்கு வாங்கப்பட்டு, அவரிகளிடம் ஒப்படைக்க வேண்டும்" என்று அன்றைய தமிழக முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களுக்குக் கடிதம் எழுதினார். மேலும் அந்த வீட்டின் மதிப்புத் தொகையில் பாதித் தொகையைத் தானும், மீதித் தொகையை எம்.ஜி.ஆரும் பொறுப்பேற்றுத் தந்துவிடுவதாகவும் கூறியிருந்தார்.



எம்.எஸ்.சுப்புலட்சுமி – சதாசிவம்

எம்.ஜி.ஆர். அவர்கள், வீடு வாங்கும் பொறுப்பினை என்னிடம் விட்டார். நான் தி.நகர் திருமலைப்பிள்ளை சாலை அருகில் எல்லா வகையிலும் பொருத்தமான ஓர் அழகிய பங்களாவைப் பார்த்துப் பேசி முடித்துவிட்டு, அதன் புகைப்



படங்களுடன் திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி, திரு. சதாசிவம் தம்பதியர் அப்போது குடியிருந்த நுங்கம்பாக்கம் இல்லம் சென்று அவற்றைக் காட்டினேன்.

ஆனால், அவர்கள் இருவரும் “மக்கள் எங்கள் மீது வைத்திருக்கும் அளப்பரிய அன்பையும், மரியாதையையுமே நாங்கள் பெறுதற்கரிய பெரும் பாக்கியமாக, பொக்கிஷமாகக் கருதுகிறோம். அதுவே போதும்” என்று கூறி, வீட்டைப் பெற மறுத்துவிட்டனர்.

கல்கி சதாசிவம் அவர்களின் 94–ஆவது பிறந்தநாள் விழாவில் வெளியிடப்பட்ட “குறையொன்றுமில்லை” என்ற மலரில் இந்தச் செய்தி நன்றியறிதலுடன் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்ணா, கலைஞர் போன்றே எம்.ஜி.ஆரும் இசை ஞானம் கொண்டவர். அவர் நடிக்கும் திரைப்படங்களில் இடம்பெறும் பாடல்களின் மெட்டுகள், அந்தப் பாடல்களின் வரிகள், கருத்துக்கள் இவற்றில் மிகுந்த கவனம் மேற்கொள்வார். அவர் மனதுக்குத் திருப்தியாகும்வரை விடமாட்டார். அதனாலேயே அவரது திரைப் படப்பாடல்கள் எல்லாம் பெரும் ஹிட்டாகின.



பாலமுரளி கிருஷ்ணா

திருவையாறு தியாகராஜர் இயற்றியிருந்த ஸ்ரீராமபிரான் மீதான தெலுங்குக் கீர்த்தனைகளை எம்.ஜி.ஆர். விரும்பிக் கேட்பார். அந்தக் கீர்த்தனைகள் தமிழில் அந்த அர்த்தமும், பக்தி பாவனையும் சிதையாமல் மொழிபெயர்க்கப்பட்டால், தமிழர்கள் அந்தப் பாடல்களின் பொருள் உணர்ந்து ரசித்து மகிழ்ந்திட வேண்டுமென்று பெரிதும் விரும்பினார். அதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறு என்னைப் பணித்தார்.

நானும் இசையுலகைச் சேர்ந்த பாண்டித்தியம் பெற்ற சில பிரபலமான அன்பர்களை அணுகினேன். திருமதி அவயாம்பிகை அவர்கள் தியாகராஜரின் தெலுங்குக் கீர்த்தனைகளில் 12 பாடல்களைத் தேர்வு செய்து, பொருள் மாறாமல், பக்தி மணம் குன்றாமல் தமிழாக்கம் செய்து தந்தார்கள்.

டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா அவர்கள் அந்தப் பாடல்களை நயம்படப் பாடினார். அவை 12 பாடல்கள் கொண்ட ஓர் ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்டன. இதையறிந்து எம்.ஜி.ஆர். மிகவும் மகிழ்ந்ததோடல்லாமல், ஒலி நாடாக்கள் வெளியீட்டு விழாவிற்குத் தானே தலைமையேற்பதாகவும் அறிவித்தார்.

4.8.1987 அன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற அந்த விழாவிற்கு எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையேற்க, நான் வரவேற்புரை கூறினேன். கர்நாடக இசைப் பேரறிஞர் திரு. செம்மங்குடி சீனிவாச ஐயர், தமிழ் ஒலிநாடாக்களை வெளியிட, திருவாளர்கள் சாருஹாசன், சுகாசினி, சித்ரா ஆகியோர் பெற்றுக்கொண்டனர். தமிழ் வளர்ச்சி உயர்நிலைக்குழுத் தலைவர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

●

LED, கலர் டி.வி, ரெஃப்ரிஜிரேட்டர், ஏர்கன்டிஷ்னர், வாஷிங் மெஷின், மற்றும் அனைத்து தரமான வீட்டு உபயோக பொருட்களை குறைந்த விலையில் வாங்க சிறந்த இடம்.

- Easy Finance Options BAJAJ Finance
- Exchange offer
- Gift Coupons Available
- *Free gift with every purchase
- *Free delivery with in city Limits
- Open on Sundays

வந்து பாருங்கள்! வாங்கி மகிழுங்கள்!!

NM



LG	SAMSUNG	SONY	PHILIPS	VIDEOCON	ONIDA
Godrej	Whirlpool	SIEMENS	IFB		Prestige
ELGI ULTRA	Preethi	V-GUARD	BOSCH	micromax nothing like anything	
VOLTAS LIMITED	Butterfly®	TATA Sky	CG Crompton Greaves	USHA	HAVELLS
BPL EMERGENCY LIGHT	Preethi INDUCTION COOK TOP	EUREKA FORBES Your friend for life		CASCADE	VENUS® WATER HEATER

*For purchase above RS.8000/- condition apply

நா. மகாலிங்கம் & கம்பெனி

68, Dr, Nanjappa Road, Near Central Bus Stand
Coimbatore - 641 018.
Ph: 2239834 / 2239841 / 2239803 / 2239811

D by sr printers 9843110277

Registered with Registrar of Newspapers for India No. 42582/83
Licensed to post without Pre-payment under Regn. No. TN/WR/CBE/016/WPP/2018-20

Date of Publication 28.8.2020

Regd.No.CB/016/2018-20

OM SAKTHI - SEPTEMBER - 2020